ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES

எட்டுத் தொகையில் ஒன்றாகிய

ஐங்குறுநூறு

மூலமும் விளக்கவுரையும்

Part III
முல்லை

28340

உரையாசிரியர்:
சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான்,
திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்
வெளியிடப்பெற்றது.
1958.

Annamalai University Tamil Series

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய

ஐங்குறுநூறு

மூலமும் விளக்கவுரையும்

மூன்றாவது தொகுதி

முல்லை

ஆசிரியர்

சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான்,

திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்,

தமிழ்த்துறைப் பேராசிரியர்,

தியாகராசர் கல்லூரி, மதுரை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்

வெளியிடப்பெற்றது.

1958.

Printed at
The C. M. V. PRESS
197, East Veli Street
Madurai

உள்ளுறை.

		பக்கம்
1.	புறவுரை ...	i—iv
2.	உரையாக்கத்துக்குத் துணைபுரிந்த நூல்களின் நிரல் ...	v
3.	முல்லை — பேயனுர்	
	41. செவிலி கூற்றுப்பத்து ...	௯௧௮
	42. கிழவன் பருவம் பாராட்டுப்பத்து ...	௯௨௪
	43. விரவுப்பத்து ...	௯௪௭
	44. புறவணிப்பத்து ...	௯௬௧
	45. பாசறைப்பத்து ...	௯௬௯
	46. பருவம் கண்டு கிழத்தியுரைத்த பத்து	௯௯௰
	47. தோழி வற்புறுத்த பத்து ...	௧௦௦௫
	48. பாணன் பத்து ...	௧௦௨௧
	49. தேர்வியங்கொண்ட பத்து ...	௧௦௪௫
	50. வரவுச் சிறப்புரைத்த பத்து ...	௧௦௯௰
4.	அருஞ்சொல் அகரநிரல் ...	1073
5.	அரும்பொருள் அகரநிரல் ...	1266
6.	திருத்தப்பிற் சேர்க்கை ...	i—iii

புறவுரை

மருதம் முதல் முல்லை யீருக ஐந்து நூறு பாக்களை யுடைய இவ்வைங்குறுநூறு நல்லிசைச் சான்றோர் ஐவரால் ஆக்கப்பெற்றது. இதனை,

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதும் குறிஞ்சி கபிலர் — கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலை ஓது ஐங்குறு நூறு.

என்ற பழைய வெண்பா தொகுத்துக்கூறுகிறது. இந்த ஐந்து நூறுகளையும் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; தொகுப்பித்த வள்ளல் கோச்சேரமான் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன்.

இவ் வைங்குறுநூற்றில் உள்ள பாட்டுக்கள் யாவும் தமிழ்க்கே சிறப்பாக வுரிய பொருளிலக்கணப் பகுதியில் காணப்படும் அகப்பொருள் நலங்களையே உரைக்கின்றன. அவை களவும் கற்பும் என்ற இருவகை ஒழுக்கங்கள் எனப் படும். ஒழுக்கமாவது மக்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்தற் பொருட்டுச் செய்வனவும் தவிர்வனவும் இவை யெனச் சான்றோர்கள் கண்டு உணர்ந்து உரைத்த அறமாகும். அறங்கூறும் பெருந்தோன்றலாகிய திருவள்ளுவப் பெருந் தகை, களவு என்பது தவிரத் தகுவ தென்பது பற்றிக் கள்ளாமை என எதிர்மறைத் தலைப்பிட்டு அதன் தீமையை விரித்துரைத்தனர்; அற்றாக, அக்களவினைக் கொள்ளத்தக்க ஒழுக்கமாகப் பொருளிலக்கணம் கூறுவது யாங்ஙனம் என ஐயுறுவோரும் உண்டு. ஐயம் அறுப்பது குறித்து அகல வுரை பல வழங்கினோரும் உண்டு.

ஒருவர்க்கு உரிய பொருளை அவர் அறியாதவாறு கவர்ந்து கொள்வது களவு என்பது. வாழ்க்கைத் துணையை நாடிநிற்கும் இளமைச் செல்விக் கண், இனம் பெருக்கும் உணர்ச்சி, உடலூறாய் நின்று, உயிரறிவைத் தன்னடிப் படுத்தி, உடலின் புறத்தே ஒளியும் அழகும் உறுவித்து நிற்பது உயிர்நூல் காட்டும் உண்மை. இப்பெற்றித் தாய இளமையில் பெண்மகள் ஒருத்தியின் உள்ளத்தை அவளை யறியாமல் ஓர் ஆண்மகனும், ஓர் ஆண்மகன் உள்ளத்தை அவனை அறியாமல் ஒரு பெண்மகளும் கவர்ந்து கொள்ளும் செயல் இங்கே களவு என்று குறிக்கப்படுகிறது. நிறை யிழந்த சீவகன், "வெஞ்சின வேழமுண்ட வெள்ளிலின் வெறியமாக, நெஞ்சமும் நிறையும் நீல நெடுங்கணால் கவர்ந்த கள்வி" என்பதாகத் திருத்தக்க தேவரும், "பெண்வழி நலனொடும் பிறந்த நாணொடும், எண்வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலேன், மண்வழி நடந்து அடிவருந்தப் போனவன், கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்" என நிறையிழந்த சீதை கூறுவதாகக் கம்பரும் உரைப்பன மேற்கூறிய பொருளை வற்புறுத்தும்.

தவிரத் தகுவதாகிய களவு, பொருளைக் கவர்ந்தார்க்கும் கவரப்பட்டார்க்கும் இடையே வெறுப்பும் பகையும் விளைத்துத் துன்பத்தைப் பயப்பது போலாது இவ்வுள்ளக் களவு இருவர்க்கும் இடையே உவப்பும் உழுவலன்பும் விளைத்து இன்பமே பயத்தலின் இக்களவு அறமாகவும் ஒழுக்கமாகவும் கருதப்படுகிறது. இக்களவை மேனிகழும் இல்லறமாகிய கற்பறத்துக்கு வழிநிலையெனப் பழந்தமிழ்ச் சான்றோர் கொண்டனர். உள்ளத்தால் காதலுறவு பூண்ட ஒருவனும் ஒருத்தியும் கற்பின்கண் உலகவர் அறியத் தமது காதலைப் புலப்படுத்தி ஒழுகுவர்; களவின்கண் அதனைத் தம்மைப் பெற்றோரும் அறியாதவாறு மறைத்து ஒழுகுதலால், அது களவொழுக்கம் எனப்படுகிறது.

களவுவழித் தோன்றும் கற்புமணம் போல வடநூலாரிடையும் ஒரு வகை மணம் உண்டு; அதனைக் காந்தருவம் என்பர். ஒருவரையொருவர் தனித்துக்கண்டு காதலுறவு கொள்ளும் களவு காந்தருவம் போல்வது என்பர். காந்தருவ மணத்தார், ஒருவரையொருவர் கண்டவுடனே கருத்து ஒருமித்துக் காமம் கையிகந்து கூடி மகப் பெற்றுக்கொள்வதும் உண்டு. சுருங்கச்சொல்லின், காந்தருவத்தில் கழிகாம விலங்குணர்ச்சி வீறுகொண்டு விளங்கும். களவின்கண் அறவுணர்வு மேம்பட்டு விளங்க விலங்குணர்ச்சி ஒடுங்கிக் கிடக்கும்; அதனால் அக்காலத்தே மகப்பேற்றுக்குரிய மெய்யுறு புணர்ச்சியோ, மகப்பெறுதலோ இல்லை. மகப்பெறு கூட்டமும் மகப்பேறும் கற்பொழுக்கமாகும்; ஆகவே, களவின்கண் கற்பிற்போல அறிவும் நிறையும் மக்கட்பண்பும் முற்பட்டு நிற்றல் இன்றியமையாதாயிற்று. சகுந்தலையும் துட்யந்தனும் தனித்துக்கண்டு கழிகாமத்துக்கு இரையாகிக் கூடி மகப்பெற்றது காந்தருவத்துக்கு நேரிய எடுத்துக்காட்டு. ஆயிரக்கணக்கில் காணப்படும் பழைய தமிழ் அகப்பொருட் பாட்டுக்களில் களவின்கண் மகப்பேறு நிகழ்ந்ததாக இதுகாறும் ஒன்றேனும் கூறியதில்லை. அதற்குரிய பழைய இலக்கணநூல்களும் ஒரு சிறு குறிப்பும் காட்டவில்லை.

கற்பின்கண் பரத்தையிற் பிரிவு என்பது ஒருநிகழ்ச்சி; ஒரு காலத்தே அப்பரத்தையர் இருப்பு ஒரு குற்றமாகக் கருதப்படாமல் இருந்தது; இது முன்னுரைக்கண் விளக்கப்பட்டுள்ளது. பொருள் வினை கல்வி ஆகியவை காரணமாகப் பிரிதல் சிறப்புடைய ஆண்மகனுக்குக் கடனாதல் போலப் பரத்தையரிற் பிரிவு கடமையன்று. ஓரொருகால் காதல் சிறப்பது குறித்துத் தலைமகன் பரத்தையரிற் பிரிந்தான் போலக் கூறும் மரபு கற்பனையுலகில் உண்டு. அக்கற்பனை

தலைமகனது தலைமை மாண்புக்கு இழுக்காகாது எனக் கொள்க.

இனி இந் நூல் உரையினையும் முன்னுரையையும் நோக்குமிடத்து உரையில் இறைச்சிப்பொருள் காட்டியது வியப்புப்பயக்கும். முன்னுரைக்கண் காணப்படும் ஆராய்ச்சி, உரை முடிந்த பல்லாண்டுகட்குப் பின்பு நிகழ்ந்த தென்பது அறிஞர் உலகுக்கு இதனால் தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

முன்னைத் தொகுதிகளின் முன்னுரையில் குறித்த வண்ணம் அருஞ்சொற்பொருள் அகரநிரல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

முதல் இரண்டு தொகுதிகளையும் வரவேற்றுச் சிறப் பித்த தமிழ் அறிஞர் உலகு இதனையும் நன்குவரவேற்கு மென்றும் துணியுடையேன்.

இதனை நன்முறையில் வெளியிடும் பணிமேற்கொண்டு தமிழுலகிற்கு உதவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு என்மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

"அவ்வை", காந்திநகர்,
மதுரை, 20—10—58.

ஔவை. சு. துரைசாமி.

உரையாக்கத்துக்குத் துணைபுரிந்த நூல்களின் நிரல்.

அகநானூறு	...	(அகம்)
அகப்பொருள் விளக்கம்	...	(அ. பொ. வி)
ஆசாரக்கோவை	...	(ஆசா)
இறையனார் அகப்பொருள் உரை	...	(இ. அ. பொ)
ஐங்குறுநூறு	...	(ஐங்)
ஐந்திணையைம்பது	...	(ஐந்)
கம்பராமாயணம்	...	(கம்ப)
கலித்தொகை	...	(கலி)
கார் நாற்பது	...	(கார்)
குறிஞ்சிப்பாட்டு	...	(குறிஞ்சி)
குறுந்தொகை	...	(குறுந்)
சிலப்பதிகாரம்	...	(சிலப்)
சிவஞானமாபாடியம்	...	(சிவ. பா)
சிற்றட்டகம்	...	(சிற்றட்ட)
சிறுபஞ்சமூலம்	...	(சிறுபஞ்ச)
சிறு பாணாற்றுப்படை	...	(சிறுபாண்)
சீவக சிந்தாமணி	...	(சீவக)
சுந்தரர் தேவாரம்	...	(சுந். தே)
சூளாமணி	...	(சூளா)
தக்கயாகப்பரணி	...	(தக்க)
தணிகைப் புராணம்	...	(தணிக்கை)
தமிழ் நாவலர் சரிதை	...	(த. நா. ச.)
திணைமாலை நூற்றைம்பது	...	(திணைமா. 150)
திணைமொழி ஐம்பது	...	(திணை. 50)
திருக்குறள்	...	(குறள்)
திருக்கோவையார்	...	(கோவை)

திருஞானசம்பந்தர் தேவாரம்	...	(ஞானசம்.)
திருநாவுக்கரசர் தேவாரம்	...	(நாவர.)
திருமந்திரம்	...	(திருமந்)
தொல்காப்பியம் எழுத்து	...	இளம்பூரணர்
,, ,,	...	நச்சினார்க்கினியர்
,, சொல்	...	இளம்பூரணர்
,, ,,	...	சேனாவரையர்
,, ,,	...	தெய்வச் சிலையார்
,, ,,	...	நச்சினார்க்கினியர்
,, பொருள்	...	இளம்பூரணர்
		நாவலர் சோம சுந்தர பாரதியார்
,, ,,	...	நச்சினார்க்கினியர்
,, ,,	...	பேராசிரியர்
நற்றிணை	...	(நற்)
நாலடியார்	...	(நாலடி)
நான்மணிக்கடிகை	...	(நான்மணி)
நெடுநல்வாடை	...	(நெடுநல்)
பட்டினப்பாலை	...	(பட்டினம்)
பண்டை நாளைச் சேரமன்னர்	...	(பண். சே. ம)
பதிற்றுப்பத்து	...	(பதிற்)
பரிபாடல்	...	(பரி)
பழமொழி நானூறு	...	(பழ)
புறநானூறு	...	(புறம்)
புறப்பொருள் வெண்பா மாலை	...	(பு. வே. மா)
பெரிய திருமொழி	...	(பெரி. திரு)
பெருங்கதை	...	(பெருங்)
பெருந்தொகை	...	(பெருந்)
பெரும் பாணாற்றுப்படை	...	(பெரும்)
பொருநராற்றுப்படை	...	(பொருந)

மணிமேகலை	...	(மணி)
மதுரைக்காஞ்சி	...	(மதுரை)
மலைபடுகடாம்	...	(மலைபடு)
முருகாற்றுப் படை	...	(முருகு)
முல்லைப் பாட்டு	...	(முல்லை)
யாப்பருங்கல விருத்தி	...	(யா. வி)

Author of the Periplus of the Erythrean sea —
(Translation by M. Crindle)

Annual Reports on Madras Epigraphy (A. R)

Comparative Grammar of the Dravidian Languages —
Rev. Caldwell

Don Juan — Lord Byron

Early History of India — V. Smith

Epigraphica Indica - vol. XVII.

Eugenics and Sex Relation for men and women —
Dr. M. H. Frank

Foreign Notices of South India — K. A. Nilakanta Sastri

History of the Tamils — P. T. S. Ayyangar

Mruga Pakshi Sastra — Hamsa Deva

Pandya Kingdom — K. A. Nilakanta Sastri

Pudukkottah State Inscriptions

South Indian Inscriptions Vol. II, V, VII (S. I. I.)

Travancore Archeologicol Series. (T. A. S.)

உ

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

ஆசிரியர் பேயனார் பாடிய

முல்லை.

அகனைந்திணைக்கண் ஒன்றாகிய முல்லை முல்லைத் திணை எனவும் வழங்கும். ஆசிரியர் **தொல்காப்பியனார்** இதனை "மாயோன் மேய காடுறை யுலகம்" என்பர். எனவே, பல்வகை மரங்களும் செடி கொடிகளும் புல் வகைகளும் புதர்களும் செறிந்து இருள்படப் பொதுளி யுள்ள காடும் காடுசேர்ந்த நிலப்பகுதியும் முல்லை என்ப தாம். இம் முல்லைத் திணைக் குரிய சான்றோர் செய்யுட் களில் பெரும் பொழுதாகிய காரும் சிறுபொழுதாகிய மாலைப்போதும் இத்திணைநிலைக் குரிய காலமாகக் குறிக்கப் படும். இந் நிலத்தில் வாழும் மக்களை, ஆயர், கோவலர் என்று கூறுவர். அகனைந்திணைக்கென நிலத்தைக் குறிஞ்சி முதலாக வகுத்துக் கொண்டனராயினும், பாலையை நில மாகக் கொள்ளாமை முன்னர்க் கண்டாம்; ஆகவே, சிறப் புடைய நிலம் நான்காதல் பெற்றாம். அவற்றுள்ளும் நிலவளம் சிறந்தவை குறிஞ்சியும் முல்லையும் மருதமுமே யாகும். நெய்தல் நீர்வளத்தாற் சிறந்தது. இம் மூன்ற னுள் முல்லை ஏனையிரண்டற்கும் இடை நிற்றலின் முல்லை நிலத்து ஆயரை **இடையர்** என்றும், முல்லை நிலத்து வாழும் ஆனிரைகளின் பாற்பயன் ஏனை எல்லா நிலத் தவர்க்கும் பொதுவாய்ப் பயன்படும் சிறப்புப் பற்றி அதனை நல்கும் ஆயரைப் **பொதுவர்** என்றும் குறிப்பதுண்டு. "மாசுண் உடுக்கை மடிவாய் இடையன், சிறுதலை ஆய

மொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலம்[1]" என்றும், "பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண் மார்[2]" என்றும் சான்றோர் உரைப்பது காண்க. இவர்கள் வாழும் ஊர்கள், ஆய்ப்பாடி, மாறன்பாடி எனவும், தெளிச்சேரி நடுவாச்சேரி எனவும், குராப்பள்ளி சிக்கற் பள்ளி எனவும், பாடி, சேரி, பள்ளி என்று முடியும் பெயர் களைப் பெற்றிருக்கும்.

ஆயர்கள், வரகு கொள் முதிரை முதலியவற்றையும் கவலைக்கிழங்கு முதலிய கிழங்கு வகைகளையும் உண்பர். முல்லைக்காடுகளில் மானும் புல்வாயும் முயலும் பெரிதும் வாழ்கின்றன. ஊரகத்தும் புறத்தும் காடுகளிலும் கொன்றை குருந்து முதலிய மரங்களும் முல்லை முதலிய கொடி வகைகளும் காயா முதலிய செடி வகைகளும் களவுப்புதல் முதலிய புதர் வகைகளும் பல்கியிருக்கும். அவற்றிடையே கானக்கோழிகள் மேயும். ஆனிரை மேய்த்தலும் பாற்பயன் கோடலும் பொதுவாக நிகழும் தொழிலாயினும், முல்லைக் கொல்லைகளை உழுது, வரகு துவரை முதலியவற்றை விளைவித்தலும் முல்லை நிலத்து முதுமக்களின் தொழில்வகையாம். காட்டாறுகளும் பொய்கைகளும் முல்லைக்கண் நீர்நிலைகள். முல்லை பிடவு தளவு காயா முதலிய பூக்கள் ஆயர் விரும்பிக் கண்ணியும் மாலையும் தொடுத்து அணியும் பூவகை. இந்நில முற்றும் பெரும்பாலும் செம்மண் நிலமாதலின், அந்நிலத்துக் கேற்ப அவர்கள் துவராடை அணிவது இயல்பு; "அந்துவ ராடைப் பொதுவன்[3]"எனச் சான்றோர் உரைப்பது காண்க. முல்லையாழும் முல்லைப் பண்ணுகிய சாதாரியும் ஏறுகோட் பறையும் இசைத்துறைக் குரியவாய்க் கொள்வர். வேய், ஆம்பல், கொன்றை முதலியவற்ருல் ஆகிய குழலை இசைத்து இனிய இசையின்பம் துய்ப்பர்.

இந்நூற்கண் முல்லைத் திணைக்குரிய பாட்டுக்கள் நூறும் பாடிய ஆசிரியர் **பேயனார்** என்பவராவர். அவர் பாடியனவாக இந்நூறுமே யன்றி அகத்திலும் குறுந் தொகையிலும் பாட்டுக்கள் சிலவுள்ளன.

---

1. புறம். 54. 2. கலி. 103. 3. ஷை. 102.

பேயனாரது ஊர் இன்னது எனத்தெரிந்திலது. இடைக் காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் மக்களுள் **உழான்** என்னும் பெயருடையார் தொண்டைநாட்டிலும், **மன்றுடி** யென்னும் பெயருடையார் கொங்கு நாட்டிலும் பெருகி யிருப்பது போலப் **பேயன்** என்ற பெயருடையார் சேர நாட்டில் காணப்படுகின்றனர். திருநெல்வேலியிலுள்ள நெல்லையப்பர் கோயில் கல்வெட்டுக்களில் **சேந்தப் பிரான் பேயனான யாதவராயன்**[1] என்பான் காணப்படு கின்றான்; அவன் தாழைக்குடி என்னும் ஊரினன்; இதனை "மலைமண்டலத்துத் தாழைக்குடி" என்று கல்வெட்டுக் கூறுகிறது. குறும்பர்நாடு வட்டத்திலுள்ள முட்டுங்கல் கல்வெட்டில் **பேயனான கண்டன் நீலன்** என்றும், ஏர்நாடு வட்டத்து வண்டூர்க் கற்குகைக் கல்வெட்டில் **பேயனான தாமத்தன்** என்றும் வருவன மேலேகொண்ட கருத்துக்குச் சான்று பகர்கின்றன. இவற்றால் இம்முல்லைப் பாட்டுக்களைப் பாடிய ஆசிரியர் **பேயனார்** சேர நாட்டினர் எனக் கோடற்கு இடமுண்டாகிறது.

சேரநாட்டில் சிறைக்கல் வட்டத்துப் பையனூரை அப்பகுதியினர் முன்னாளில் **பேயனூர்** என வழங்கின ரென்று அங்குள்ளோரர் கூறுதல் ஈண்டுக் கருதத்தக்கது. சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடிய கண்ணனார் பெயரால் **கண்ணனூர்** என்றும், **கண்ணன் பாட் டோலை** என்றும் ஊர்கள் தோன்றியிருப்பதும், ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கைபாடினியார் நச் செள்ளையார் பெயரால் **காக்கையூர்** என்று ஊர் தோன்றி யிருப்பதும் காணுமிடத்து இப்பையனூரான பண்டைப் பேயனூர் இப்பேயனாரைச் சிறப்பித்தற்குத் தோன்றியிருக் கலாம் எனக் கருதுவது மிகையாகாது.

ஆசிரியர் பேயனார் முல்லைத்திணையைப் பாடுவதில் மிக்க சிறப்புடையவர். இவர் பாடியனவாக ஏனைத்தொகை நூல்களுட் காணப்படும் பாட்டுக்களும் முல்லையையே

1. S. I. I. Vol. V. No. 416; A. R. No. 127 of 1894.

சிறப்பிக்கின்றன. இவர் பிறந்து வளர்ந்து புலமை சிறந்த நிலம் முல்லையாதலின் முல்லைப்பாட்டுக்கள் இவர்க்கு மிக இனியவகையில் அமைந்துள்ளன.

முல்லைத்திணைக்குக் கார்காலமும் மாலைப்போதும் சிறந்த முதற்பொருள்கள் என்பது முன்பே கூறப்பட்டது. இக்காலத்தே கானம் வழங்கும் காட்சியைத் தெரிவித்து அவற்றிடையே தலைமக்களது கற்புவாழ்வை நிறுத்தி, அதன்கண் அவர்பால் நிகழும் நினைவையும் சொல்லையும் எடுத்துக்காட்டி இன்புறுத்தற்கண் இவரது புலமை நலம் இப்பகுதியில் ஈடுபடுகின்றது.

கார்காலத்தில் வானமெங்கும் கார்முகில் பரந்து இருள்படச் செறிந்து பெருமழை பெய்கிறது; மலைமுகட்டிலும் பக்கத்திலும் பெய்தநீர் அருவியாய் வீழ்ந்து புது நீராய்ப்பெருகிக் கானமெங்கும் பாய்ந்து நிலத்தைக் குளிர்விப்ப,;வேனில் வெம்மையால் வெதும்பி வாடிய மரஞ் செடிகள் கார்மழையால் வளம்பெறுகின்றன. பள்ளங்களில் நீர் நிற்கிறது. புல்வகைகள் பசுமையுடன் இனிய காட்சி வழங்குகின்றன. மாலைப்போதில் புதர்தொறும் முல்லை, தளவு, பிடவம், தோன்றி முதலியன பூத்துக் கானத்தை அழகு செய்கின்றன. "காயா கொன்றை நெய்தல் முல்லை, போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப் பூவணி கொண்டன்றால் புறவே[1]" என்று இக் காட்சியைச் சொல்லோவியம் செய்கின்றார். "அப்பூக்களின் தேனையுண்டு வண்டினம் பாடுகின்றது.[2]" "இருள் மாலைப்போதில் பள்ளங்களிலிருந்து நுணலும் தேரையும் ஒலிக்கின்றன.[3]" "புற்றின்கண்வாழும் ஈயல்கள் நாள் வெயிற் காலையில் வெளிப்போந்து பறந்து மடிகின்றன.[4]" "வானம்பாடி மழைத்துளி யுண்டு மகிழ்வதும் களிறுகள் பிடிதழீஇ உலவுவதும்[5]" "மயில்கள் தோகையை விரித்து ஆடுவதும்[6]" "மானினம் கன்றொடுகூடி உலாவி இன்புறு

1. ஐங். 412. 2. ஷை. 416. 3. ஷை. 453. 4. ஷை. 497.
5. ஷை. 416. 6. ஷை. 431.

வதும்[1]" பிறவும், காண்பார் கண்ணுக்குச் சிறந்த காட்சி நல்குகின்றன். கொன்றை குருந்து முதலிய மரங்கள் பொன்னெனப் பூத்துப் பொலிந்து நிற்பதால், "கானவர் அவற்றின் பூக்களால் கண்ணி தொடுத்துத் தலையிற் சூடிக் கொள்கின்றனர்.[2]"

காதலருடைய காதல் வாழ்வில் புணர்விடைப் பிறக்கும் புத்தின்பமும், பிரிவின்கண் உண்டாகும் பிரிவுத் துன்பமும் ஆசிரியர் பேயனார் பாட்டில் அழகு பெறுகின்றன. மனைவியொடு கூடி மகிழ்ந்துறையும் காதலன், கார்கவின் கொண்ட கானக் காட்சியைப் "புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகளக், கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி மெல்லியல் அரிவை கண்டிகும், மல்லலாகிய மணங் கமழ் புறவே[3]" என்றும், கானத்தையே முன்னிலைப்படுத்தி, "பொன்னென மலர்ந்த கொன்றை மணியென, தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு நன்னலம் எய்தினை, புறவே[4]" என்றும் தலைமகட்குக் காட்டி மகிழ்விக்கின்றான்.

காதல் வாழ்வில் கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இன்புற்று உறையும் நலத்தைக் கண்டோர் கூற்றில் வைத்து, "இனிது மன்ற அவர் கிடக்கை முனிவின்றி, நீனிற வியலகம் கவைஇய, ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே" என்று பாராட்டுவதும், வினைகுறித்துப் பிரிந்துறையும் காதலன், வினைமுடிந்ததும், காதலுணர்வு உண்ணின்று உந்துதலால், பாகனை நோக்கி, "கார்மழை தலைஇக் காடு கவின்கொண்டன்று பொழுது பாடுசிறந்து, கடிய கடவுமதி பாக[5]" என்று உரைப்பதும், கார்ப்பருவத்தில் கானம் தழைத்து அழகு திகழக் கண்ட தலைமகள் காதலன் தன்னை நினைந்து வருந்துவனோ என எண்ணி அதனால் மேற்கொண்ட வினை தாழ்க்குமோ என்று அஞ்சி உரைப்பதும் இன்பந்தருவனவாம். இவற்றின் நலங்களும் ஏனைய காட்சிகளும் இனிவரும் பாட்டுக்களிற் காணலாம்.

---

1. ஐங். 434. 2. ௸. 439. 3. ௸. 414.
4. ௸ 420. 5. ௸. 484.

41. செவிலி கூற்றுப்பத்து.

இது மணஞ்செய்த பின்னர் மணமனை காணச் சென்ற செவிலி அம்மண மக்களின் வாழ்க்கை நலமும், காதலும், பிறவுமாகிய சிறப்புக்கண்டு மகிழ்ந்த உள்ளத்தளாய்ப் போந்து நற்றாய்க்குக் கூறுதலே பொருளாக வந்த பாட்டுக் களின் தொகுதியாகலின் இப்பெயர்த்தாயிற்று.

தலைமகளை ஈன்று புறந்தரும் நெறியில் நற்றாய் சிறந் தவள் எனினும், அவளை வளர்த்து நினைவு சொல் செயல் ஆகிய மூன்றன் பயிற்சியால் தலைமைப் பண்புடையளாய்ச் செய்வதில் செவிலி தலைசிறந்தவளாவள். இளமைப் போதில் நடையும் மொழியும் கற்பித்துத் தலைமகளின் மென்னடையும் இன்மொழியும் கண்டு இன்புற்ற செவிலி, விளையாடும் செவ்வியில் தன் மகளை அவட்கு உயிரொத்த தோழியாக்கி அவளது தலைமைப்பண்புகள் மாண்புறு விப்பள். தலைமகள் பேதைப்பருவம் கடந்து, காமச் செவ்வி நிகழும் பருவமெய்துங்கால், தோழி அவட்கு உடன் விளையாடும் ஆயமகளாதலேயன்றி அறிவும் அறமும் அறிந்துரைக்கும் உயிர்த்துணைவியுமாகலின், அப் போது இருவர் செயல்வகையும் கண்காணித்து வேண்டும் துணையைச் செய்வது செவிலியது கடனாகும்.

இனி, தலைமகள் களவொழுக்கம் மேற்கொண்டு தோழி துணைசெய்யக் கற்பறம் வழுவாது ஒழுகுமிடத்து, தாய் தந்தை தன்னையர் முதலியோர், தலைவியது காதல் நெறி அறியாது, அவள் கருத்துக்கு ஒவ்வாத மணவினை யைக் கருதுவராயின், தோழிவாயிலாகத் தலைமகளின் காதலொழுக்கத்தை உணர்ந்து கொள்வதில் முன்னிற் பவள் இச்செவிலியே யாவள். பெருநாணத்தால் தலைவி தன் காதற் களவொழுக்கத்தை உரைத்தற்கு நாணுவ

ளாகலின் அதனைத் தோழியால் அறியும் செவிலி, தலைவியது கற்பறம் கெடாமை நினைந்து, பெற்ற தாய்க்கு மெல்லவுணர்த்திச் சிறப்பிப்பதுபற்றிச் செவிலியே தலைவியது கற்பைக் காக்கும் சீரிய தாயாய் விளங்குகிருள். இது குறித்தே ஆசிரியர் **தொல்காப்பியனுர்,** "தாயெனப் படுவோள் செவிலியாகும்" என்று எடுத்து மொழிகின்றுர்.

இவ்வண்ணம் தலைவிபால் தோன்றிய கற்பறம், அவளுடைய பெற்றேரது அறியாமையால் கெடாதவாறு பேணிப் பிறங்குவிக்கும் செவிலி, தலைவி கற்புநெறி வழுவாது, தான் காதலித்த தலைமகனைக் கரணமொடு நிகழும் வதுவையிற் கூடி மனையறம் புரிவதைக் காண்பதில் வேட்கைமிகுவள். தலைவியுள்ளத்தில் தான் வித்திய கற்பறம், களவின்கண் முளைத்து வளர்ந்து, கற்பின்கண் மனையறமாய் மாண்புற்று, அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்துபுறந்தருதல் முதலிய செயல்வகைகளால் தழைத்து, அன்பு அரும்பி, அருள் மலர்ந்து, மக்கட்பேருகிய இனிய தீங்கனி பயந்து சிறப்பது செவிலிக்குப் பேராவியற்கைப் பேருவகையாகிறது.

தலைவி மனையறம் தொடங்கியதுமுதல் மக்கட்பேற்றுல் அவளது வாழ்வு மாண்புறுவது ஈருக அவ்வப்போது சென்று அவள் மேற்கொண்ட வாழ்வின் பயனும் பண்புமாகிய அன்பு அறம் ஆகியவற்றை நேரிற்கண்டு போந்து தலைவியின் நற்றுய்க்கும் தமர்க்கும் எடுத்துரைத்து அவளது ஒழுகலாற்றின் தலைமையைப் பாராட்டுவள்.

தலைமக்களது கற்பறத்துக்கு உரிய இடம் முல்லையாதலின், இம் முல்லைப்பாட்டின் தொடக்கத்தே செவிலி நற்றுய்க்குரைக்கும் இப்பகுதியினை ஆசிரியர் **பேயனுர்** உரைக்கின்றுர்.

401. மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வ னடுவண ளைக நன்றும்
இனிது மன்றவவர் கிடக்கை முனிவின்று
நீனிற வியலகங் கவைஇய
ஈனு மும்பரும் பெறலருங் குரைத்தே.

இது, கடிமனைச் சென்று வந்த செவிலி உவந்த வுள்ளத்தளாய் நற்றாய்க்குச் சொல்லியது.

உரை : அன்னாய், தன் மறிக்கன்று இடையிலே கிடப்ப, இருமருங்கும் மானும் பிணையும் கிடந்ததுபோலப் புதல்வன் நடுவிலே விளங்க, அவ்விருவரும் கிடந்தகிடக்கை தெளிவாகப் பெரிதும் இன்பந்தருவதாகும்; இடையறவின்றி நீலநிறமுடைய அகன்ற வானத்தாற் சூழப்பட்ட இவ்வுலகும் இதன் மேலுள்ளதாகிய வானுலகும் ஆகிய இரண்டுலகின் கண்ணும் அவ்வின்பம் பெறுதலரிதாகலான் எ. று.

மறி, மான்கன்று. **மான்பிணை** உம்மைத்தொகை. மான் என்றது, கலையாகிய ஆணின் மேற்று. "சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை, வலந்திரி மருப்பி னன்ன இரலையொடு, அலங்குசினைக் குருந்தின் அல்கு நிழல் வதிய [1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. முனிவின்று கவைஇய என இயையும். முனிதல், வெறுத்தல்; ஈண்டு இடையறவுபடுதல். இன்றி என்பது செய்யுளாகலின் **இன்று** என நின்றது. **வியலகம்,** வானம். நீலம், கடை குறைந்து நீனிறமென வந்தது. **கவைஇய,** கவவு என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சவினை. "கமழுஉவிளங் காரம் கவைஇய மார்பு [2]" என்றார் பிறரும். குரை, அசை நிலை.

---

1. அகம். 304. 2. புறம் 19.

கிடக்கை நன்றும் மன்ற இனிது, ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்து ஆகலான் என முடிக்க. **ஈன்**, இவ் விடம். **ஆன்**, ஈன் என்பவை அவ்விடம் இவ்விடம் என்ற சுட்டுப்பொருளில் வருவன.

மக்கட் பேற்றினைப்போல் தமக்கு உறுதி பயக்கும் பேறுகள் பிற இன்மையின், சிறப்புடைய புதல்வர்ப் பேற்றுற் சிறந்து, பிரியாக் காதலாற் பிணிப்புண்டு நீக்க மின்றிக் கிடத்தலைக் காணுந்தோறும் செவிலிக்கு இன்பம் மிகுதலின், **நன்றும் இனிதுமன்ற அவர் கிடக்கை** என்றும், பிரிவு புணர்வுகளால் முறையே துன்பமும் இன்பமும் நல்குவது பற்றி இவ்வுலகில் பெறலரிது என்றற்கு **நீனிற வியலகம் கவைஇய ஈனும்** என்றும், மேலுலகில் மெய் யுற்றுக் கூடி நுகரும் இன்பம் இல்லாமையின் **உம்பரும் பெறலருங் குரைத்து** என்றும் கூறினுள். "தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல், தாமரைக் கண்ணுன் உலகு [1]" என்றுர் பிறரும். "விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும், அரிதுபெறு சிறப்பின் புத்தேள்நாடும், இரண்டும் தூக்கின் சீர்சாலாவே [2]" எனத் தலைமகன் கூறு வதும் ஈண்டு நினைவுகூரத் தக்கது.

"மக்களை யில்லோர்க்குப் பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே [3]" என்பதனுல் புதல்வர்ப்பேறு சிறப்புடைத் தாதல் உணர்க. **நீனிற வியலகம் கவைஇய ஈனும்** என்றுள், அப்பெற்றித் தாயினும், அவ்வானத்தாற் பயனின்று என்ப தற்கு; "விரிநீர் வியனுலகம் [4]" என்புழிப்போல.

"நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும், செவி லிக்கு உரிய வாகும் என்ப [5]" என்பதனுள் உவந்து கூறற்கு இதனைக் காட்டுவர் **நச்சினர்க்கினியர்**. (க)

1. குறள் 1103. 2. குறுந். 101. 3. புறம். 188.
4. குறள். 13. 5. தொல். பொ. 153.

402. புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை பாணர்
நரம்புளர் முரற்கை போல
இனிதா லம்ம பண்புமா ருடைத்தே.

இதுவுமது.

உரை : தன் புதல்வனை அணைத்துக் கிடந்த தாயின் புறத்தைத் தழுவி, அவள் கணவன் விருப்பமுடையனாய் வதிந்து கிடந்த கிடக்கை, பாணர்களின் யாழின் நரம்பிடை எழும் இசைபோல இனிமைத் தாதலேயன்றி நற்பண்பினை யும் உடைத்து எ. று.

வதிதல், இருத்தல். படுக்கைக்கண், கால்களை நீட்டி அணைமேற் சாய்ந்து கிடந்தநிலை, **வதிந்த கிடக்கை** எனப் படுகிறது. **முரற்கை,** ஈண்டு முரலுதற் பொருட்டாய இசை யின் மேற்று; தாளவறுதியுமாம், "இன்புறு முரற்கை நும்பாட்டு விருப்பாக [1]" என்றாற் போல. துள்ளலோசை யினையும் முரற்கை என்ப. **பண்புமார் உடைத்தே** என்புழி ஆர், அசைநிலை. "அசைநிலைக் கிளவி யாகுவழி அறிதல் [2]" என்பர் ஆசிரியர்.

முயக்கத்தை யின்றியமையாத பெருங்காதலனாய் ஒழுகுகின்றான் என்பாள், **தாய்புற முயங்கிய நசையினன்** என்றும், நரம்புளர் முரற்கை கேட்டார்க் கெல்லாம் இன்பம் பயத்தற்போலக் கண்டார்க்கு இன்பம் பயப்பது பற்றி **முரற்கைபோல** என்றும், கேட்டபின்னரும் உள்ளிய விடத்தும் அது தன் இனிமைப்பண்பின் நீங்காமை போல, அவர்தம் கிடக்கை நினைக்குந்தொறும் இன்பம் பயக்கும் பண்பினை உடைத் தென்பாள், **பண்புமா ருடைத்தே** என்றும் கூறினாள். இசைதோன்றும் பொழுதே

1. மலைபடு. 390. 2. தொல். சொல். 273.

உடன்தோன்றி, அது நிகழுமிடமெல்லாம் நீங்காது நிலவுதலின் **பண்**ணென்றார். பாணர், நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து "இன்புறு புணர்ச்சி நுகரும்[1]" எனப் பிரிண்டுக் கூறுதல் காண்க. (உ)

403. புணர்ந்த காதலியிற் புதல்வன் றலையும்
அமர்ந்த வுள்ளம் பெரிதா கின்றே
அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
முறுவ லின்னகை பயிற்றிச்
சிறுதே ருருட்டுந் தளர்நடை கண்டே.

இதுவுமது.

உரை: பரந்த பெருஞ் சிறப்பினையுடைய தந்தையின் பெயரையுடைய தன்மகன், முறுவல் விளங்கும் இனிய புன்னகையைச் செய்து சிறுதே ருருட்டித் தளர்ந்த நடையினனாய்ச் செல்லுதல் கண்டு, தலைமகற்குத் தான் காதலித்துப் புணர்ந்த மனைவிமாட்டுளதாகிய அன்புபோல் அம் மகனிடை மேவிய அன்பும் பெரிதாய் இராநின்றது எ. று.

இன், உவமப்பொருட்டு. **உள்ளம்,** ஆகுபெயர். தந்தையின்பெயரைத் தன் மகற்கிட்டு வழங்குதல் மரபாகலின், **தந்தை பெயரன்** என்றார்; "முதல்வன் பெரும் பெயர் முறையுளிப் பெற்ற, புதல்வற் புல்லிப் பொய்த் துயில் துஞ்சும்[2]" எனவும், "மேதக்க எந்தை பெயரனை யாங்கொள்வேம்[3]" எனவும் வருதல் காண்க. புகழ்பரவி நிலைபெறும் இடம் விரிந்த உலகமாதல் பற்றி, **அகன் பெருஞ் சிறப்பின் தந்தை** என்றும் கூறினார்.

களவின்கண் தலைமகள்பால் உண்டாகிய காதல் முறுகிப் பெருகி, இடையே தோன்றிய இடையீடுகளாலும் பலவகை முட்டுக்களாலும் தளராது அவனை இன்றியமை

1. ஐங். 407.　　2. கலி. 75.　　3. ௸. 81.

யானும் ஒழுகியது நினைந்தாட்குத் தலைமகனது உள்ளம் தலைவியின் மகன்பால் சென்றது வியப்புத் தந்தமையின், **புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும் அமர்ந்த உள்ளம் பெரிதாகின்று** என்றும், தலைவன் குடிக்கு முன்னோனாகிய அவன் தந்தையின் பெயரைத் தாங்கித் தன்குடியை விளக்கம் செய்வதுபற்றிப் புதல்வனை, **அகன்பெருஞ் சிறப்பின் தந்தைபெயரன்** என்றும் கூறினாள். "குடிக்கு விளக்காகிய புதல்வன் [1]" என்று பிறரும் கூறுவது காண்க.

கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும், தளர்நடை காண்டல் இனிது [2]" என்பவாகலின், **தளர் நடைகண்டே** என்றாள். குடிக்கு விளக்காகிய மகன் பிறந்துழியும், மனைக்கு விளக்காகிய அவள் மாண்பு மறவாமையின், **புணர்ந்த காதலியின்** என்றாள் என்றுமாம். (௩)

404. *வாணுத லரிவை மகன்முலை யூட்டத்*
தானவள் சிறுபுறங் கவையின னன்றும்
நறும்பூந் தண்புற வணிந்த
குறும்பல் பொறைய நாடுகிழ வோனே.

இதுவுமது.

உரை: நறிய பூக்களால் தண்ணிதாய முல்லை நிலத்தால் அழகுபெற்ற குறுகிய பலவாகிய குன்றுகளையுடைய நாட்டுக்குரிய தலைமகன் ஒளிபொருந்திய நுதலினையுடைய அரிவையாகிய தன் மனைவி மகனுக்கு முலையிற் பாலூட்டத் தான் அவளது முதுகின்புறத்தே நன்கு தழுவிக் கிடந்தனன் எ. று.

முலை, ஆகுபெயர். **சிறுபுறம்**, முதுகு; **பொறை**, குன்று. "குறும்பொறை யயலது நெடுந்தாள் வேங்கை [3]" என்று சான்றோர் கூறுதல் காண்க. கிழவோன் என்பதனை

1. அகம். 184. 2. கலி. 60. 3. அகம். 368.

"ஆவோ வர்கும் பெயருமா ருளவே[1]" என்புழி, "உம்மை யெச்சவும்மை யாகலான், அகரம் ஓகாரமாய்த் திரியும் பெயருமுள" என அமைப்பர் **தெய்வச் சிலையார்.**

இது மருவுதல் உரைத்தல். தலைமகள் தன் உள்ளத்திற் பெருகிய அன்பால் தான்பெற்ற மகனுக்குப் பாலூட்டுங்கால், மகனது முகப்பொலிவும் முறுவல் இன்னகையும் கண்டு கிளர்ச்சி மிக்கு விளங்குதலின் **வாணுதல் அரிவை** என்றும், தன் மனைக்கு விளக்காகியதே யன்றித் தன் மகற்குத் தாயாகி மாண்புறுவது கண்ட தலைமகன் பெருகிய காதலால், அவள் சிறுபுறம் தழுவி இன்பம் சிறக்குமாறு தோன்ற, **தான் அவள் சிறுபுறம் கவையினன் நன்றும்** என்றும் செவிலி கூறினள். "மெல்ல என் மகன்வயிற் பெயர் தந்தேனே அது கண்டு, யாமும் காதலம் அவற்கெனச் சாஅய்ச், சிறுபுறம் கவையினனுக[2]" எனத் தலைமகள் தலைமகன் தன் சிறுபுறம் தழுவியதைச் சிறப்பித்து உரைத்தல் காண்க. **தண்புற வணிந்த குறும்பல் பொறை** என்றது தலைவியது கற்புச்சிறப்பும் தலைவனது சலியாக் காதல் மாண்பும் சுட்டி நின்றன.

"நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும், செவிலிக் குரியவையாகும்[3]" என்பதனுள் இதனை உவந்து கூறிய செவிலி கூற்றுக்கு எடுத்துக் காட்டுவர் **நச்சினார்க்கினியர்.** (௪)

405. ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்குவிளக் காயினண் மன்ற கனைப்பெயற்
பூப்பல வணிந்த வைப்பின்
புறவணி நாடன் புதல்வன் றாயே.

இதுவுமது.

1. தொல். பொ: 188.　2. அகம். 26.　3. தொல். பொ. 153.

உரை : ஒலிக்கின்ற மழைபெய்தலால், பூக்கள் பலவும் மலர்ந்து அழகுற்ற ஊர்கள் பொருந்திய முல்லைநில நாடனுடைய புதல்வற்குத் தாயாகிய தலைவி, ஒள்ளிய சுடர்விட்டெரியும் பாண்டிலில் ஏற்றப்பட்ட செவ்விய விளக்குப் போல அவன் இல்வாழ்க்கைக்கு உரிய விளக்கமாயினள் எ. று.

ஒண்சுடர், இருளறக்கெடுக்கும் மிக்க ஒளி. **பாண்டிற் சுடர்**, கால் நிறுத்திய விளக்கு. பருத்த திரி எரியும் சுடராதலின், **செஞ்சுடர்** என்றார். "பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. கனை பெயல் எனற்பாலது எதுகைநோக்கிக் கனைப்பெயல் என வந்தது. **வைப்பு**, இடம்: ஈண்டு நறிய பூக்களையுடைய மரமும் செடியும் கொடியுமுடைய முல்லை நிலத்து ஊர்கள் மேற்று. புறவணிந்த நாடுகிழவோனை, **புறவணி நாடன்** என்றார்.

இல்லின்கட்படும் இருளை யகற்றும் பாண்டில்போல, மனைக்கட்படும் பழி முதலிய மாசுபோக்குதலின் **மனைக்கு விளக்காயினள்** என்றாள். "மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்[2]" என்றும், "மனைக்கு விளக்கம் மடவார்[3]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. பரூஉச் சுடர் கொண்டு காற்றின் அலைப்புக்கு அவியாது நின்று திகழ்வது பற்றி, **ஒண் சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர்** எனச் சிறப்பித்தாள். சுடரெனப் பெயர்த்தும் கூறியது, மகப்பேற்றால் தலைமகள்பால் மேனி நலம் குன்றாமை வற்புறுத்தற்கு. **புதல்வன்தாய்** என்றது மேலே மனைக்கு விளக்காயினள் என்றதன் ஏதுவை உட்கொண்டு நின்றது. (௬)

1. நெடுநல். 175. 2. புறம். 314. 3. நான்மணிக். 104.

406. மாத ருண்கண் மகன்விளை யாடக்
காதலித் தழீஇ யினிதிருந் தனனே
தாதார் பிரச மூதும்
போதார் புறவி னாடுகிழ வோனே.

இதுவுமது.

உரை : தேன் நுகரும் வண்டினம் ஒலிக்கும் போது கள் நிறைந்த முல்லைக் காட்டினையுடைய நாட்டுக் குரியோன், காதல் நிறைந்த மையுண்ட கண்களையுடைய மகன் தன் முன் விளையாட்டயர, தான் தன் காதலியைத் தழுவியவண்ணம் அவனை இனிது நோக்கியிருந்தனன் எ.று.

மாதர், காதல். குழவிப்பருவத்தில் பால்வேறுபாடின்றி எல்லாக் குழவிகட்கும் கண்ணில் மையெழுதுதல் மரபாதலின், **மாதர் உண்கண் மகன்** என்றார். **பிரசம்,** வண்டு. **தாது,** தேன். பூக்களின் தாது தேர்ந்துண்பது இயல்பாதலின், **தாதார் பிரசம்** என்றார். **ஊதுதல்** தேனுண்டு ஆரவாரித்தல்.

மகனது விளையாட்டு எதிர்வின்கண் ஆக்கமாதலின், அதனை எண்ணி நோக்கி இன்புறும் திறத்தை **மகன் விளையாட** என்றும், அவ்வின்பத்தினைத் தன் மனைவியோடு கூடி நுகர்கின்றான் என அவன் காதலைக் கட்டுரைக்கப் புகுந்தாள், **காதலித் தழீஇ இனிது இருந்தனனே** என்றும் கூறினாள். வண்டினம் தமக்குரிய தேன்பெற்றுக் களி சிறந்து இசைக்கும் நாடு கிழவோன் என்றது, அவன் எல்லாச்செல்வமும் பெற்று இசைபட வாழ்தல் கூறிய வாறு. இது வாழ்க்கை நலம் கூறியது.

<u>**காதலின் தழீஇ**</u> என்றும், <u>**பிரசம் முரலும்**</u> என்றும் பாடமுண்டு. "பின் முறையாக்கிய பெரும் பொருள் வதுவை [1]" என்பதன் உரையில் இதனைக்காட்டி, "பரத்தையிற் பிரிவொழிந்து மனைக்கண் இருந்த தென்பர் **நச்சினார்க்கினியர்.** (௬)

1. தொல். பொ. 172.

407. நயந்த காதலித் தழீஇப் பாணர்
நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்
தின்புறு புணர்ச்சி நுகரும்
மென்புல வைப்பி னுடுகிழ வோனே.

இதுவுமது.

உரை: தான் விரும்பிய காதலியைத் தழுவி உயிர்களை இசையின்பத்திற் படிவிக்கும் யாழின்கண் பாணர் யாத்திசைத்த இசைப்பயனைத் தேர்ந்து நுகரும் இன்பம் போலும் புணர்ச்சியினை நுகருவானுயினன், மென்புலமாகிய முல்லை நிலத்தினையுடைய நாட்டுக்குரியோன் எ.று.

நயந்த காதலி என்றூர், "எல்லாவுயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றுகும் [1]" என விதித்தலின். "தாயுடன் றலைக்கும் காலையும் வாய்விட், டன்னுய் என்னுங் குழவிபோல, இன்னு செயினு மினிது தலையளிப் பினும்" தன்னையின் றியமையாக் காதலுடைமையின் **நயந்த காதலி** யென்றூர் எனினுமாம். **முரற்கை,** ஈண்டு யாழின் மேற்று. யாழ் நரம்பிடை யெழுப்பும் இசைப்பயனுகிய இன்பத்தை **யாத்த பயன்** என்றும், அது நுண்ணிதின் உணர்ந்து நுகரப்படுமாறு தோன்றத் **தெரிந்து** என்றும், இசையின்ப நுகர்ச்சிபோலப் புணர்ச்சியின்பம் நுகர்தலின் **இன்புறு புணர்ச்சி நுகரும்**என்றும் கூறினுர். தீத்தொழிலிலே கன்றி இருள்மேவிய உள்ளத்தரும் அது நீங்கி அருள் மேவிய உள்ளத்தராகும் நயமுடைமையின், **நயம்படு முரற்கை** என்றூர். "ஆறலை கள்வர் படைவிட அருளின், மாறுதலை பெயர்க்கும் மருவின்பாலை [2]" என்றூர் பிறரும். **மென்புலம்,** புன்புலமாயினும் கார்மழையினுல் மென்மையுற்ற முல்லை நிலம். "மென்புல முல்லை மலரும் மாலை [3]"

1. தொல். பொ. 223. 2. பொருந. 21-2. 3, ஐங். 489.

என்புழியும் இதுவே கொள்க. கிழவோன், காதலித் தழீஇப் புணர்ச்சி நுகரும் என இயையும். தெரிந்தென்னும் வினையெச்சம் இன்புறு என்புழி உறுதலொடு முடிந்தது.

ஒருவரினொருவர் இன்றியமையாக் காதலாற் பிணிப்புண்டிருக்குமாற்றை அறிந்து கூறுதல் தோன்ற **நயந்த காதலி** என்றும், காதற்காமப் பைங்கூழை வளமுற வளர்க்கும் நீர்மையுடைமைபற்றி, பாணர் நல்கும் இசையின்பத்தை விதந்து, **பாணர் நயம்படு முரற்கையின் யாத்த பயன் தெரிந்து இன்புறு புணர்ச்சி** என்றும், இன்பநுகர்ச்சிக்கண், நுகரப்படும் இன்பமும் நுகர்வோரும் என வேறுபடநில்லாது ஒன்ருய் இயைந்து நிற்பதுபோலப் புணர்ச்சிக்கண் ஒருவர் ஒருவரின் ஒன்றியிருந்து நுகரும் இன்பத்திறத்தை **இன்புறு புணர்ச்சி நுகரும்** என்றும் கூறினுள். இனி, காதலித் தழீஇப் பயன் தெரிந்து புணர்ச்சி நுகரும் என இயைத்து, காதலியொடு கூடி இசைப்பயன் தெரிந்து பின் புணர்ச்சியின்பம்நுகரும் என மாலைப்போதில் பாணரது இசையின்பமும், இரவில் இன்புறு புணர்ச்சியின்பமும் நுகர்கின்ருன் என்றலு மொன்று. ஊடப்பிறக்கும் காம இன்பத்தினும் கூடப்பிறக்கும் இன்பம் பெரிதாதல்பற்றி **இன்புறு புணர்ச்சி** என்ருள் எனக்கொள்க. **திருவள்ளுவனாரும்,** "ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கு இன்பம் கூடி முயங்கப்பெறின் [1]" என்பது காண்க. (எ)

408. *பாணர் முல்லை பாடச் சுடரிழை*
வாணுத லரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கோள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே.

இதுவுமது.

---

1. குறள். 1330.

உரை: பாணர் முல்லைப் பண்ணைப் பாடவும், ஒளி விடும் இழையினையும், ஒளி பொருந்திய நுதலினையுமுடைய அரிவையாவாள், முல்லைப்பூச் சூடவும், நெடுந்தகையாகிய தலைமகன் வெறுப்பில்லாத கொள்கையினையுடைய தன் புதல்வனொடு சிறந்து இனிதிருந்தனன் எ, று.

முல்லைப்பண், சாதாரிப்பண். கற்புக்குரித்தாகலின், **முல்லை மலைய** என்றார். "அவிரிழை சுடர முல்லை யலங்கலங் கூந்தல் சோர[1]" என்பத னுரையிலும் ஆசிரியர் **நச்சினார்க்கினியர்,** "முல்லை கற்பிற்குச் சூடினார்" என்றார். பாணர் பாட்டினால் இசையும், மனைவி முல்லை யணிதலால் மனை மாட்சியும் சிறத்தலின், **நெடுந்தகை** என்றார். ஒரு வினையொடு காதற் சிறப்புடைமை யுணர நின்றது. **துனி,** வெறுப்பு. "துனிதீர் கொள்கை நம்காதலி இனிதுற[2]" என்றார் பிறரும்.

புறத்தொழுக்கம் இன்றி மனைக்கண் இருந்து அறஞ் செய்து புகழ்வளர்க்கும் திறம்பற்றிப் **பாணர் முல்லை பாட** என்றும், தலைவிபால் அயரா அன்பும் அழிவில் கூட்டமும் சிறந்து விளங்குமாறு தோன்ற, **சுடரிழை வாணுதல் அரிவை முல்லை மலைய** என்றும், இருத்தல் முல்லையொழுக்க மாதலின், **இனிதிருந்தனன்** என்றும், இம்மைக்குரிய இசையும் மறுமைக்குரிய மகப்பேறும் ஒருங்குபெற்று விளங்குதலின், தலைமகனை **நெடுந்தகை** என்றும், ஆராக் காதலுடைமையின் எத்துணைப் போழ்து தன்னோடு இருப்பினும் வெறுப்பின்றி இன்பமே மிகுதலின், **துனிதீர் கொள்கைத் தன் புதல்வனொடு** என்றாள். அல்லதூஉம், புலவிக்கண் எழும் துனியினை நீக்கும் வாயிலாகலின் **துனி தீர் கொள்கைப் புதல்வன்** என்றாள் என்றுமாம். பிறாண்டும் தலைமகனைச் செவிலி, "விறல்மிகு நெடுந்தகை[3]" என்பது காண்க.

1. சீவக. 2542. 2. அகம். 124. 3. ஷை. 49.

தம் புதல்வனொடு என்பது பாடமாயின், தானவள் என்னும் வேற்றுமையின்றி அவர் தம் உயிர் கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மையைப் புலப்படுத்தியவா றெனக் கொள்க.

"கற்பும் காமமும்[1]" என்பதனுள் இதனைக் காட்டி, இது வாயில்கள் தம்முட் கூறியது என்பர் **இளம்பூரணர்.**

409. புதல்வற் கவைஇயினன் றந்தை மென்மொழிப்
புதல்வன் றாயோ விருவருங் கவையினள்
இனிது மன்றவவர் கிடக்கை
நனியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே.

இதுவுமது.

உரை: தந்தை தன் புதல்வனைப் புல்லிக்கொண்டானாக, மெல்லிய மொழியினையுடைய அப்புதல்வற்குத் தாயாகியாள் அவ் விருவரையும் தழுவிக் கிடந்தனள்; ஆகவே, அவர் கிடந்த கிடக்கை மிக இனிதாயிருந்தது; மேலும், அவ்வின்பத்துக்கு மிக்க பரப்பினையுடைய இவ் வுலகு முற்றும் ஒப்பதாகும் எ. று.

மென்மொழி, மென்மை ஈண்டு நிரம்பாத மழலைச் சொல்லின் மேற்று. காமக் குறிப்பின்றிக் காதலும் சான்றாண்மையும் விளங்க இருத்தலின், தலைமகன் என்னாது **தந்தை** என்றும், தாய்மையின் வாய்மை தோன்ற **புதல்வன் தாய்** என்றும் கூறினர். ஐயுருபு விகாரத்தால் தொக்கது. **உடன்,** முழுதும் என்னும் பொருட்டு; "பழியெனின், உலகுடன் பெறினும் கொள்ளலர்[2]" என்று பிறரும் கூறுதல் காண்க. ஏகாரம் எதிர்மறை யெனக் கொண்டு, உலகு முழுதும் ஒவ்வாது என்றலும் ஒன்று.

---

1. தொல். பொ. 150. 2. புறம். 182.

கணவன், மனைவி, புதல்வன் என்ற மூவராகுயது உலகமாகலின், அவர் மூவரும் கிடந்த கிடக்கைக்கு **இவ்வுலகு முற்றும் உறுவதாகும்** என்றாள். இவ்வெனச் சுட்டியது, வாழ்க்கைக்கு நிலைக்களனும் சிறப்பினை யாப்புறுத்தற்கு. ஈண்டுச் செவிலி கண்ட காட்சியினையே பிறாண்டும், "*கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம, மாலை விரிந்த பசுவெண் ணிலவிற், குறுங்காற் கட்டில் நறும்பூஞ் சேக்கைப், பள்ளி யானையி னுயிரா அசைஇப், புதல்வற் கவைஇயினன் விறலவன், புதல்வன் றாயவன் புறங் கவைஇயினளே*[1]" என்று கூறுதல் காண்க. (௯)

410. மாலை முன்றிற் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி யாகப் புதல்வன்
மார்பி னூரு மகிழ்நகை யின்பப்
பொழுதிற் கொத்தன்று மன்னே
மென்பிணித் தம்ம பாணன தியாழே.

இது, கடிமனைச் சென்ற செவிலி, தலைமகனும் தலைமகளும் புதல்வனோடு பாடல் கேட்டிருந்தமை கண்டு, தன்னுள்ளே உவந்து சொல்லியது.

உரை: மாலைப்போதில் இல்லின் முன்னர்த்தாகிய **முற்றத்தின்கண்** குறுகிய கால்களையுடைய கட்டிலில் **தலைமகன் தன் மனைவி துணையாகத் தன் புதல்வன் மார்பின் மேல் இவர்ந்து ஊர்தலால் எழும் மகிழ்ச்சியோடு கூடிய நகை கொள்ளற்கியைந்த இன்பக் காலத்திற்குப் பாணனது யாழ்செய்த பண்ணிசை ஒத்திருந்தது; ஆயினும் அதன் பிணிப்பு அத்துணை வன்மை யிலதாயிற்று, காண் எ. று.**

மகிழ்நகை, புதல்வன்கண் தோன்றிய இளமை பொருளாகப் பிறந்தது. இளஞ்சிருருடன் இனிதிருந்து மகிழ்தற்கு அமைத்த கட்டிலாதலின், **குறுங்காற் கட்டி** லாயிற்று. பெயரெச்சம் ஏதுப்பொருட்டு. **மென்பிணித்து** *என்றவிடத்து மென்மை இன்மை யுணர்த்தி நின்றது.*

---

1. குறுந். 359.

இன்பப் பொழுதிற்கு ஒத்ததாயினும், ஒவ்வாதது போலக் கேட்போர் உள்ளத்தை ஈர்த்துப் பிணிக்கும் வன்மையின்றி யொழிந்தது என்பதுபட நிற்றலின், **மன் ஒழியிசை.** பிணித்தலாவது, "சிந்தை தோயும் ஐம்பொறிகளும் செவிகளாப் புலன்கள் ஐந்தும் ஓசையாய்" ஒன்றி நிற்றல். மகிழ்ச்சி காரணமாகத் தோன்றும் நகை, **மகிழ் நகை;** "மகிழணி முறுவல் [1]" என்றாற் போல.

புதல்வனுடைய விளையாட்டுப் பொருளாகப் பிறந்த உவகையால் மகிழ்ச்சி யெய்துவார்க்குப் பாணனது யாழிசை அவன் விளையாட்டிடைக் கூறும் மழலைச் சொற் போல மகிழ்ச்சிப்பயனே விளைத்தலின், **ஒத்தன்று** என்றும், அவன் மழலைச்சொற்களைக் கேட்குங்கால் யாழிசை நுகரப் படாமையின், **மென்பிணித்து** என்றும், கொல்களிறு வணக்கும் வன்பிணித்தாகிய யாழ், காலமும் இடமும் வாய்த்தும் தன் இசையால் தலைமக்களின் மனத்தைப் பிணிக்காதொழிந்தது என்பாள், **மென்பிணித் தம்ம** என்றும் கூறினள். யாழிசைக்கு யானை வணங்கும் என்பது "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கியாங்கு [2]" என்று சான்றோர் கூறுதல் காண்க. "குழல் இனிது யாழ் இனிது என்ப தம்மக்கள், மழலைச் சொற் கேளாதவர் [3]" எனத் **திருவள்ளுவனாரும்** கூறினர். "குரும்பை மணிப்பூண் பெருஞ்செங் கிண்கிணிப், பாலார் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன், மாலைக் கட்டின் மார்பூர் பிழிய, அவ்வயி றொழுகிய வெவ்வாய் மாணகைச், செயிர் தீர் கொள்கை நம்உயிர் வெங்காதலி [4]" எனப் பிறண்டுத் தலைவன் தன் புதல்வனது விளையாட் டின்பத்தை வீதந்து கூறுதல் காண்க. (ம)

---

1. அகம். 353. 2. கலி. 2. 3. குறள். 66..
4. நற். 269.

42. கிழவன் பருவம் பாராட்டுப்பத்து.

இது, தலைமகன் தலைமகட்குத் தான் குறித்துச் சென்ற கார்ப்பருவ வரவுகாட்டித் தான் அஃது எய்துவதற்கு முன்னரே வந்தமை தோன்ற அவளைப் பாராட்டிக் கூறும் பாடல் தொகுதியாகலின், இப்பெயர்த்தாயிற்று.

411. ஆர்குர லெழிலி யழிதுளி சிதறிக்
கார்தொடங் கின்றாற் காமர் புறவே
வீழ்தரு புதுப்புன லாடுகம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைவியோடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான் தலைவிக்கு உரைத்தது.

உரை: தாழ்ந்த கரிய கூந்தலையுடையாய், நிறைந்த இடியொலியினையுடைய மேகம் மிக்க பெயலைப் பெய்தலால், அழகிய முல்லைக்காடு கார்காலம் தொடங்கப் பெறுகின்றது; நாம் விருப்பந்தரும் புதுப்புனலின்கண் விளையாட்டயரலாம்; ஆகலின், விரைந்து வருவாயாக எ. று.

மிக்க பெயலைச் செய்யும் மேகம் இடியொலியுடன் வருதல் இயற்கையாகலின், **ஆர்குரல் எழிலி** யெனப்பட்டது; "ஆர்கலியெழிலி[1]" என்றும், "ஆர்குரல் எழிலி[2]" என்றும் வருமிடங்களி லெல்லாம் இங்ஙனமே யுரைத்துக் கொள்க. **அழிதுளி**, பெருமழை, "அழிபெயல்காலை[3]" என்றாற்போல. செய்தெனெச்சம் காரணப்பொருட்டு.

---

1. ஐங். 428. 2. ஷை. 455. 3. பரி. 10 : 1.

முதியர், இளையர், ஆடவர், பெண்டிர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் ஆகிய பலரும் விரும்புவது பற்றி, **வீழ்தரு புதுப்புனல்** என்றார்; "யாம் வேண்டும் வையைப்புனல்[1]" என்று பிறரும் கூறுவது காண்க.

தான் குறித்த கார்ப்பருவம் வருமுன்பே வினைமுற்றி வந்துள்ளானாகலின், பருவம் கண்ட தலைமகன் **கார் தொடங்கின்றால் புறவே** என்றும், கார்ப்பெயலால் பெருகி வரும் புதுநீர் யாவரும் படிந்து ஆடுதற்கு விரும்புமாறு நுரையும் பல்வகை மலரும் சுமந்து வருதலின், **வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்** என்றும், தலைமகள் உள்ளத்தெழுந்த புனலாட்டு வேட்கை மீதூர்ந்தமையின் அவள் உடன்பட்டு நாணித் தலைகவிழ்ந்தாளாக முன்னிலைப்படுத்தற்குத் **தாழிருங்கூந்தல்** என்றும், புதுப்புனலாடற்கு விரைந்து புறப்படுக என்பான், **வம்மதி விரைந்தே** என்றும் கூறினான். "குறுநுரை சுமந்து நறுமல ருந்திப், பொங்கிவரு புதுநீர் நெஞ்சுண ஆடுகம்[2]" என்று தலைவி புதுப்புனலாட்டினை நயந்து உரைக்குமாறு அறிக. கார்ப்பெயல் பொழிந்தவுடன் புதுப்புனல் வரக்கண்டார் அதன்கண் ஆடுதல் பண்டைக்கால மரபாகலின், ஈண்டு அது விதந்து கூறப்பட்டது. (க)

412. *காயா கொன்றை நெய்தன் முல்லை*
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி யாடுகம் விரைந்தே.

இதுவுமது.

ப. உரை : **ஆடுகம் விரைந்தே** என்றது விளையாட்டு.

---

1. பரி. 10:40.　　2. நற். 68.

உரை : பெரிய அமர்த்த கண்களையுடையாய், காயாவும், கொன்றையும், நெய்தலும், முல்லையும், அரும்பு மலர்ந்த செம் முல்லையும், பிடவுமுமாகிய மலர்கள் விரிந்து புறவு பூவணி கொள்வதாயிற் றாகலின், விளையாட்டயர் தற்கு விரைந்து வருக எ. று.

எண்ணெடு யாண்டும் கூட்டப்பட்டது; "என்றும் எனவும் ஒடுவும் தோன்றி, ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே [1]" என்பவாகலின். **பூவணி,** பூவால் உளதாகும் அணியென விரியும். **தளவம்,** முல்லைவகை. **நெய்நல்,** நெய்தனிலப் பூவாயினும், "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாராவாயினும் வந்த நிலத்தின் பயத்த வாகும் [2]" என்பதனால் அமைந்தது. **அமர்த்தல்,** அமர்செய்தல்; "பெண்டகையாற் பேரமர்க்கட்டு [3]" என்புழிப்போல. இது பெயரடியாய வினை; "பேரமர் மலர்க்கண் [4]" என்புழியும், "பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர் [5]" என்புழியும் இவ்வாறே யுரைத்துக் கொள்க.

கோடும் கொடியும் நிலமும் நீருமாகிய நால்வகை இடத்துப் பூக்களை உடைமை பற்றி, காயா கொனறை முதலியவாக எடுத்துரைத்தான். காயாவும் கொன்றையும் மரமாதலின் முன்வைத்தும், தளவும் பிடவும் நிலத்தவாக லின் இறுதிக்கண் வைத்தும் உரைக்கப்பட்டன. பூத்த பரத்தையர் பூவணி கோடல்போல் இப்புறவமும் பூவணி கொண்டது என்பான், **பூவணி கொண்டன்றால் புறவே** என்றும், எனவே, அதன் புதுநலத்தை விரைந்து சென்று நுகர்தல் வேண்டுமென்பான், **ஆடுகம் விரைந்தே** என்றும் கூறினன். பரத்தையர் பூவணி வதுவை கோடலை, "பூவணிப் பொலிந்த நின் வதுவையங் கமழ் நாற்றம் [6]" என்பதனை அறிக. தன்பால் பரத்தைமை இன்மையின், **பூவணி**

1. தொல். சொல். 294. 2. ஷை. பொ. 19. 3. குறள். 1083.
4. ஐங். 427. 5. ஷை. 496. 6. கலி. 66.

கொண்டன்று புறவு என்றான்; இக்குறிப்பை ஆராய்வாள் போல அவன் முகத்தைத் தன் கண்ணைப் பரப்பி அவள் நோக்குவது பற்றிப் **பேரமர்க் கண்ணி** என்று சிறப்பித்தான். **பிடவுமலர்ந்து கவினி** என்றும் பாடமுண்டு. (உ)

413. நின்னுத லுறு நறுந்தண் புறவின்
நின்னே போல மஞ்ஞை யாலக்
கார்தொடங் கின்றாற் பொழுதே
பேரிய லரிவை நாநயத் தகவே.

இதுவுமது.

உரை: பெரிய இயல்பினையுடைய அரிவையே, நாம் விரும்புமாறு நின்னுடைய நுதல்போல் மணங்கமழும் தண்ணிய முல்லைக் காட்டின்கண் நின்னைப்போலவே மயில்கள் தமது மென்குரலை எடுத்து அகவ, இப்பொழுது கார்ப் பருவத்தைத் தொடங்காநின்றது எ. று.

மகளிர் நுதல் நறுமணமுடைய தென்பதனால் **நுதல் நாறும் தண்புறவு** என்றார். "மணநாறும் நறுநுதல் மாரிவீழ் இருங்கூந்தல்[1]" எனச் சான்றோர் கூறுவர். மகளிர் நுதல் முல்லையின் நறுமணம் நாறும் எனபர். "கொய்யகை முல்லை காலொடு மயங்கி, மையிருங் கானம் நாறும் நறுநுதல் [2]" என்பது காண்க. ஆலுதல், அகவுதல்; ஆடுதலுமாம். பொழுது கார் தொடங்கின்று என்பது நாடு இடம் குறுகியது எனருற் போல முடிந்தது.

பேரியலாவது, மனைத்தக்கா ளாதற்குரிய மாண்பு. புறவம் நின் நுதல்போல் நாறலினாலும், மயில்கள் நின்னைப்போல் ஆலுதலாலும், இப்பருவம் நினக்கு இயைந்து தோன்றுதலின், நாம் கூடியாடி மகிழ்வெய்தலாம் என்பதாம். "நின்னே போல மஞ்ஞை யால நின், நன்னுதல் நாறு முல்லை மலர [3]" எனப் பிறாண்டும் தலைவன் கூறுதல் காண்க. (௩)

---

1. கலி. 14. 2. அகம். 43. 3. ஐங். 492.

414. *புள்ளு மாவும் புணர்ந்தினி துகளக்*
கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி
மெல்லிய லரிவை கண்டிகும்
மல்ல லாகிய மணங்கமழ் புறவே.

இதுவுமது.

உரை: மெல்லிய இயலையுடைய அரிவையே, புள்ளினமும் மாவினமும் தத்தம் துணையொடு கூடி இன்புற்று மகிழ, கோட்டிடத்தும் கொடியிடத்தும் பூக்கும் பூக்கள் நிறைந்து வளமிக்க மணம் கமழும் புறவினைக் காண்பாயாக எ. று.

புள்ளினத்துக்கு உரிய பழவகையும், மாவகைக்குரிய மேயலும் இனிது பெறப்படுதலின், இனிது உறைகின்றன என்பார், **இனிது உகள** என்றார். தாய்மைக்குரிய சால்புடைமை பற்றி **மெல்லியல் அரிவை** எனச் சிறப்பித்தார். பூவும் தழையும் சிறந்து புள்ளும் மாவும் இனிதுறைவதனால் **மல்லலாகிய புறவு** எனப்பட்டது.

புறவம் பூ நிறைந்து பொலிதலும், புள்ளும் மாவும் துணையொடு புணர்ந்து மகிழ்வெய்தலும் காண்டற்கு இன்பமாம் என்பான், **கண்டிகும்** என்றான். (ச)

415. *இதுவே மடந்தைநா மேவிய பொழுதே*
உதுவே மடந்தைநா முள்ளிய புறவே
இனிதுடன் கழிக்கி லிளமை
இனிதா லம்ம இனியவர்ப் புணர்வே.

இதுவுமது.

உரை: மடந்தையே, நாம் விரும்பிய பொழுதும், கருதிய புறவும் இதுவும் உதுவுமாம்; இப்பொழுதை இப் புறவில் இனிது கழிப்பதாயின் இனிய துணைவரைப் புணர்ந்து கழிப்பின் இளமை மிக இனிதாம் எ. று.

இனிது கழித்தலாவது பூக்கொய்தும் புனலாடியும் கழித்தல். விரும்பிய பொழுதும், இடமும் பெற்றவழி இனியரோடுகூடி அப்பொழுதைக் கழிப்பேமாயின் இனி தாம் என்பதும், கழியும் மாலைத்தாகிய இளமை இனியவ ரோடு கூடுதலாற் கழிப்பின், அஃது இளமையானுகும் பெறற்கரிய சீரியபயன் என்பதும் கூறியவாறு. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. இனி, **இனிது** என்பதனைப் புணர்வே யென்புழியுங் கூட்டி யுரைத்தலு மொன்று; அது போது, இருவழியும் எச்சவும்மை விகாரத்தால் தொக்க தென்க. **மடந்தை**யென மீட்டுங் கூறியது, காதற் சிறப் புணர்த்திற்று. "எல்லா வுயிர்க்கு மின்ப மென்பது, தான் அமர்ந்து வரூஉ மேவற்ருகும்[1]" என்பவாகலின்.

பிரிவின்கண் தலைமகன் மீண்டுவருவதாக வற்புறுத்த பொழுது கார்காலமாதலின், அது வருமுன் அவன் வந்த மையான் மகிழ்ச்சி மிகும் தலைமகட்கு, அதனைக்காட்டி, **இதுவே மடந்தை நாம் மேவிய பொழுது** என்றும், பூத்துக் கவினிய புறவின்கண் பூக்குற்றும் புனலாடியும் விளையாடிப் பெறும் இன்பத்தைத் தலைமகள் மிகவும் விரும்புபவள் ஆதலின், அதனை நினைந்தே கார்காலத்து மீள்வதை முன்பு கருதினைகலின், **உதுவே மடந்தை நாம் உள்ளிய புறவே** என்றும், எவ்வகையானும் இடையீடின்றி விரைந்து கழியும் இயல்பிற்ருய இளமையை வறிதே கழியவிடாது இனிது கழித்தல் அறிவுடைமையும் அறமுமாமாதலின், **இளமை இனிதுடன் கழிக்கில்** என்றும், இனிது கழித்தற்கு நெறி இனியவர்ப் புணர்வு ஆதலின், **இனியவர்ப் புணர்வு** என்றும் கூறினன்; "வைகல் தோறும் இன்பமும் இளமை

1. தொல். பொ. 223.

யும், எய்கணை நிழலிற் கழியும்[1]" என்றும், "அரிவை தோளி ணைத் துஞ்சிக் கழிந்த நாள், இவண் வாழும் நாள்;" வறிது கழியும் நாள் "பதடி வைகல்[2]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க. திருவள்ளுவர், "இன்னாது இனனில்லூர் வாழ்தல் அதனினும் இன்னாது இனியார்ப் பிரிவு[3]" என்பர்.

இதனால் தலைவன் மாட்டுப் புணர்ந்துழி யுண்மை என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று. தோன்றவே, இளமைய தருமை கூறிப் புணர்ச்சிவலித்தல் பெற்றும். (கு)

416. போதார் நறுந்துகள் கவினிப் புறவில், தாதார்ந்து
களிச்சுரும் பரற்றுங் காமர் புதலின்
மடப்பிடி தழீஇய மாவே
சுடர்த்தொடி மடவரற் புணர்ந்தனம் யாமே.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் பருவத்திற்கு முன்னே வந்து தலைவியோடு கூடிச் செல்லாநின்றுழி அதற்கு இனியனாய்த் தன்னுள்ளே சொல்லுவான் போன்று தலைவி அறியுமாற்றாற் கூறியது.

ப. உரை: புறவில் தாதார்ந்து சுரும்பு அரற்றும் புதல் என்றது தலைவியது மனைமாட்சி வியந்து கூறியவாறு.

உரை: பூம்போதுகளில் நிறைந்த நறுவிய துகள் படிதலால் அழகுற்றுக் காட்டின்கட் பூத்த மலர்களின் தேனுண்டு களித்த வண்டுகள் ஒலிக்கும் அழகிய புத ரிடையே களிறுகள் தமக்கு இனிய மடப்பம் பொருந்திய பிடியானைகளைத் தழுவின; அவ்வாறே, யாமும் ஒளி பொருந்திய தொடியினை யணிந்த மடவரலைக் கூடி மகிழ் வேமாயினேம் எ. று.

1. நற். 46. 2. குறுந். 323. 3. குறள். 1158.

துகள், மகரந்தத்தூள். பைம்புல் பரந்த நிலத்தில் போதுகளின் பொன்னிறத் துகள் பரந்து பசுங்கம்பலத்தில் பொற்கோலம் இட்டதுபோல் அழகு செய்தலின், **போதார் நறுந்துகள் கவினி** என்றார். போதின்கண் ஊறும் தேனைப் படிந்துண்ட கருவண்டு பொன்னிறத் துகள் படிந்து அழகுறத் தோன்றுவது பற்றி, **நறுந்துகள் கவினி** என்றார் என்றுமாம். "நறவின் நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ், பொன்னுரை கல்லின் நன்னிறம் பெறூஉம்[1]" என்று சான்றோர் உரைப்பது காண்க. **களி**, கள்ளுண்ட மயக்கம். "மடப்பிடி" என்றதனால், "மா வென்னும் பல பொரு ளொருசொல் களிறுக்காயிற்று.[2]" மா மடப்பிடி தழீஇய; யாம் மடவரற் புணர்ந்தனம் என இயையும். **மாவே** என்றதனை விளியாக்கி யுரைத்தலும் ஒன்று.

வண்டுகள் தேனுண்டு ஒலிக்க, களிறுகள் தமக்கினிய பிடியைத் தழுவி மகிழ்தலைக் கண்ட விடத்துத் தனக்குரிய துணைவிமாட்டு உள்ளம் சேறலின், **புணர்ந்தனம் யாமே** என்றான். இனி, "உவமப் பொருளின் உற்ற துணரும், தெளிமருங் குளவே திறத்திய லான[3]" என்றதனால், யானை மடப்பிடியைத் தழுவிய புதல், சுரும்புகள் தமக்கு வேண்டும் தாதுண்டு களித்தற்கு இடமாதல் போலத் தன் காதலி இருந்த மனை, விருந்தினரும் இரவலரும் பிறரும் தமக்கு வேண்டுவன பெற்று மகிழ்ந்து போற்றும் சிறப்பினையுடைத் தெனத் தலைமகள் மனைமாட்சியைத் தலைமகன் உவந்து கூறியவாறு பெற்றாம். (சு)

417. *கார்கலந் தன்றாற் புறவே பலவுடன்*
ஏர்பரந் தனவாற் புனமே யேர்கலந்து
தாதார் பிரச மொய்ப்பப்
போதார் கூந்தன் முயங்கின ளெம்மே.

இதுவுமது.

---

1. நற். 25.　2. தொல். சொல். 53.　3. தொல். பொ. 295.

உரை : காடு கார்ப்பருவத்தை எதிரேற்றமையாலும், புனங்கள் பலவாய் அழகுபெற்றமையாலும், தேனுண்ணும் வண்டுகள் மொய்க்கும் பூக்களை யணிந்த கூந்தலையுடைய வள் புலத்தகை புரிந்து எம்மைக் கூடி மகிழ்ந்தாள் எ. று.

புறவு, முல்லைக்காடு. கார்மழையால் நிலங்குளிர்ந்து பூக்கள் மலர்ந்து மாவும் புள்ளும் மகிழ்சிறந்து இன்புறு தலின், **கார் கலந்தன்றால் புறவே** என்றும், வரகு துவரை முதலிய பயிர்கள் தோன்றி முல்லைக் கொல்லைகளில் வளவிய காட்சி வழங்குதலின், **பலவுடன் ஏர் பரந்தனவால்** புறவே என்றும் கூறினர். **புனம்,** முல்லை நிலத்துப் புன்செய்க் கொல்லைகள். ஏர், உழுவாரது கலப்பையுமாம்; "தேர்பரந்த புலம் ஏர்பரவா[1]" என்றாற்போல. ஏர்கலந் தென்புழி ஏர், புலத்தகை. "நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை[2]" என்ப. ஏர் கலந்து முயங்கினள் என இயையும்.

தான் தன் காதலனொடு புணர்ச்சிபெற்று மகிழ்தற் குரிய கார்ப்பருவமும், புனத்தழகும் எய்த நோக்கிய தலைமகட்குக் கூட்டத்தின்மேல் உள்ளம் சேறலின், **முயங்கினள் எம்மே** என்றும், காதலன்பால் புலத்தற்குரிய தவறு இல்லையாயினும் வேட்கை மிகுதியால் புலத்தல் மகளிர்க்கு இயல்பாகலின், **ஏர்கலந்து முயங்கினள்** என்றும் கூறினன். **தாதார் பிரசம் மொய்க்கும்போது** என்றது தான் நுகர்ந்த இன்பத்தைத் தலைவன் சுட்டிய வாறு. (எ)

418. வானம் பாடி வறங்களைந் தானா
தழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கி யோயே.

---

1. பதிற். 26. 2. குறள். 1305.

இது, குறித்த பருவத்திற்கு உதவ வாராநின்ற வழிக்கண் உருவுவெளிப்பாடு கண்ட தலைமகன் இல்லத்துப் புகுந்துழித் தலைமகட்குச் சொல்லியது.

உரை : மாண்புற்ற மார்பகம் முற்றவும் பொருந்தப் புல்லியவளே, மழைநீரை உணவாகவுடைய வானம்பாடிப் புள் அஃது இன்மையாற் கொண்ட வறுமை நீக்கி, அதனுடைமையாது மிக்க பெயலைச் செய்த மழையை ஏற்றுக்கொண்ட காட்டிடையே காட்சியுறத் தோன்றுதலின், நீ வானரமகளோ, கூறுக எ. று.

வானம்பாடி மழைநீரை உணவாகவுடைய தென்பது, "எந்நாளும், துளிநசைப் புள்ளின்[1]" என்றும், "தற்பாடிய தளியுணவின், புள் [2]" என்றும் வருவனவற்றாலும், அவற்றின் உரையாலும் உணர்க.

மழையில்லாத போதெல்லாம் வானம்பாடிக்கு வறுமைக் காலமாதலின், **வறம் களைந்து** என்றார். **அழிதுளி**, மிக்க மழை. **காண்வர** என்னும் செயவெனெச்சம் காரணப் பொருட்டு. **அடைய முயங்கல்**, பொருந்தப் புல்லுதல். "*வெம்முலை யடைய முயங்கி* [3]" என்றாற் போல. **முயங்கியோய்** என்றது விளி. **வானரமகள்**, மலையுச்சிகளிலும் காடுகளிலும் காணப்படும் வனப்புமிக்க மகளிர். "பொன்படு நெடுங்கோட்டு இமையத் துச்சி, வானர மகளிர்[4]" எனவும், "தென்னன் தொடாஅ நீரிழி மருங்கிற் கல்லளைக் கரந்த அவ் வரையரமகளிர் [5]" எனவும் சான்றோர் இம்மகளிரைக் குறித்தல் காண்க.

மனைக்கண் தன்சொல்லைத் தேறியிருப்பவள், கானத்தின்கண் உருவெளிப் பாட்டால் காட்சி தருதலின், **வானர மகளோ** என்றான். தன்னை நினைந்து வருந்திய வானம்

---

1. புறம். 198. 2. பட்டி. 3-4. 3. ஐங். 39.
4. நற். 356. 5. அகம். 342.

பாடியின் வறுமையைக் களைந்து அமையாது காட்டின் கண்ணும் பெய்து அதனைச் சிறப்பித்த மழைபோல, நின்னை உள்ளி வருந்திப் போதருவேனுக்கு நெறியிடைத்தோன்றி என் வருத்தம் களைந்து, அதனோடமையாது மனைக்கட் போந்து சுற்றம் தழுவியும் விருந்தோம்பியும் மனையறம் சிறப்பித்தாய் என மனைமாண்பு பாராட்டியவாறு. (அ)

419. உயிர்கலந் தொன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துற லறியா விருந்து கவவி
நம்போ னயவரப் புணர்ந்தன
கண்டிகு மடவரல் புறவின் மாவே.

இஃது, இன்பநுகர்ச்சிக் கேற்ற பருவம் வந்துழித் தலைமகளோடு புறவிற் சென்ற தலைமகன் அவ்விடத்து மாக்களை அவட்குக் காட்டிச் சொல்லியது.

உரை : மடவரலே, இக்காட்டில் வாழும் விலங்குகள் உயிரோடு கலந்து ஒற்றுமைப்பட்ட குற்றமில்லாத நட்பினால், பிரிந்து இருத்தலை அறியாத துணைவிலங்கு போந்தவிடத்து அவற்றிற்கு விருந்தயர்ந்து, நம்மைப்போல் விருப்பம்வரப் புணர்ந்தன, காண் எ-று.

புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என்னும் நட்புக்காரணம் மூன்றனுள் உடனுயிர் நீங்கும் நட்புப் பயத்தற் சிறப்பினையுடைய உணர்ச்சியொத்தலை **உயிர்கலந் தொன்றிய கேண்மை** என்றும், உயிரொன்றிய கேண்மையின் பயன், ஒருவர் ஒருவர்பால் நிகழும் குற்றம் கடிந்து குறை தவிர்த்து நன்னெறிக்கண் உய்ப்ப தாகலான், அதனைச் **செயிர்தீர் கேண்மை** என்றும் கூறினர். **பிரிந்துறல்,** பிரிந்திருத்தல். விலங்கினம் ஆணும் பெண்ணுமாய்ப் பிரிவின்றி எங்கும் இணைந்தே செல்லும் இயல்பினவாதலால், **பிரிந்துறல் அறியா** எனல் வேண்டிற்று. **அறியா விருந்து** என்றதனை அறியா இருந்து என்று கொள்ளினுமாம். கவவுதல், ஈண்டு ஓம்புதற் பொருட்டு.

பிரிந்துறல் அறியா என்றான், மக்களைப் போல் பெண்ணொடு போகாமையாகிய வரையறையின்மையின். பிரிந்து சென்றோர் மீண்டு போந்துழி, அவர் பிரிவாற்றியிருந்த துணைவியர் அவர்க்கு விருந்தயர்தல் முறையாகலின், **விருந்து கவவி** என்றான். "நேரிறைப் பணைத்தோட் கார் விருந்தாக[1]" என்றும், "தேர்தரு விருந்து[2]" என்றும் வருமிடமெல்லாம் இதனை உரைத்துக்கொள்க. விருந்தயர்தல் விதியாதல், "தேரோன் மலைமறையத் திங்குழல் வெய்தாக, வாரான் விடுவானோ வாட்கண்ணாய்—காரார், குருந்தோடு முல்லை குலைத்தனகாண் நாமும், விருந்தோடு நிற்றல் விதி[3]" என்பதனால் அறிக. புணருந்தொறும் புத்தின்பம் சுரந்து விருப்பம் செய்தலின், **நயவரப் புணர்ந்தன** என்றான். (கூ)

420. பொன்னென மலர்ந்த கோன்றை மணியெனத்
தேம்படு காயா மலர்ந்த தோன்றியொடு
நன்னல மெய்தினை புறவே நின்னைக்
காணிய வருதும் யாமே
வாணுத லரிவையொ டாய்நலம் படர்ந்தே.

இது, குறித்த பருவத்து எய்துவான் அணித்தாக வந்த தலைமகன், பருவத்தால் அணிகொண்ட புறவை நோக்கிச் சொல்லியது.

உரை: கானமே, பொன்போல மலர்ந்த கொன்றையும், நீலமணி போலும் தேன்மிக்க காயாவும், மலர்கள் நிறைந்த தோன்றியுமாகிய இவற்றான் மிக்க அழகெய்தி விளங்குகின்றனை யாகலின், ஒளிபொருந்திய நெற்றியினையுடைய அரிவையாகிய காதலியையும் அவளது அழகிய நலத்தினையும் உள்ளி, நின்னைக்காண்டற்கு, யாம் வருகின்றேம் எ. று.

---

1. ஐங். 468.　　2. ௸. 451.　　3. திணை. 150–112.

கொன்றை பொன்னென மலர்தலைப் பிருண்டும் "குறுங்காற் கொன்றை, அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும் [1]" என்றாற்போலப் பன்முறையும் கூறுப. "சிறுகுழி, கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர், பொன்பெய் பேழை மூய்திறந்தன்ன, காரெதிர் புறவு [2]" எனப் பிறரும் கூறுவர். காயா நீலமணிபோல மலர்தலை, "பொன்னெனக் கொன்றை மலர மணியெனப், பன்மலர்க் காயாங் குறுஞ் சினை கஞலக், கார்தொடங்கின்றே காலை [3]" என்றும், "மணிமருள் பூவை யணிமலர் [4]" என்றும் பயின்று வரும் சான்றோர் கூற்றுக்களால் அறிக. **தோன்றி**, வெண்ணிற முடைய பூ வகை. பொன்னும் மணியும் வெள்ளியுமுடை யாரை நன்னல மெய்தினோர் என்னும் வழக்குப்பற்றிக் கொன்றையும், காயாவும், தோன்றியும் பூத்த புறவினை **நன்னலம் எய்தினை புறவே** என்றது ஒருநயம். கொன்றை யும் காயாவும் தோன்றியும் மலர்ந்து கானம் இனிய காட்சி வழங்குதலின், **நன்னலம் எய்தினை புறவே** என்றும், நல மெய்தியதனைச் சென்று கண்டு நலம் பாராட்டுவது அறிவுடையோர்க்கு இயல்பாதலின், **நின்னைக் காணிய வருதும் யாமே** என்றும் கூறினான்.

இன்பநுகர்ச்சிக் குரிய பருவமாகலின், **காணிய வருதும் யாமே** என்றும், தனியவரை முனிவுசெய்யும் தன்மைத் தாகலின், **வாணுதல் அரிவையொடு** என்றும், புறவினை நோக்கி, **நன்னலமெய்திய நின்னை வாணுதல் அரிவையொடு காணிய வருதும்** என்றவழி, தலைமகள் உள்ளத்தில் புலவி யும் துனியும் பிறக்குமென்றஞ்சி, அரிவையொடு **ஆய்நலம் படர்ந்து** என்றும் உரைத்தான். (ம)

---

1. ஐங். 430. 2. குறுந். 233. 3. நற். 242.
4. அகம். 134.

43. விரவுப்பத்து.

இதன்கண், முல்லைத்திணைக்குரிய ஒழுக்கங்களில் தலைமகன் பிரியாமைக் கேதுவாகிய காதலை உணர்ந்தோர் கூற்றும், பருவவரவு குறித்தும், பிரியுங்கொல் என்று தலைமகள் ஐயுற்றவழித் தலைமகனைத் தேற்றுதல் குறித்தும் தலைமகன் நிகழ்த்தும் கூற்றும் தோழி கூற்றுமாகப் பலருடைய கூற்றுக்களும் விரவி வருதலின், இப்பெயர்த் தாயிற்று.

421. மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்
புன்புல நாடன் மடமகள்
நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே.

இது, வினை பலவற்றிற்கும் பிரிந்தொழுகும் தலைமகன் பின்பு மனைவயின் நீங்காது ஒழுகுகின்ற காதல் உணர்ந்தோர் சொல்லியது.

ப. உரை : **வேண்காழ்** என்றது மாலைக்காலத்து முயலெறியும் தடியை.

உரை : புனங்காவலர் தம் கையிலுள்ள குறுந்தடியை மாலைக்காலத்தே நிலத்தே எறிதலால் நறிய பூக்கள் நிறைந்த காட்டின்கண் ஒடுங்கியிருக்கும் முயல்கள் ஓசைகேட்டு அஞ்சி நீங்கியோடும் புன்புலங்களையுடைய நாடனுடைய மடப்பம் பொருந்திய மகளின் அழகுமிக்க மூங்கில்போலும் தோள்களே தலைமகன் செலவினை மறுத்தொழித்தன எ. று.

காழ்ப்பேறிய குறுந்தடியைக் காழ் என்றது ஆகுபெயர். நன்கு காழ்த்தது கருத்திருக்குமாகலின், **வெண் காழ்** என இதனைச் சிறப்பித்தார். **புன்புலம்**, புன்செய்.

"புன்புல மயக்கத்து விளைந்தன தினையே [1]" என இந் நூலின்கண்ணும், "கான வைப்பிற் புன்புலத்தானே [2]" எனக் குறுந்தொகையின் கண்ணும் சான்றோர் வழங்குதல் காண்க. **பணைத்தோள்**, பருத்ததோள் என்றுமாம்.

அவன் செலவு விலக்குதற்கு அவள் மாட்டுக் கொண்ட காதல் ஏதுவாயினும், முயக்கின்பந்தரும் நலம் குறித்து **நலங்கிளர் பணைத்தோள்** என்றார். காவலர் வெண்காழை வெறிதே வீசிய வழியும் புதலின்கண் ஒடுங்கி யிருந்த முயல் அஞ்சி நீங்கும் எனவே, தலைமகன் பிரிவு கருதியவழி மனைக்கண் உறையும் தலைமகள் பிரிவஞ்சித் தோள் மெலிந்து மேனிநலம் குன்றுவள் என்றவாறும். "ஏனோர்க் காயின் இடம் வரைவின்றே [3]" என்றதனால் முல்லைக்குரிய முயலைக் கூறினர். (க)

422. *கடும்பரிப் புரவிக் கால்வ னெடுந்தேர்*
நெடுங்கொடி முல்லையொடு தளவுமல ருதிர
விரையுபு கடைஇநாம் செல்லின்
நிரைவளை முன்கை வருந்தலோ விலளே.

இது, மீள்கின்ற தலைமகன் தன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

உரை : பாக, கால் வலிமைபெற்ற நெடிய தேரின்கட் பூட்டிய மிக்க செலவினையுடைய குதிரைகளை, நீண்ட முல்லைக்கொடியும் செம்முல்லையும் தம்மலர்கள் உதிருமாறு விரையக்கடவிச் செல்வேமாயின், நிரையே தொடுத்த வளை அணிந்த முன்கையினையுடையாள் வருந்துதல் இலளாவள் எ, று.

---

1. ஐங். 260. 2. குறு. 183. 3. தொல். பொ. 302.

காலவல் நேடுந்தேர்க் கடும்பரிப் புரவி யென்று இயையும். "கடலோடா கால்வல் நேடுந்தேர் [1]" என்றார் பிறரும். **கால்**, உருளையுமாம். **கடும்பரி**, விரைந்த செலவு. **கால்வல் நெடுந்தேர்** என்றது, எத்துணைக் கடுகிச்செல்லினும் நெறி மிக்க ஏற்றிழிவுகளையுடையதாயினும் ஊறு படாத திண்மையும் வன்மையும் உடைமை தோன்ற நின்றது. **நிரைவளை முன்கை**, நிரையாக வளையணிந்த முன்கையினை யுடையவள் என விரிதலின், அன்மொழித் தொகை. "நிரைவளை முன்கை நேரிழை மகளிர் [2]" என்று பிறரும் குறிப்பர்.

தான் செல்லும் பெருவழி, கார்மழையால் தழைத்து முல்லை முதலியன மலர்ந்து விளங்கும் கானத்தின் இடையே கிடத்தலின், **முல்லையொடு தளவுமலர் உதிர** என்றான்; "தளவம் முல்லையொடு தலைஇத் தண்ணென, வெறிகமழ் கொண்ட வீததை புறவின் நெட்டிடை [3]" என்று பிறரும் கூறுவது காண்க. வினை முற்றியவழித் தோன்றிய இன்பம் காதலியின் பிரிவு வருத்தத்தை நெஞ்சின்கண் தோற்றுவித்தமையின், விரைந்துசென்று அதனைக் களைதல் வேண்டுமென்ற விழைவுமிகுதியால், **விரையுபு கடைஇ நாம் செல்லின்** என்றான். **செல்லின்** என்றது செல்லுதல் வேண்டுமென்பது வற்புறுத்தி நின்றது. காதல் நினைவால் உள்ளம் குழைந்து பாகனொடு உரையாடுதலின், **நாம் செல்லின் நிரைவளை முன்கை வருந்தலோவிலள்** என்றான். பிறண்டும், "வீங்குபரி முடுகச் செலவு நாம் அயர்ந்தனமாயின், ... கலங்கினளுறைவோள் கையறு நிலை .... களையு மிடனால் பாக [4]" என்று தலைமகன் உரைத்தல் காண்க.

முல்லையும் தளவமும் மலர்ந்து யாம் குறித்த பருவ வரவினை யுணர்த்தலின் அவள் ஆற்றாது வருந்துவாளாகலின், அவ்வருத்தம் இன்றாமாறு தேரினை விரைந்து கடாவுக என்பதாம். இதனால் வினைமுற்றி மீள்வோன் உள்ளத்துக் காதல்மிகுதி நன்கு புலப்படுமாறு காண்க. (உ)

---

1. குறள். 496. 2. குறுந். 335. 3. அகம். 254.
4. ஷை. 64.

423\. *மாமழை யிடியூஉத் தளிசொரிந் தன்றே*
வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே
யாமே நிற்றுறந் தமையலம்
ஆய்மல ருண்கணு நீர்நிறைந் தனவே.

இது, கார்ப்பருவத்தே பிரியக் கருதிய தலைமகற்குத் தோழி தலைமகளின் ஆற்றுமை கூறிச் செலவழுங்குவித்தது.

ப. உரை: இது கார்ப்பருவத்தே கூறுதலான் முல்லையாயிற்று.

உரை: கரியமேகம் இடித்து மழைபெய்தலைச் செய்யா நின்றது; இந்நிலையில் ஒளிபொருந்திய நுதல் பசலை பாயும் வண்ணம் நீ செலவு மேற்கொள்வாயாயினை; இனி, அழகிய மலர்போலும் மையுண்ட கண்கள் நீர் சுரந்து நிறைந்தனவாகலின், யாம் நின்னைப் பிரிந்து உறைதலை ஆற்றேம் எ. று.

மின்னி யிடித்து மிகுபெயல் பொழிவதாயிற்றென்றற்கு, **இடியூஉத் தளிசொரிந்தன்று** என்றுர். செலவயர்தல், செலவினை மேற்கொள்ளல். "நீயே செய்வினை மருங்கிற் செலவயர்ந்து யாழ நின் கைபுனை வல்வில் ஞாண் உளர்தீயே[1]" என்பது காண்க. தலைமகள்பால் தோழிக்குள்ள உரிமைபற்றி **யாம்** எனப் பன்மை வந்தது. "ஒன்றித் தோன்றும் தோழி மேன[2]" என்பர் ஆசிரியர். **அமையலம்** என்றது வாழேம் என்பதுபட நின்றது. உண்கண் நீர் நிறைந்தன என்றது, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது.

வினை செய்தற்குக் கார்ப்பருவம் சிறப்புடைத் தன்மையின், **மாமழை இடியூத் தளி சொரிந்தன்று** என்றும், நின்னெடுகூடி இனிது **இருத்தற்** குரிய இப்பருவத்தே நீ

1\. கலி. 7. 2. தொல். பொ. 39.

பிரிந்தவழித் தலைமகள் பசலைபாய்ந்து நலம்கெடுதல் ஒரு தலையாகலின், **வாணுதல் பசப்ப** என்றும், நீ பிரியக் கருதினை யென்பது உணர்ந்த மாத்திரையே ஆற்றுளா யினுள், பிரிந்தவழி உயிர்வாழாள் என்பாள், **யாமே நிற் றுறந்து அமையலம்** என்றும் கூறினுள். பசப்பினுல் "பாழ் பட்ட முகத்தோடு பைதல் கொண் டமைவாளோ, ... தாமரைப் பொய்கையுள் நீர்நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ [1]" எனப் பிருண்டும் தோழி செலவழுங்கு வித்தல் காண்க. "இணைமயக்குறுதலும் கடிநிலையிலவே, நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப, புலனன் குணர்ந்த புலமையோரே [2]" என்றதனுல், முல்லைக்கண் பாலை வந்து மயங்கிற்று. (௩)

424. *புறவணி நாடன் காதன் மடமகள்*
ஒண்ணுதல் பசப்ப நீசெலின் தெண்ணீர்ப்
போதவிழ் தாமரை யன்னநின்
காதலம் புதல்வ னழுமினி முலைக்கே.

இதுவுமது.

உரை : காடுகளால் அழகுற்ற நாடனுடைய மடமகள் ஒள்ளிய நுதல் பசப்பெய்தும் வண்ணம் நீ பிரிந்து செல்வா யாயின், தெளிந்த நீர்க்கண் மலர்ந்த தாமரை போலும் நின் அன்புடைய புதல்வன் முலைப்பாலின்பொருட்டு அழுவன் எ. று.

மடமகள் ஒண்ணுதல் பசப்ப நீ செலின், புதல்வன் முலைக்கு அழுவன் என இயையும். **முலை,** ஆகுபெயர். அம், அல்வழிச்சாரியை. புதல்வரைத் தாமரைப் பூவோடு உவமித்தல், சான்றோர் மரபு. "திண்கதிர் மதாணி யொண் குறு மாக்களை, யோம்பினர்த் தழீஇத் தாம் புணர்ந்து

3. கலி. 5. 4. தொல். பொ. 12.

முயங்கித், தாதணி தாமரைப் போது பிடித்தாங்குத், தாமு மவரும் ஓராங்கு விளங்க[1]" என்பது காண்க.

மகளிர் இளமைக்கண் தந்தை தன்னையரையும் பின்னர்க்கொழுநனையும் சார்ந்துறையும் மரபினரேயன்றித் தனித்துறை தகுதிய ரல்லராதலின், கொழுநனாகிய நீ நெஞ்சால் துறந்து பிரிந்து செல்லக் கருதுதலால், நின் மனையோள் என யாம் கூறற்கு இயைபின்று என்பாளாய்ப், **புறவணி நாடன் காதல் மடமகள்** என்றும், நீ செல்லக் கருதிய துணையே இவள் நுதல் பசப்பதாயிற்று என்றற்கு **ஒண்ணுதல் பசப்ப** என்றும், பிரிந்தவழி உறுவது கூறிச் செலவழுங்குவிக்கும் குறிப்பால் **நீ செலின்....நின் காதலம் புதல்வன் அழும் இனி முலைக்கே** என்றும் கூறினாள். தலைமக்களது தலைமை வாழ்வின் பயன் மகப்பே றாதலின், புதல்வனைக் **காதலம் புதல்வன்** என்றும், நின் பிரிவால் நின் மனையாள் உயிர்வாழா தொழிதலால் பெரும்பொருட் பேறாய் வந்த நின் புதல்வன் வாழ்வும் இடையூறுபடும் என்பாள், **முலைக்கு அழும்** என்றும் கூறினாள். "மக்களை இல்லோர்க்குப் பயக்குறை யில்லைத்தாம் வாழும்நாளே[2]" எனச் சான்றோர் உரைப்பது காண்க. **தெண்ணீர்ப் போதவிழ் தாமரை**யை மகற்கு உவமம் கூறினாள், தலைவியைத் தெண்ணீராகவும், மகனைத் தாமரைப் போதாகவும் காட்டி, தாமரைப்போதின் வாழ்வு நீர்மேல் நிற்றல் போல, நின் புதல்வன் வாழ்வு நின் மனையவள் மேல் நிற்கிறதேயன்றி நின் காதல்மேல் இல்லையென்பது குறித்தற்கு.

"பெறற்கரும் பெரும்பொருள்[3]" என்ற சூத்திரத்துப் "பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்" என்றவிடத்துப் பிறவும் என்பதனால் இப்பாட்டு "எதிரது நோக்கிற்று" என்பர் **நச்சினார்க்கினியர்**.

(௪)

1. மதுரை. 461-4. 2. புறம். 3. தொல். பொ. 150.

425. புன்புறப் பேடை சேவ லின்புற
மன்ன ரியவரி னிரங்குங் கானம்
வல்லை நெடுந்தேர் கடவின்
அல்ல லருநோ யொழித்தலெமக் கெளிதே.

இது, வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

உரை: புல்லிய புறச்சிறகினையுடைய பெடைப்புள் தன் சேவல் மகிழ்வு மிகுமாறு, மன்னர் பாங்கிருக்கும் வாச்சியக்காரர் போல இசைக்கும் காட்டினை, நெடிய தேரினை விரையச் செலுத்திக் கடந்து நீங்கின், நம் பிரிவால் காதலிபால் உளதாகிய பொறுத்தற் கரிய துன்பத்தைத் தீர்த்தல் எமக்கு எளிதாகும் எ. று.

எனவே, விரையச் செலுத்துவாயாக என்றானும். இது குறிப்பெச்சம். **புன்புறப்பேடை** யென்றது தவிட்டுப் புறு என்னும் ஒருவகைப்புள். "புன்புறப் புறவின் கணநிரை[1]" என்பது காண்க. மாற்றார் படைத் தோற்றத்தினைத் தம் சினமிகுதியால் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழ நோக்கி யிசைக்கும் இயல்பினராகலின், **மன்னர் இயவர்** என்றார். இதனை, "பேஎ மன்ற பிறழ நோக்கு இயவர்[2]" என்றதனாலும் அதனுரையாலும் உணர்க. இவ்வுவமையால், இப்புள்ளும் எடுத்தும் படுத்தும் கோட்டியும் பலபடப் பிறழ நோக்கி யிசைத்தல் கொள்க.

மேற்கொண்ட வினைமுற்றி மீண்டுவரும் தலைமகற்குப் புறுவின்பெடை தன்சேவலை மகிழ்விப்பான் முரலும் இசை, தன் மனத்தின்கண் தலைமகள் வருந்தும் வருத்தத்தை நினைப்பித்து நோய் செய்தலின், **புன்புறப்பேடை சேவல் இன்புற இரங்கும் கானம்** என்றும், தேரூர்ந்துவரும் தனக்கு

1. பதிற். 39. 2. ஷை. 78.

அதன் இசை செவி வழியாக உள்ளத்தை அலைத்தலின், கானத்தை விரைந்து கடத்தற்கண் எழுச்சியையும் காதலியைக் காண்டற்கண் பெருவிதுப்பையும் மிகுவித்தலின், **வல்லே நெடுந்தேர் கடவின்** என்றும், சென்று இன்புறலாம் என்றலினும், சென்று தலைவியது துன்பத்தை விரைவிற் களையலாம் என்றல் தன் தலைமைக்கு ஒத்திருத்தல் பற்றி, **அல்லல் அருநோய் ஒழித்தல் எமக்கு எளிதே** என்றும், விரைந்த செலவல்லது மருந்து பிறிதில்லை என்றற்கு **அல்லல் அருநோய்** என்றும் கூறினான்.

வினைமுற்றி மீள்கின்றானாதலால், தன் பிரிவாற்றாது தலைமகள் வருந்துதலையும், தான் துயருழத்தலையும் உட்கொண்டு கூறுகின்றானாகலின், **அல்லலருநோய்** *என்றான்.*

426. *வென்வேல் வேந்த னருந்தொழி* லறந்தினி
நன்னுதல் யானே செலவொழிந் தனனே
முரசுபா டதிர வேவி
அரசுபடக் கடக்கு மருஞ்சமத் தானே.

இது, வேந்தற்குத் தானைத்தலைவனாய் ஒழுகும் தலைமகன் பிரிந்து வினைமுடித்து வந்து தலைவியோடு உறைகின்றுழி, "இன்னும் பிரியுங்கொல்" என்று கருதிய தலைமகட்குக் கவற்சி தீரச் சொல்லியது.

உரை: நல்ல நெற்றியினையுடையாய், முரசொலி மிக்கெழத் தானையைச் செலுத்திப் பகையரசரை வஞ்சியாது எதிர்சென்று வெல்லும் தடுத்தற்கரிய போர்க்களத்தின்கண் வென்றிதரும் வேலேந்திய அரசன் விலக்குதற் கரிய போர் வினையைத் தவிர்ந்தானாகலின், இப்பொழுதின்கண் யான் வினைமேற் சேறலைத் தவிர்ந்தேன், காண் எ. று.

வென்வேல் வேந்தன் என்றும், அருந்தொழில் என்றும் கூறியது, போர் மேற்கொண்ட வழி வென்றி எய்துவது ஒருதலை யென்றவாறு. **அருமை,** மாறெதிர்தற் கருமை. தப்பாது வென்றிதரும் வேலையுடையனாகலின், அவனது

தொழில் **அருந்தொழில்** எனப்பட்டது. **துறந்து** என்றது, காரணப்பொருட்டு. போர் மறவர்க்குப் போர் செய்தற்கண் மனவெழுச்சி மிகுதற்கு அறையும் முரசு முழக்கம் **முரசு பாடு** எனப்பட்டது.

வினைமுடியுமுன் தொழில் துறந்திருத்தல் ஆண்கடன் அன்மையின், போர்வினை தொடங்குதற்கு முன்பே தவிர்ந்தமை தோன்றத் **தொழில்துறந்து** என்றும், தவிர்ந்துழி மேற்சேறலின்மையின், யான் மீட்டும் பிரிந்து செல்வேன் எனக் கவலற்க என்பான், யான் **செலவொழிந்தனனே** என்றும், துறந்தினிச் செல்வான் கொல்லோவென மருண்ட குறிப்பினளாகலின், **நன்னுதல்** என்றும் கூறினான். கேட்ட பகைவர் உள்ளத்திலும் போர்நிகழும் இடத்திலும் அதிர்ச்சி தோன்றுதலின், **அதிர ஏவி** என்றும், யானை முதலிய விலங்குகளையும், தானை மறவரையும் பொருதழித்தலினும் மன்னரொடு பொருதுவேறல் தலையாய மறமாண்பாதலின் அதனையே விதந்து **அரசுபடக் கடக்கும் அருஞ் சமம்** என்றும் கூறினான். (௬)

427. *பேரமர் மலர்க்கண் மடந்தை நீயே*
காரெதிர் பொழுதென விடலொல் லாயே
போருடை வேந்தன் பாசறை
வாரா னவனெனச் செலவழுங் கினனே.

இது, பிரியுங்கோல் என்று ஐயுற்று உடன்படாமை மேற்கொண்டு ஒழுகுகின்ற தலைமகட்குத் தான் பிரிவு ஒழிந்ததற்குக் காரணம் கூறித் தேற்றியது.

உரை : பெரியவாய் அமர்த்த மலர்போலும் **கண்களை** யுடைய மடந்தையே. இப்பொழுது கார்ப்பருவம் தொடங்கிய அணிமைக்காலமாதலைக் **கண்டு** நீ பிரிவுக்கு இசையாயாயினை ; போரேற்றுநின்ற அரசனும் பாசறை இருப்புக்கு அவன்தன் **காதலியைப் பிரிந்துவாரானெனக் கருதிச் செல்** வழுங்குவானாயினன், **காண் எ. று.**

தலைமகன் பிரிந்து செல்வன்போலும் என நினைந்து மருண்டு நோக்கிய தலைவிகுறிப்பினைப் **பேரமர் மலர்க்கண்** என்றதனாற் பெறவைத்தார். **மடந்தை,** ஈண்டுப் பருவப் பெயர். **காரெதிர் பொழுது,** கார்காலம் தொடங்கிய அணிமைப்போழ்து; "புலன் அணிகொண்ட காரெதிர்காலை [1]" என்று பிறரும் கூறுதல் காண்க. "மன்னுயிர் புரைஇய வலனேர் பிரங்கும் கொண்டல் தண்டளிக் கமஞ்சூல் மாமழை, காரெதிர் பருவம் [2]" என்றதனால் இதன் இயல் புணர்ந்துகொள்க. **செலவழுங்கல்,** ஈண்டுச்செல்லுதலைத் தவிர்த்தல். வேந்தனும் என்றவிடத்து எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. **அவன்** என்றது தன்னை.

மேற்கொண்ட வினைமேல் கருத்தைச் செலுத்திய கொழுநற்குக் கார்ப்பருவ வரவுகாட்டிப் பிரிவச்சத்தால் மருண்டு நோக்கினமை தோன்ற, **காரெதிர் பொழுதென விடல் ஒல்லாய்** என்றும், தான் தன் காதலிமாட்டுக் கொண்டுள்ள அன்பினைத் துணைவேந்தர் நன்கறிவாரென்பான், **வாரான் அவனெனச் செலவழுங்கினனே** என்றும், செலவிடை அழுங்குதல் வன்புறை குறித்தமையின், வற்புறுத்துப் பின் பிரிவன்போலும் என ஐயுறுமைப் பொருட்டுத் தன் நண்பனுன வேந்தன் **வாரான் அவன் எனக்** கருதினனென்றும் கூறினன். **அவன்** என்றது பகை அரசனை என்பாருமுளர். (எ)

428. தேர்செல வழுங்கத் திருவிற் கோலி
ஆர்கலி யெழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழி லொழிய
யான்றொட்ங் கினனா னிற்புறந் தரலே.

இது, பிரியுங்கொல் என்று ஐயுற்ற தலைமகள் ஐயந்தீரத் தலைமகன் சொல்லியது.

---

1. அகம். 304. 2. பதிற். 24.

உரை: நிறைந்த முழக்கத்தையுடைய மழைமுகில் இந்திர வில்லையிட்டுத் தேர் செல்லாவகை மிக்க பெயலைத் தொடங்கிற்றாகலின், வேந்தன்தான் ஏவிய விழுமிய வினையைத் தவிர்த்தலால் நின்னைப் புறந்தருதலாகிய இனிய தொழிலை யான் தொடங்கினேன் எ. று.

ஒழிக்கப்பட்ட தொழிலது விழுப்பத்துக்கேற்பத் தொடங்கப்பட்டதன் இனிமை வருவிக்கப்பட்டது. **திருவில்,** வானவில்; "மலைமிசைக் குலைஇய வுருகெழு திருவிற், பணைமுழங் கெழிலி [1]" என்றும், "திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ [2]" என்றும் வருவனவற்றா லுணர்க. கோலுதல், வளைத்தல்; ஒண்கதிர் தெருமைச் சிறகரிற் கோலி [3]" என்றாற்போல. **சோர்,** முதனிலைத் தொழிற்பெயர். **ஆர்கலி யெழிலி** யென்றற்குக் கடல் நீரை முகந்தெழுந்த எழிலி யெனினுமாம். "வேந்துவிடு தொழிலொடு செலினும் [4]" என்றாற் போலாது விழுத் தொழில் என்றது, தூதினை. மறம் மிக்குப் பொருதற் கமைந்த அரசரைச் சந்துசெய்வித்தலின் விழுமியது பிறிதின்மையின், **விழுத்தொழில்** எனப்பட்டது. "வேந்து விடு விழுத்தொழி லெய்தி [5]" என்புழியும் இதனையே கூறிக் கொள்க. **ஒழிய** என்றது காரணப்பொருட்டாய செய வெனெச்சம்.

மிகுமழை பெய்தலால் செலவிற்குரிய தேர்கள் இனிது செல்லாவாறு நெறிகள் சீர்கெட்டிருக்கின்றன என்றற்கு, **தேர் செலவழுங்க** என்றும், நிறைந்த ஆரவாரத்துடன் மழை இடையறாது பெய்வது தோன்றச் **சோர் தொடங்கின்று** என்றும், இக்காரணத்தால், வேந்தன் தானும் விடுப்பது கருதிய விழுத்தொழிலைக் கைவிட்டான் என்றற்கு **வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய** என்றும், புறத்தே வேந்தர்க்கும் அகத்தே நினக்கும் விழுத்தொழில் புரிதற்குரிய

---

1. அகம். 84. 2. கார். 1. 3. அகம். 208.
4. குறுந். 242. 5. ஐங். 466.

யான், வேந்துவிடு விழுத்தொழிலை விட்டவழி நின்னைப் புறந்தருதலாகிய இனிய தொழிலை யான் மேற்கொண்டேன் என்பான், **யான் தொடங்கினுல் நிற் புறந்தரலே** என்று கூறினுன்.

இது "கரணத்தி னமைந்து முடிந்த காலை [1]" என்ற சூத்திரத்து, "வேற்றுநாட் டகல்வயின் விழுமத்தானும்" என்றவிடத்து விழும வகையுள் "இஃது ஐயந்தீர்த்தது" என்பர் **நச்சினர்க்கினியர்.** (அ)

429. பல்லிருங் கூந்தற் பசப்பு நீவிடின்
செல்வேந் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி யரண முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே.

இது, குறிப்பினுற் பிரிவுணர்ந்து வேறுபட்ட தலைமகள் உடம்படுவாளாக வேந்தற்கு உற்றுழிப் பிரியும் தலைமகன் சொல்லியது.

உரை: பலவாகிய கரிய கூந்தலையுடையாய், நீ பசத் தலைக் கைவிடுவாயாயின், பகைவர் வெல்லுதற்கெடுத்த கொடிகளையுடைய அரணங்களை அழித்த, போர்ப்பயிற்சி யில்லாத யானைகளையுடைய வேந்தனது பகையினை வெல் லுதற்பொருட்டு, யாம் வினைவயிற் செல்வேம் எ. று.

கல்வி, போர்ப்பயிற்சி; அஃதாவது போரில் பகைவரைக் கொலை பயிறல்; "சுரும்பார் கண்ணிப் பெரும்புகல் மறவர், கடுங்களி றோட்டலின் காணுந ரிட்ட, நெடுங் கரைக் காழகம் நிலம்பர லுறுப்ப [2]" என்பதன் உரையா லுணர்க. "அமரகத் தாற்றறுக்கும் கல்லா மா [3]" என்றார் பிறரும். நான்கனுருபு, இன்றியமையாமைப் பொருட்டு. **விடின்** என்பது விடுதல் வேண்டுமென்பதுபட நின்றது. விடாமையின் யாம் செலவழுங்குகின்றேமென்பது எஞ்சி நிற்றலின், **தில்**, ஒழியிசை.

1. தொல். பொ. 146. 2. மதுரை. 596-8. 3. குறள். 814.

தலைமகள் உடன்படாது மேனிவேறுபடத் தொடங்கி னமையின், **பசப்பு நீ விடின்** என்றும், "நாளும் நாளும் ஆள்வினை யழுங்க, இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லை யால் புகழ்[1]" என்பது குறித்துக் கவன்று உரைத்தலின், **செல்வேம் தில்ல யாமே** என்றும், தான் துணைபுரிதற்குச் செல்லும் வேந்தனது வலியை, **செற்றார் வெல்கொடி அரணம் முருக்கிய வேந்து** என்றும், அத்துணை வலியுடைய னுயினும், யானைப்படை போதிய கல்வியில்லாத தாகலின், தனது துணை இன்றியமையாதென்றற்குக் **கல்லா யானை வேந்து** என்றும் கூறினுன். (கூ)

430. நெடும்பொறை மிசைய குறுங்காற் கொன்றை
அடர்பொன் னென்னச் சுடரிதழ் பகரும்
கான்கெழு நாடன் மகளே
அழுத லான்றிசின் அழுங்குவல் செலவே.

இது, பிரியுங்கோல் என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் பருவவரவு கூறி, 'இது காரணத்தாலும் பிரியேன்' எனச் சொல்லியது.

ப. உரை : கொன்றை தான் பொன்னென மலர்ந்த பூக்களைச் சொரியும் என்றது, பருவங்காட்டித் தான் செல்லாமை வற்புறீஇயது.

உரை : நெடிய மலைமேல் நின்ற குறுகிய அடியினை யுடைய கொன்றைமரம் பொற்றகடுபோல ஒளிவிடும் இதழ்கள் பொருந்திய மலரைப் பரப்பும் கானம் பொருந்திய நாடன்மகளே, நீ அழுதலினின்றும் அமைவாயாக; யானும் செலவினைத் தவிர்வேன், காண் எ. று.

பொறை, மலை. **பொன்னடர்** என்பது அடர்பொன் என வந்தது; "அடர்பொன் சிரகத்தால் வாக்கி[2]" என் புழிப்போல. பகர்தல், ஈண்டு உதிர்ந்து பரத்தல். **அழுத**

1. சிற்றட்ட. பாலை. 2. கலி. 51.

லான்றிசின். அழுதலினின்றும் அமைவாயாக என்பது. சின், முன்னிலையசை. "இனைதல் ஆனாளாக[1]" என்றாற் போல. அழுதல் ஆனாமை; தொடர்ந்து அழுதல் மேற்றும். "முயங்க லான்றிசின் யானே[2]" என்பது முயங்கற்கண் அமைந்தேன் என்னும் பொருளதாதல்போல. கொன்றை, தொடுத்த மாலைபோற் பூப்பதாகலின், உதிர்வன இதழ் களேயாதல்பற்றிச் **சுடர் இதழ் பகரும்** என்றார். "செல விடை யழுங்கல் செல்லாமை யன்றே[3]" என்பதனுள் செல்லாமைப் பொருளு முண்டாகலின், தவிர்வேன் என்று பொருள் உரைக்கப்பட்டது.

கொன்றை சுடரிதழ் பகரும் என்றதனுற் கார்ப்பருவ வரவு கூறி, அப்பருவத்தே பிரிதல் பெரியதோ ராற்றுமை பயக்குமாகலின், **அழுங்குவல் செலவே** யென்றும், இனி அது நினைந்து அழாதே, கொள் என்பான், **அழுதலான்றி சின்** என்றும் கூறினன். கொன்றை பொன்போல இதழ் களைச் சொரியும் கான்கெழு நாடன்மகளே என்றது, அப் பெற்றியளாகிய நீ அழுதலை மேற்கொண்டு எனக்கு அவலம் நல்குதல் கூடாது என்பதாம். (௰)

---

1. புறம். 144. 2. ஷை. 151. 3. தொல். பொ. 185.

44. புறவணிப் பத்து.

காடு பலவகை மலர்கள் பூத்து அழகுதிகழ நின்றமை பொருளாகத் தொக்க பாடற் பகுதியாகலின், இப்பெயர்த் தாயிற்று. முல்லைக் காடாகிய புறவு கார்ப்பருவத்து மழை வரவால் தளிர்த்துப் பூக்து அழகிய காட்சி வழங்குதலின், அக்காட்சியை வியந்து **புறவணி** என்றும், அவ்வணியைப் பொருளாகக்கொண்ட பாட்டுக்கள் பத்தும் சேர்ந்த இப்பகுதியைப் **புறவணிப் பத்து** என்றும் பெயர் குறித் துள்ளனர்.

431. நன்றே காதலர் சென்ற வாறே
அணிநிற விரும்பொறை மீமிசை
மணிநிற வுருவின தோகையு முடைத்தே

இது, "பிரிவுடன்பட்டு ஆற்றுயாகின்றது என்னை?" என்று வினவியவழி, "அவர் போன சுரம் போகற்கரிது என்று ஆற்றேனுகின்றேன்" என்ற தலைமகட்கு, "வேனிற் காலம் கழிந்தது, கார்ப்பருவத் தோற்றத்திலே பிரிந்தா ராகலான், அச் சுரம் நன்று," எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

உரை: அழகிய நிறம்பொருந்திய பெரிய மலையின் மேலிடம் நீலமணிபோலும் நிறத்தினையும், அழகிய தோகை யினையுமுடைய மயில்களை யுடைத்தாகலின், காதலர் சென்ற நெறி போகற்கு அரிதன்று, நலமுடையது என்று தெளிக எ. று.

போகற்கு அரிதன்று என்பது முதலாயின குறிப் பெச்சம். **நன்றே** என்றவிடத்து ஏகாரம் தேற்றம். ஏனை யிடத்தும் இதுவே உரைத்துக்கொள்க. **மீமிசை** என்றது, மலையின் மேலிடம் உணர்த்திற்று. **மணி**, நீலமணி.

"மணிநிற மஞ்ஞை[1]" எனப்பிறரும் கூறுவர். **தோகை.** மயில். தோகையும் என்ற எச்ச உம்மையால், தண்ணிய நிழலும் இனிய நீரும் உடைமை கொள்க.

தலைமகள் சென்ற சுரநெறி வெம்மை மிகவுடைமையின், போகற்கு அரிதென்று எண்ணி ஆற்ருளாகிய தலைவி, தோழியை நோக்கி, காதலர் சென்ற நெறி நன்றுகொல் என வினவினமையின், அவள் வினவையே கொண்டெடுத்து **நன்றே காதலர் சென்ற ஆறு** எனத் தோழி கூறினள். வழியிடைத் தோன்றும் மலைகள், பசிய கானம் போர்த்துக் கார்வரலால் அழகிய காட்சி வழங்குகின்றன என்பாள், **அணிநிற இரும்பொறை** என்றும், மலையின் மேலிடம் மழைமுகில் தழுவிநிற்றல் கண்டு மயில்கள் தோகையை விரித்து மகிழ்ந்தாடும் காட்சி வழிநடை வருத்தத்தைக் காதலர்க்குத் தோற்றுவியாது இன்புறுத்தும் என்றற்கு **மீமிசை மணிநிற உருவின தோகையும் உடைத்து** என்றும், எனவே, அவர் சென்ற ஆறு போகற்கு அரிதென்று கவலற்க, நன்றே எனத்தெளிக என்றும் உரைத்தாள். (க)

432. நன்றே காதலர் சென்ற வாறே
சுடுபொன் னன்ன கொன்றை சூடிக்
கடிபுகு வனர்போன் மள்ளரு முடைத்தே.

இதுவுமது.

உரை: நம் தலைவர் சென்ற காட்டுநெறி ஒளிவிடும் பொன்போலும் கொன்றை மலரை யணிந்து கடிமனைபுகும் காவலர்போல மள்ளர் பலர் நிறையப்பெற்ற தாகலின் போகற்கரிதன்று, எளிதென்று தெளிக எ. று.

---

1. அகம். 272.

கொன்றையின் புதுப்பூ, பொன்னின் நிறமும் ஒளியும் ஒருங்குடைமையின், **சுடு பொன்னன்ன கொன்றை** என்றார்; "சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும்[1]" என்பதனால், சுடுபொன் ஒளியும் நிறமும் சிறக்கவுடைமை அறிக. **கடி**, மணமனை; காவலகமுமாம். **மள்ளர்**, இளம் வீரர். இவர் விழாக்காணும் விருப்பு மிகவுடையராதலின், இவர்கட்குக் கடிபுகுவனர் உவமமாயினர். "வேறு நாட்டு விழவுப்படர் மள்ளர்[2]" என்பது காண்க.

அணியும் தூசும் உயர்ந்தன அணிந்து செல்லுபவா கலின், கொன்றை சூடிய மள்ளரைக் **கடிபுகுவனர் போல்** என்றாள். மள்ளர் சுரத்திடையே வழங்கும் இயல்பின ராதலின், காதலர் சென்ற ஆறு **மள்ளரும் உடைத்து** என்றாள். "மணவாய்த் தென்றல், சுரஞ்செல் மள்ளர் சுரியல் தூற்றும்[3]" என்றார் பிறரும். மள்ளரும் என்ற உம்மையால், மள்ளர் புறவின்கண் மகளிரொடு உறை தலின், வழிச்செலவு காதலர்க்கு இன்பக்காட்சியே நல்கும் என்றாளாதலும் கொள்ளப்படும். "புறவே, ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன[4]" என்பது காண்க. (உ)

433. நன்றே காதலர் சென்ற வாறே
நீர்ப்பட வெழிலி வீசும்
கார்ப்பெயற் கெதிரிய கானமு முடைத்தே.

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்ற **காட்டுநெறி**, எங்கும் நீருண்டாக மேகங்கள் வீசும் கார்காலத்து மழையினை யேற்று வளமுற்ற கானத்தை யுடைத்தாகலின் போகற் கரிதென்று கவலற்க, இனிதாம் எ. று.

நீர்ப்படுதல், நீர் உண்டாதல். **எழிலி**, மழைமுகில். கார்வரவை எதிர்நோக்கியிருந்து அது வந்ததும் நீர் நலம் சிறக்கப்பெற்ற காரணத்தைக் **கார்ப்பெயற்கு எதிரிய கானம்** என்றார்.

1. குறள். 267.　2. அகம். 180.　3. ஷை. 21.　4. பதிற். 13.

கார்ப்பெயற் கெதிரிய கானமுடைமையின், நீரும் நிழலும் மிக்குச் செல்வார்க்கு வருத்தம் தோற்றுவியாது என்பாள், **நன்றே காதலர் சென்ற ஆறே** என்ருள். (௩)

434. *நன்றே காதலர் சென்ற வாறே*
மறியுடை மான்பிணை யுகளத்
தண்பெயல் பொழிந்த வின்பமு முடைத்தே.

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்றவழி, **கன்றோடு கூடிய மான் பிணை** உலாவக் குளிர்ந்த **மழை பெய்தமையான்** உளதாகிய **இன்பத்தினை உடையதாகலின், போகற் கரிதன்று, நன்றே** எ. று.

மறி, மான்கன்று. **பொழிந்த இன்பம்**, வழிநடந்த வருத்தம் என்ருற் போலக் காரியப்பெயர் கொண்டது.

மான் பிணை உகள வென்றதனுல் ஆற்றிடை ஏதமின்மை கூறியவாறு. (௪)

435. *நன்றே காதலர் சென்ற வாறே*
நிலனணி நெய்தன் மலரப்
பொலனணி கோன்றையும் பிடவமு முடைத்தே.

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்றவழி, **நிலத்துக்கு அணி** செய்யும் **நெய்தல்கள் மலரப் பொன்போல்** மலரும் **கொன்றையும் பிடவமு முடைத்தாகலின், போகற்கரிதன்று இனிதென்று தெளிக** எ. று.

நிலத்துக்கு அணியாய நெல்லும் கரும்பும் நின்ற வயலிடத்தே வளர்ந்து இனிய காட்சி வழங்கும் ஏற்ற முடைமைபற்றி நெய்தல் **நிலனணி நெய்தல்** எனப்

பட்டது. **பொலனணி** என்றவிடத்து அணி, உவமப் பொருட்டு. **பொலன்**, "பொன்னென்னும் கிளவியின் செய்யுண்முடிபு[1]"

நெய்தலால் நிலமும், கொன்றை பிடவங்களால் கானமும் இனிய காட்சி நல்குதலின், **நன்றே காதலர் சென்றவாறே** என்றாள். (ரு)

436. *நன்றே காதலர் சென்ற வாறே*
நன்பொ னன்ன சுடரிணர்க்
கொன்றையொடு மலர்ந்த குருந்துமா ருடைத்தே

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்றநெறி, நல்ல பொன் போல் ஒளிவிடும் பூங்கொத்துக்களையுடைய கொன்றை மரங் களையும் குருந்த மரங்களையு முடைத்தாகலின் போகற்கரி தென்று கவலாது நன்றென்று தெளிவாயாக எ. று.

நன்பொன் என்றவிடத்து நன்மை, ஓட்டறுதல். போகற்கு முதலாயின அவாய் நிலையான் வந்தன. என்று தெளிக என்பன குறிப்பெச்சம்.

கொன்றை போலக் குருந்தும் கார்காலத்து மலர்வ தாலின், **குருந்துமா ருடைத்தே** என்றாள்; "காசினன்ன போதீன் கொன்றை, குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலை[2]" என்று பிறரும் கூறுதல் காண்க. (சு)

437. *நன்றே காதலர் சென்றவாறே*
ஆலித் தண்மழை தலைஇய
வாலிய மலர்ந்த முல்லையு முடைத்தே.

---

1. தொல். எழுத்து. 356. 2. குறுந். 148.

இதுவுமது.

உரை : ஆலிகளையுடைய தண்ணிய மழை பெய்தலால் வெள்ளியவாய் மலர்ந்த முல்லை மலர்களையுடைத்தாகலின், காதலர் சென்றநெறி போகற்கரிதன்மையின் நன்றென்று ஆற்றியிருப்பாயாக எ. று.

ஆலி, ஆலங்கட்டி. "புதுநீர் ஆலி பளிங்கு சொரிவது போல் பாறை வரிப்ப[1]" என்றார் பிறரும். ஆவிவடிவாய மேகம் விண்ணிடத்து மிகக்குளிர்ப் பெய்தியவழி, நீருருவாய்ப் பின்னர் உறைந்து சிறுகற்போல மாறியவிடத்து ஆலங்கட்டியா மென்ப. **வால்**, வெண்மை.

இல்லிலிருந்து நல்லறம்புரியும் கற்புடை மகளிர்க்குரிய தூய முல்லையும் அவர் சென்ற நெறியின்கண் மலர்ந்து தோன்றி அவர்க்கு இன்பம் செய்தலின், **நன்றே காதலர் சென்ற ஆறே** என்றாள். (௭)

438. நன்றே காதலர் சென்ற வாறே
பைம்புதற் பல்பூ மலர
இன்புறத் தகுந பண்புமா ருடைத்தே.

இதுவுமது.

உரை : பசிய புதர்களின்கட் பலவாய பூக்கள் மலர்வதால் யாவரும் இன்புறுதற்குத் தக்கவாகிய பண்புகளையுடைமையான், நம் காதலர் சென்ற நெறி நன்றென்றுணர்க எ. று.

பண்புகள், மாவும், புள்ளும், மலரும் மிக்குச் செல்வார்க்கினிய செயல்களையுடையவாதல். **பைம்புதல்**, பசுமையான புதர்கள், பொருளின் பண்பு இடத்தின் மேனின்றது. கண்டார் உள்ளத்தில் இன்பம் மிகுதற்கான

1. அகம். 108.

அழகிய காட்சிகளைத் தனக்கே உரியவாகக் கொண்ட கானம் என்றும், எனவே அவ்வழியே செல்வார்க்குச் செலவருமையும் வருத்தமும் தோன்று என்றும் கூறினாளாயிற்று. (அ)

439. நன்றே காதர் சென்ற வாறே
குருந்தங் கண்ணிக் கோவலர்
பெருந்தண் ணிலைய பாக்கமு முடைத்தே.

இதுவுமது.

உரை: நம் காதலர் சென்ற நெறி, குருந்தமலரால் தொடுத்த கண்ணி யணிந்த கோவலர் வதியும் பெருமையுற்ற தண்ணிய நிலையினையுடைய ஊர்களையுடைமையான், சேறற்கு நன்றென் றுணர்க எ. று.

அம், தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண் வந்த சாரியை. கோவலர் குருந்தின்பூவால் தொடுக்கப்பட்ட கண்ணி சூடும் இயல்பினராதலின், **குருந்தங் கண்ணிக் கோவலர்** என்றார்; "அவ்வழி வந்த, குருந்தம்பூங்கண்ணிப் பொதுவன் [1]" என்று பிறரும் கூறுவது காண்க. **பாக்கம்** என்பது நெய்தனிலத்துக் குரிய தாயினும் சிறுபான்மை முல்லைநிலத்து ஊர்கட்கும் உரியதாம். "சிறுகுடிப் பாக்கத்தெம் பெருநக ரானே [2]" என்பதனாலறிக.

காதலர் சென்ற நெறி முற்றவும் காடும் மலையுமே யாகாது இடையிடையே மக்கள் இருந்து இனிது வாழும் ஊர்களும் உடையதாகலின் **நன்றே** என்றாள். (கூ)

440. நன்றே காதலர் சென்ற வாறே
தண்பெய லளித்த பொழுதின்
ஒண்சுடர்த் தோன்றியுந் தளவமு முடைத்தே.

1. கலி. 111. 2. நற். 169.

இதுவுமது.

உரை : நம்காதலர் சென்றவழி, குளிர்ந்த மழைபெய்த கார்ப்பருவத்தே மலரும் ஒள்ளிய சுடர்போலும் பூக்களையுடைய தோன்றியும் தளவமு முடைமையான், போகற் கரிதன்று, எளிதென் றறிக எ. று.

தண்பெயல், கார்காலத்து மழை. **பொழுது,** கார் காலம், தோன்றியும் தளவும் கார்காலத்து மலர்வன. பொழுதும் தோன்றியும் தளவமும் உடைத்து என இயையும். தோன்றிப்பூ ஒள்ளிய சுடர்போறலின், **சுடர்த் தோன்றி** எனப்பட்டது. **தளவம்,** செம்முல்லை. (௰)

45. பாசறைப்பத்து.

தலைமக்களது கற்பு வாழ்வில், தலைமகன் பொருள் வேண்டியும், போர்வினை குறித்தும் மனைவியின் நீங்கிப் பிரிந்துறையும் கடமையுடையன். காதலின்பம் ஒன்றே விழைந்து மனைக்கண் மடிந்திருப்போர்க்கு இம்மையிற் புகழும் மறுமைக்கண் இன்பமும் இல்லையாம் என்பது தமிழ் நூல்களின் பொதுமுடிபு; அதனால், தமிழ்த் தலைமகனுக்குப் பொருள்வயிற் பிரிவும் வினைவயிற் பிரிவும் கடமையாயின. பொருட் பிரிவினும் போர்வினைப் பிரிவே பொன்றுப் புகழ் பயப்ப தென்பதும், ஒருவன் வாழ்வாங்கு வாழ்ந்து மூத்து முடிவெய்துங்கால் நோய்வாய்ப்பட்டு இறத்தலினும், போரின்கண் பகைவர் படையால் புண்ணுற்று மாய்வது பெரிய தவப்பயன் என்பதும் தமிழகத்து மூத்தோர் கண்ட முதுநெறிகளாகும். "நோற்றோர் மன்ற தாமே கூற்றம், கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர்[1]" என்று சான்றோர் குறிப்பது காண்க. தமிழர் வாழ்வில் இக்கொள்கை நிலவியிருந்த நாள் காறும், பிற பகுதிகள் வேற்று நாட்டவர் கொடுமைக்கு அடிமையுற்று மடிந்த போதும், தமிழகம் வேற்றவரால் வென்று கொள்ளப்பட்டதென்ற வரலாறே இல்லாது விளங்கிற்று. இடைக்காலத்தே புகுந்த நச்சுக்கருத்துக்கள் தமிழர் ஒருமை நிலையைச் சாதி சமயங்களின் பெயரால் சிதறிப் பிரிந்து கெடச் செய்தன; தமிழகம், தன் தமிழையே மறந்து துறந்து பிறர்க்கும் பிற மொழிவழக்குகட்கும் முதலிடம் தந்து தமிழ் உணர்விழந்து சழக்கர் தலைமையில் வழுக்கி வீழ்வதாயிற்று; வறுமையே தமிழ்க்குப் பெருமையாய்ப் போயிற்று.

---

1. அகம். 61.

பண்டைத் தமிழர் வாழ்வில், போர் நிகழ்தற்குரிய காலம் கார்காலம் ஒழிந்த பிற எல்லாக்காலங்களுமாகும். அவற்றுள்ளும் மிக்க குளிரும் மிக்க வெம்மையும் பொருந்திய கூதிர் முதுவேனில் என்ற இரண்டினும், போர் நிகழ்தற்கு இடமுண்டெனினும், முன்பனி, பின்பனி, இளவேனில் என்ற இவையே சிறந்தனவாகக் கருதப் பட்டன. அதனால், போர் மேற்கொண்ட வேந்தர், கூதிர் வேனில் என்ற இருபோதினும், போர்க்களத்தில் பாசறை அமைத்துப் போர்க்குரிய செவ்வி நோக்கி அமைந்திருப் பதை முறையாகக் கொண்டனர். தலைமகன் பாசறைக் கண் தலைவியது பிரிவை ஆற்றியிருத்தலும், தலைமகள் தலைவன் பிரிவை ஆற்றி மனைக்கண் இருத்தலும் உரிய பொருளாய் முல்லைத்திணைக் குரிய வாயின. பாசறையும், கூதிர்ப் பாசறை வேனிற்பாசறை என இருவகைப்பட்டு வழங்கிற்று. "கூதிர் வேனில் என்றிரு பாசறைக் காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்[1]" என்று **ஆசிரியர்** குறிப்பது காண்க. ஈண்டுக் கார்ப்பருவ வரவு கண்டு பாசறைக்கண் இருந்து தலைமகன் நிகழ்த்தும் கூற்றுக்களே பெரிதும் தொகுக்கப்பட் டிருத்தலின், இது வேனிற்பாசறை யென உணர்தல் வேண்டும். **பாசறை** என்னும் சொல், பசுங் காடு படர்ந்த பெரிய பாறைகள் பொருந்திய இடத்தைக் குறிப்பது; "வேங்கை தந்த வெற்பணி நன்னாள், பொன் னின் அன்ன பூஞ்சினை துழைஇக், கமழ்தா தாடிய கவின்பெறு தோகை, பாசறை மீமிசைக் கணங்கொள்பு ஞாயிற்று, உறுகதிர் இளவெயில் உண்ணும் நாடன்[2]" எனச் சான்றோர் கூறுவதனால் அறியலாம். இதனால், முதன்முதலாகப் போர்வினைக்கண் தானையொடு காலம் நோக்கி யிருக்கும் இருக்கையை மேற்கொண்ட தமிழ் முன்னோர், மேலே காட்டிய பாசறைக்கண் இருந்தது பற்றிப் போர்வினைத் தானை இருக்கும் இருக்கைகள், பிற் காலத்தே பாசறை என வழங்கத் தலைப்பட்டன என்று கோடல் பொருத்தமாகிறது.

---

1. தொல். பொ: 76. 2. நற். 396.

போர் மேற்கொண்ட வேந்தர் படையொடு சென்று போரைச் செய்தற்குரிய செவ்வி நோக்கித் தானை இனிது இருத்தற் கேற்ற நிலப்பரப்பிலும் பாசறைகள் பின்னர் அமைக்கப்பட்டன. போர்க்களத்துக்கென நூலோர் இடம் வரையறை செய்யாமையால் பரந்த வயலிடத்தும் போரும் போர்ப்பாசறையும் அமைந்தன. "காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல், வந்திறை கொண்டன்று தானை [1]" என்பது காண்க.

பாசறை என்பது பொதுவாக ஓர் இடம்போலக் குறிக்கப்படினும், அது, பாசறை, பாடி, கட்டூர் என முக்கூறுபட்டுத் தோன்றுகிறது. அரசர்களும் அவருடைய அரசியற் சுற்றமும் இருக்கும் இடம் பாசறை; பல்வகைப் படைத்தலைவரும், படைவயவரும், இயவரும் ஆகிய பலரும் இருக்கும் பகுதி **பாடி**; இப்பாடியைப் பாடிக் கொட்டில், பாடியிருக்கை என்றும் பண்டையோர் வழங்குகின்றனர். "பன்னூ றுயிரம் பாடிக்கொட்டில் [2]" எனவும், "எண்பதின் இரட்டி எறிபடைப் பாடி [3]" எனவும் வழங்குதல் காண்க. **கட்டூர்** என்பது, போர்நிகழ்ச்சியின் பெருமை காலம் முதலிய நிலைமை நோக்கி வேண்டிடத்துப் பெருக்கி அமைக்கும் பாடியிருக்கை; "விரவு மொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇ [4]" என்பதனால் இஃது அறியப்படும். இருக்கை, அமைப்பு முதலிய கூறுபாட்டால் இவை வேறுவேறு காணப்படினும் பொதுவகையிற் பாசறை என்றவிடத்து இவையாவும் அடங்கிவிடும். பாசறை நடுவாக, பாடியும் கட்டூரும் இடையிடை அமையப்படைத்திரள் இனிது இயங்குமாறு தெருக்களும், பாசறைக்கு அரணாக இடுமுள்ளும் தோற்கிடுகும் வில்லும் வேலும் வேலி யாக நிறுவப்பட்டிருக்கும். பாடியிருக்கையும் கட்டூரும், போர் முடிந்தபின் மறையும் இயல்பின

1. பதிற். 40. 2. பெருங். 1, 46, 199. 3. ஷை, 3, 4, 9.
4. அகம்: 212.

வாயினும் சில இடங்களில் அவை நிலைபெற்று ஊர்களாக மாறிவிட்டன. வாணகப்பாடி, பெருங்கட்டூர் என்ற ஊர்கள் இன்றும் நின்று பழைய வரலாற்றை வற்புறுத்து கின்றன.

இரவினும் பகலினும் எப்போதும், காலை மாலை முதலிய சிறுபோதுகளை உணர்த்தும் முரசவகைகள் பாச றைக்கண் முழங்கும்; காடு கெடுத்துத் தானைக்கு வழி அமைக்கும் கூளிப்படையினர் ஒருபால் அது செய் தொழுக, இயவர் இயம் இயம்ப, வயவர், வாளும் வேலும் வாய்வடித்து நெய்வழங்குவர்; விற்படையினர் அம்பு களைத் தெரிந்து செம்மை செய்வர்; வீரர் இருக்கை, "வெறிக் குரவை பெயர்புபொங்க, வாய்காவாது பரந்து பட்ட வியன் பாசறை[1]" கல்லென்ற ஓசை மிக்கு விளங் கும். வேந்தன் இரவில் கண்படை பெறாது செய்வினை ஆராய்ந்த சிந்தையுடன் பாடிமுற்றும் பார்வை இடுவன்.

"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்" தலைவர்; ஆயினும், புண்ணுற்று வீழ்ந்த வீரர்க்கு மருந்து நல்கிப்பணிசெய்யும் **புறத்துறை மகளிர்** பாசறை மருத்துவ விடுதியில் இருப்பர். புறத்தோராகிய மகளிர் ஆங்கண் இருந்து மருத்துவப் பணிபுரிவது "புரைவது என்ப" எனத் **தொல்காப்பியனார்** தமக்கு முன்னோர் காலத்திருந்தே வழங்கி வருவ தென்பது தோன்றக் கூறுகின்றார். அப் புறத்தோராகிய மகளிரைப் **பாடிமகளிர்** எனக் **கொங்கு வேளிர்** குறிப்பிடுகின்றார். அம்மகளிர் அன்பும் அறமும் பொங்கிய உள்ளத்தராய், "தீங்கனி இரவமொடு வேம்பு மனைச்செரீஇ, வாங்குமருப்பு யாழொடு பல்லியம் கறங்க, கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி, ஐயவி சிதறி ஆம் பல் ஊதி, இசைமணி எறிந்து, காஞ்சி பாடி, நெடுநகர் வரைப்பில் கடிநறை புகைஇ, காக்கம் வம்மோ காதலம் தோழி[2]" என்று மருத்துவம் செய்வதைச் சான்றோர் பாராட்டிப் பாடியுள்ளார்கள்.

---

1. புறம்: 22. 2. ஷை. 281.

வேந்தர் உறையும் பாசறையில் சட்டை யிட்ட கஞ்சுகிகள், இரவுமுழுதும் உறக்கமின்றிக் காவல் புரிய, தலைவருடன் கூடி வினைவகை ஆராயும் இடத்தில் தமிழறியாத ஆரியரும் யவனரும் காவல்புரிவார்கள்; சிலர் பரூஉச் சுடர் எரியும் பாண்டில் விளக்குகட்கு நெய் பெய்து இரவு முற்றும் எரியவிட் டிருப்பர்.

இத்தகைய பாசறைக்கண் இருக்கும் தலைமகன் உள்ளத்தில் மேற்கொண்ட வினை முடியுங்காறும், உழுவல் அன்பின் உருவாக விளங்கும் அவன் காதலியின் காதல் நினைவு கனவிடத்தும் தோன்றுவதில்லை. அவன் எண்ணமெல்லாம் வெற்றிக்குரிய வினைவகைகளிலேயே ஈடுபட்டு அழுந்திக்கிடக்கும்; வினை வெற்றிபெற முடிந்ததும் தலைமகன் நினைவு தலைமகளது காதலின்பத்தில் கனைந்து ஓடா நிற்கும். இது கண்ட சான்றோர், "மூதில்வாய்த் தங்கிய முல்லைசால் கற்புடை, மாதர்பால் பெற்ற வலியுளவோ—கூதிரின், வெங்கண் விறல்வேந்தன் பாசறையுள் வேனிலான் ஐங்கணை தோற்ற அழிவு[1]" என்று பாராட்டினர். இதனால் இப்பாசறை இருப்பைப் **பாசறைமுல்லை** என்றும் பகர்ந்தனர். ஆசிரியர் **தொல்காப்பியனார்,** "கிழவி நிலையே வினையிடத்து உரையார், வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்[2]" என்று இலக்கணம் கண்டார். "ஒன்றாத் தமரினும்[3]" என்ற சூத்திரத்துப் "பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப், பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்" என்ற **பாசறைப்புலம்பல் இப் பாசறைப் பத்தின்கண்** குறிக்கப்படுகிறது. வினைமுடிவு குறித்துப் பாசறைக்கண் தனித்திருந்தோன், அது முடியவும், தான் குறித்த கார்ப்பருவம் தோன்றவும் கண்டு தன் காதலியை நினைந்து கூறும் கூற்றுப் பொருளாக எழுந்த பாட்டுக்களின் தொகுதி யாகலின், இப்பத்துப் **பாசறைப்பத்து** எனப் பெயர்பெறுவதாயிற்று.

---

1. புறத். 1271. 2. தொல். பொ. 186. 3. ஷை. ஷை. 41.

441. *ஐய வாயின செய்யோள் கிளவி*
கார்நா ளுருமொடு கையறப் பிரிந்தெனை
நோய்நன்கு செய்தன வெமக்கே
யாமுறு துயரமவ ளறியினோ நன்றே.

இது, சென்று வினைமுடியாமையின் கார்காலம் வந்தவிடத்து மீளப்பெறாத தலைமகன் தலைமகளுழைநின்றும் வந்த தூதர் மாற்றம் கேட்டு இரங்கியது.

ப. உரை : கார்நாள் உருமொடு நோய் நன்குசெய்தன, செய்யோள் கிளவி எனக் கூட்டுக.

உரை : அவள் செயலின்றி இனையும் வகைப் பிரிந்தேனாக, செம்மையுடைய அவள் விடுத்த மென்மையும் அழகு முடையவாகிய மாற்றம் கார்ப்பருவத்து இடியோடு கலந்த மழையொடு கூடித் தனித்த எமக்குத் துன்பம் மிகத் தருவனவாயின ; அதனால் யாம் எய்தும் துயரத்தை அவள் அறியின் நன்றாகும் எ. று.

செய்யோள் ஐயவாயின கிளவி, உருமொடு நோய் நன்கு செய்தன ; துயரம் அவள் அறியின் நன்று எனக் கூட்டி முடிக்க. ஐ, மென்மை, அழகுமாம். **செய்யோள்**, தலைமகள். **கிளவி**, தூதர்பால் சொல்லிவிட்ட மாற்றம். **உரும்**, இடி. துன்பம் செய்தற்கண் கார்நாள் உரும் சிறத்தலின், ஒடு, ஒருவினை ஒடு. செய்தென வென்னும் வினையெச்சம், ஈண்டுக் காரணப் பொருட்டு.

தான் மேற்கொண்ட வினை குறித்துப் பிரிவுணர்த்தியஞான்று, பிரிவுத்துன்பம் வருத்தினும் அதனிடையே தன் உள்ளம் தெளிந்து, செய்வினை முடித்த செம்மலொடு போதருக என உடம்பட்டு ஊக்கிய அவள் சிறப்பை நினைந்து கூறலின், **செய்யோள்** என்றும், குறித்த பருவத்தை வற்புறுத்தி விரைவில் வினைமுற்றி மீளுதல்

வேண்டு மென அவள் விடுத்த தூதர் கூறலின், **ஐய வாயின ளெவி** என்றும், குறித்த காலத்தில் வினைமுடி யாமை மேலும், தான் குறித்த கார்ப்பருவம் மழையொடு போந்து வருத்தாநிற்க, தான் பிரிந்தது நினைந்து **கையறப் பிரிந்தென** என்றும், தலைவியினின்றும் போந்த தூதுரை அவளது ஆற்றுமையை உணர்த்தி வருத்தம் மிகுவித்த மையின், **நோய் நன்கு செய்தன எமக்கே** என்றும், கார் வந்து இடையீடு செய்தலால் வினைமுடியாமையும், அதனுல் தான் எய்தும் வருத்தமும் தலைமகள் அறியின், எம்மொடு பின்னர் அவள் புலத்தற்கு இடனின்றும் என் பான், **யாம் உறுதுயரம் அவள் அறியினே நன்று** என்றும் கூறினுன். இனி, கார்ப்பருவம் வந்தமையான், வினைமுடி யாமைபற்றிப் பாசறைக்கண் இருந்து வருந்தும் தலைமகன் தலைமகள் விட்ட தூதுரை கேட்டு ஆற்ருமையின், **நோய் நன்கு செய்தன எமக்கே** என்றும், கார்மழை போந்து செய்த துன்பத்தின் இடையே தோன்றி அமைதி தரு தலின், தலைமகளது தூதுரை **ஐயவாயின** என்றும் உரைத் தான் என்றலு மொன்று. "வருத்த மிகுதி சுட்டுங் காலை, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[1]" என்ப வாகலின், தலைமகன் பாசறைக்கண் இருந்து வருந்தல் அமையும் என்க.

"ஒன்ருத் தமரினும்[2]" என்பதன் உரையில் "இது வினைமுடியாமையிற் பருவங் கண்டு மீளப்பெருத தலைவன் தூதர் வார்த்தை கேட்டு வருந்தியது" என்பர் **நச்சினார்க் கினியர்.** (க)

442. *பெருஞ்சின வேந்த னருந்தொழி* றணியின்
விருந்துநனி பெறுதலு முரியள் மாதோ
இருண்டுதோன்று விசும்பி னுயர்நிலை யுலகத்
] தருந்ததி யனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் ருயே.

1. தொல். பொ. 226. 2. ஷை. ஷை. 41.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடியாமையிற் பாசறைக்கண் இருந்து பருவவரவின்கண் சொல்லியது.

உரை : இருண்டு தோன்றும் விசும்பின்கண் உயர்ந்த நிலையையுடைய தேவருலகில் விளங்கும் அருந்ததி போலும் கற்பினையுடையளாய்க் குரும்பைபோற் செய்யப்பட்ட மணிகள் கோத்த கிண்கிணி யணிந்த புதல்வனுக்குத் தாயாகியவள், வேந்தன் தான் மேற்கொண்ட அரிய வினையை முடித்துப் பகையிடத்துத் தனது மிக்க சினமும் தணிவானுயின், விருந்தினை மிகப் பெற்று இன்புறுதற் குரியளாவள் எ. று.

வேந்தன் அருந்தொழில் பெருஞ்சினம் தணியின் என மாறுக. பகைவரால் விலக்குதற்கரிய பெரும்போரை மேற்கொண்டமை தோன்ற **அருந்தொழில்** என்றும், அதற்கு ஏது, அப்பகைவர்மேல் எழுந்த மிக்க சினம் என்றற்குப் **பெருஞ்சினம்** என்றும் கூறினர். போர் முடிந்தாலன்றிச் சினம் தணியாமை பற்றித் **தணியின்** எனல் வேண்டிற்று. பகற்போதில் நீல நிறம் கொண்டு காட்சியளிக்கும் விசும்பு அருந்ததிமீன் விளங்கித் தோன்றும் இரவுப்போதில் இருண்டு தோன்றுதலின், **இருண்டு தோன்று விசும்பு** என்றும், விசும்பிடத்து உயர்ந்த உலகம் என்பது தோன்ற **உயர்நிலை யுலகம்** என்றும் கூறுப. வேந்தன் தொழில் முடித்துப் பெருஞ்சினம் தணியின் அருந்ததி அனைய கற்பின் புதல்வன்தாய் விருந்து நனி பெறுதலு முரியள் எனக் கூட்டி வினை முடிவு செய்க.

எல்லா உலகினும் உயர்ந்ததாய் வற்றுத இன்பத்ததாயும் இருத்தலின், **உயர்நிலையுலகம்** என்றான். "துயர் நிலை யுலகம் காத்த லின்றிநீ, உயர்நிலை யுலகம் வேட்டனை [1]" என்றார் பிறரும். **இருண்டுதோன்று விசும்பு**

1. மணி. 25; 112-3.

என்றான், கார்ப்பருவ வரவு கண்டு கூறுதலின். இறைவன் அளித்த கருவினை முனிமகளிர் எழுவருள், ஏனை அறுவர் உண்டு சூல்கொண்டு மகப்பெற்றாராக, அருந்ததி தன் கொழுநனையல்லது பிறரை இறையெனக் கருதாப் பெருங் கொள்கையால் தெய்வக் கருவாயினும் ஏற்று உண்ண மறுத்த தலையாய கற்பு மாண்பு உடையள்; இதனை "எழு மகளிருள், கடவுள் ஒருமீன் சாலினி ஒழிய, அறுவர் மற்றையோரு மந்நிலை அயின்றனர் [1]" என்று பரிபாடல் கூறுதல் காண்க. இம்மாண்பு பற்றித் தமிழ்ச்சான்றோ ரிடையே கற்புப்பெருமை மிக்க மகளிர்க்கு அருந் ததியைக் காட்டல் மரபாயிற்று. "வடமீன் புரையுங் கற்பின் மடமொழி [2]" என்றும், "வடமீன்போல் தொழு தேத்த வயங்கிய கற்பினாள் [3]" என்றும், "பெருநல் வானத்து வடவயின் விளங்கும் சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல் [4]" என்றும் சான்றோர் கூறிப்போந்தமை யறிக. தன்னை யன்றித் தெய்வ முள்ளிட்ட பிறர் எவரையும் பொருளென மனங்கொள்ளாத கற்புச்சிறப்புத் தோன்ற **அருந்ததி யனைய கற்பின்** என்றும், அக் கற்புநெறியின் விளைபயனாய்த் தன் குடிக்கு விளக்காய மகனைப் பெற்றுத் தந்த பெருஞ்சிறப்பை எண்ணிக் **குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே** என்றும், வினைமுடியாமையின், **அருந் தொழில் தணியின்** என்றும் கூறினான். தான் கூடிப் பெறும் இன்பத்தையும் தழுவி நிற்றலின், உம்மை எச்சப் பொருட்டு. மனைக்கு விளக்காகும் கற்புடை மகளிர்க்கு மக்கட்பேறு பெருவிளக்க மாதலின் மகனை ஒப்பனை செய்து அவனுடைய மழலைமொழி கேட்டும் தளர்நடை கண்டும் கொழுநன் பிரிவாற்றி யிருக்கும் பெற்றிமையை நினைந்து **குரும்பை மணிப்பூண் புதல்வன்தாய்** என்றான். "தந்தையர் ஒப்பர் மக்கள் [5]" என்றும், "செம்மால், வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை, நிலைப்பாலுள் ஒத்த குறி

1. பரி. 5 : 43-5. 2. புறம். 122. 3. கலி. 2.
4. பெரும்பாண். 302-3. 5. தொல். பொ. கற்பு. 6.

என்வாய்க் கேட்டு ஒத்தி[1]" என்றும் வரும் சான்றோர் உரை காண்க. பிறண்டும், மகளிர் ஆற்றி யிருத்தற்குப் புதல்வன் ஏதுவாதல், "குரும்பை மணிப்பூட் பெருஞ் செங் கிண்கிணிப், பாலார் துவர்வாய்ப் பைம்பூட் புதல்வன், மாலைக் கட்டின் மார்பூர் பிழிய, அவ்வெயி றூறுகிய வெவ்வாய் மாணகைச் செயிர்தீர் கொள்கைநம் உயிர் வெங் காதலி[2]" என்பதனை லுணர்க. (உ)

443. நனிசேய்த் தென்னாது நற்றேர ஏறிச்சென்
றிலங்கு நிலவி னிளம்பிறை போலக்
காண்குவெந் தில்லவவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுய ரரண்பல வௌவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே.

இதுவுமது.

உரை : வானளாவி உயர்ந்த அரண்கள் பலவற்றையும் வென்று கொண்ட மார்ச்சனை யமைந்த முரசினையுடைய வேந்தன் தான் மேற்கொண்ட வினையை முடித்து அமைவானாயின், மிக்க சேய்மைக்கண்ணது எனக் கருதாது நல்ல தேரேறிச் சென்று அவளுடைய அழகு பெற்ற ஒளி பொருந்திய நெற்றி விளங்குகின்ற திங்களின் இளம்பிறை போலத் திகழக் காண்பேம் எ. று.

மணிநீரும், மண்ணும் மலையும், காடும், நகரியும், புரிசையு மென்று பலவகைப் படுதலில், **அரண்பல** என்றும், அவற்றுள்ளும் புரிசையும், மலையும் சிறந்தன வாகலின் **விண்ணுயர் அரண்** எனச் சிறப்பித்தும் கூறப்பட்டன.

மனத்துக் கினிய காதலருடன் கூடி இனிதுறையும் மகளிர் நுதல் இன்பக் கிளர்ச்சியால் ஒளிவிட்டுத் திகழ்தல் பற்றிச் **சுடர்நுதல்** என்றார். "பிறைத்தகை கொண்டன்று பேதை நுதல்[3]" என்றார் பிறரும்.

---

1. கலி. 62. 2. நற். 269. 3. கார். 17.

மிக்க சேய்மையில் சென்றுள்ளா னாகலின், **நனி சேய்த்தென்னாது** என்றும், கால்வல் நெடுந்தே ரென்பான், **நற்றேர்** என்றும், தான் காணுங்கால் பசப்பின்றி ஒளி யுற்றுத் திகழ்தலின் தலைவியின் நெற்றியைக், **கவின்பெறு சுடர்நுதல்** என்றும், வினை முடியாமையின் **விடின்** என்றும் கூறினான்.

"ஒன்றாத் தமரினும்[1]" என்ற சூத்திரத்து உரையில் இதனைக் காட்டி, இது வேந்தற்கு உற்றுழிப் பிரிந்தோன் தான் குறித்த பருவத்து வினை முடியாமையின் புலம்பியது என்பர் **நச்சினார்க்கினியர்.**

444. *பெருந்தோண் மடவரற் காண்குவெந் தில்ல*
நீண்மதி லரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து
வைந்நுதி மழுகிய தடங்கோட் டியானை
வென்வேல் வேந்தன் பகைதணிந்
தின்னுந் தன்னாட்டு முன்னுதல் பெறினே.

இதுவுமது.

உரை: நீண்ட மதிலாகிய அரணினைத் தாக்கியதனால், தொடி யுடைந்து கூரிய நுனி மழுங்கிய பெரிய கொம்பு களையுடைய யானையையும் வென்றி தரும் வேலையு முடைய வேந்தன், பகையிடத்துச் செய்யும் வினை முடிந்த இப்பொழுதேனும் தன் நாட்டிற்குச் சேறலை நினைப்பா னாயின் பெரிய தோள்களையுடைய மடவரலைக் காண்பேம் எ. று.

தோள் பெருத்திருத்தல் மகளிர்க்கு இலக்கண மாதலின் **பெருந்தோள் மடவரல்** என்றார். **தொடி**, யானை மருப்பிற் கிட்ட பூண். செய்தென என்னும் வினையெச்சம்

1. தொல் பொ. 41.

காரணப்பொருட்டு. அரணைத் தாக்கிக் கதவிற் பாய்ந்து கோடுமுறிதலும் நுதி மழுகுதலும், யானைகளின் மறமிகுதி உணர்த்தின. "கடிமதிற் கதவம் பாய்தலின் தொடிபிளந்து, நுதிமுக மழுகிய மண்ணை வெண்கோட்டுச் சிறுகண் யானை[1]" என்றார் பிறரும். **பகை**, பகையிடத்துச் செய்யும் போர்வினைமேல் நிற்றலின் ஆகுபெயர். உம்மை, இறந்தது தழீஇயது. **தணிந்த** என்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தால் தொக்கது. வேந்தன் முன்னுதல் பெறின், காண்குவெம் என இயையும். **தில்**, விழைவின் கண் வந்தது.

மேற்கொண்ட வினையது முடிவின்கண் தான் குறித்த பருவவரவும் காதலியின் காதல் நினைவும் எழுந்து உள்ளத்தில் வேட்கை மிகுவித்தலின், **பெருந்தோள் மடவரல் காண்குவெம் தில்ல** என்றும், வினைமுற்றிய திறத்தை **நீண்மதி லரணம்** என்றும், **வேந்தன்** என்றும், பகையும் தணிந்த தென்பான் **பகை தணிந்த இன்னும்** என்றும், இனியும் தன் நாட்டுக்கு மீளுதலை நினையாது போர் வேட்கை வேந்தன் உள்ளத்தில் மிக்கிருப்பது தோன்ற **முன்னுதல் பெறின்** என்றும், பெற்றாலன்றித் தான் அவனின் நீங்கிச் சேறல் துணைமையறம் அன்றாதலின், **பெறின்** என்றும் கூறினான். (௪)

445. *புகழ்சால் சிறப்பிற் காதலி புலம்பத்*
துறந்துவந் தனையே யருந்தொழிற் கட்டூர்
நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறுங் கலிழு நெஞ்சம்
வல்லே யெம்மையும் வரவிழைத் தனையே.

இது, பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவவரவின் கண் தலைமகளை நினைந்து நெஞ்சோடு புலந்து சொல்லியது.

---

1. அகம். 24.

உரை : புறத்தோராகிய பகைவர் உட்புகுந்து வினை செய்தற் கரிய தொழில் அமைந்த பாசறைக்கண் ஆமா னினம் தமக்குரிய நல்ல ஏற்றினைத் தழுவிச் செல்லும் மாலைப்போதினை நினைக்குந்தோறும் நெக்குருகும் நெஞ்சமே, புகழமைந்த சிறப்பினையுடைய காதலியாவாள் தனிமை யுற்று வருந்தப் பிரிந்து போந்தனை ; அதுவேயன்றி என்னை யும் விரைந்து இவண் போதரச் செய்தனை யாகலின், இப் பொழுது வருந்துவது என்னை ? எ. று.

புகழ்சால் சிறப்பாவது, வாழுமூர் கற்பால் தன்னைப் புகழ்வது. **கட்டூர்**, பாசறை. பாசறையிடத்தும் பகைவர் புகுந்து வினைசெய்ப வாகலின், அவர் அது செய்தற் காகா வாறு அமைத்த பாசறையை **அருந்தொழிற் கட்டூர்** என்றார் ; “ அருந்திறல் அளப்பருங்கட்டூர் [1]” “வேறுபுலத் திறுத்த கட்டூர் [2]” என்று பிறரும் கூறினர். உம்மை, காதல் மிகுதி யுணர்த்தினமையின், சிறப்பு. **நாகு**, பெண்மைப் பெயர். வாளாது கூறினமையின், சிறப்புடைய ஆனினம் கொள்ளப்பட்டன; “நல்லேறு நாகுடன் நின்றன, பல்லா னினநிரை [3]” என்ப வாகலின், நல்லேறு நாகு தழீஇப் பெயரும் காலம் கார்கால மென அறிக. **அம்சதேவரும்** இதுவே கூறுவர்.

மனையறத்துக் குரிய மாண்பெல்லாம் கொண்டு கற்பால் யாவரும் பரவும் பொற்புடைப் புகழ் நிறைந்தமை பற்றிப் **புகழ்சால் சிறப்பு** என்றும், அதற்குக் காரணம் அவளது உழுவலன்பின் வழிவந்த பெருங்காதலாதலின், **காதலி** எனறும், மனையின்கண் தனித்திருந்து வருந்த அவளது காதன்மையை நினையாது வினை மேற்கொண்ட உள்ளத்தால் பிரிந்து வந்தமை விளங்கத் **துறந்து வந்தனையே** என்றும், நல்லேறு நாகு தழீஇப் பெயரும் காட்சி வினைமுடித்துப் பாசறைக்கண் இருக்கும் தலைமகன்

---

1. அகம். 44.　　2. பதிற். 68.　　3. கலி. 113.

உள்ளத்தில் அவன் காதலியை நினைப்பித்துத் துயர்செய்தலின், **நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை** என்றும், அதனை **உள்ளுதொறும் நெஞ்சம் கலிழும்** என்றும் கூறினான். மனையாளது ஆற்றாமைக்கு அஞ்சி ஒழுகுவோன் "வினையாண்மை வீறு எய்தல் இன்று [1]" என்பது காட்டி, வினைவயிற் பிரிவை வற்புறுத்திப் பாசறை யிருப்புக்குத் தான் வருதற்குத் தூண்டிய நெஞ்சினை, **வல்லே எம்மையும் வர விளைத்தனையே** என்று கூறினான்.

இது பகைவயிற் பிரிந்தோன் பருவங்கண்டு தலைவியை நினைந்து நெஞ்சொடு புலம்பியது என்பர் **நச்சினார்க்கினியர்.** [2] (கு)

446. *முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள*
நல்ல காண்குவ மாஅ யோயே
பாசறை யருந்தொழி லுதவிநங்
காத னன்னாட்டுப் போதரும் பொழுதே.

இது, பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவவரவின்கண் உருவுவேளிப்பாடு கண்டு சொல்லியது.

உரை: **மாமைநிறத்தை யுடையோய், பாசறையிடத்தே யிருந்து வேந்தற்குச் செய்தற் குரிய அரிய வினைகளைச் செய்து முற்றி, நம் அன்புடைய நல்ல நாட்டுக்குப் பெயர்ந்து செல்லும் காலமாகிய மழை மிக்க கார்ப்பருவம், முல்லையின் மணங் கமழும் கூந்தல் விரைகொள்ளுமாறு நல்லவாய்த் தோன்றுகின்றன, காண் எ. று.**

உதவிப் போதரும் பொழுது கமழ்கொள நல்ல காண்குவ என முடிக்க. கற்புக்குச் சிறந்தமை பற்றி முல்லைப்பூ எடுத்தோதப் பட்டது. கற்புடை மகளிரின் கூந்தல் முல்லையின் நறுமணம் கமழும் என்பது பற்றி

1. குறள். 904. 2. தொல். பொ. 41.

இவ்வாறு முதற்கண் கூறினர் என்றலுமொன்று. **மாயோய்,** மாமை நிறத்தை யுடையவளே. பாசறையிடத்தே இருந்த வேந்தர் தாம் மேற்கொண்ட வினைக்கூறுகளை ஆராய்ப வாதலின், வினைசெய்தற்கு உரிய சூழ்ச்சியும் பகைவரால் விலக்க லாகாத செயல்வகைகளும் ஈண்டு **அருந்தொழில்** எனப்பட்டன. இப்பாட்டுடைத் தலைமகன் வேந்தர்க்கு உறுதுணையாக வந்தவன் என்பது அறிக.

தான் குறித்த பருவம் வரக் கண்ட தலைவன் உள்ளத்தில் தலைவியது நினைவு பெருகி யெழுதலும் அவளது உரு வெளிப்பட்டுத் தோன்றக்கண்டு தன்னை மறந்து அதனொடு உரையாடுவானாய், **மாஅயோயே** என்றும், தன் காதலியுடன் கலந்து உரையாடிக் களித்து மகிழும் அன்பு சிறக்கும் நாடாகலின், **காதல் நன்னாடு** என்றும் கூறினான். மழை பெய்யின், பாசறையிடத்துச் செய்யப்படும் வினை முடியாமையின், **பாசறை யருந்தொழில் உதவி** என்றதற்குப் பாசறைக்கண் பெய்தவழிச் செய்தற்கு அரிதாகும் வினையினைப் பெய்யாமையால் முடித்தற் குதவி என்று கூறினுமாம். கற்புக்குரிய முல்லையின் மணம் இயல்பாகவே பெற்றவ ளாகலின், **முல்லை நாறுங் கூந்தல்** என்றும், இனியும் கார்ப்பருவத்தே மலரும் பான்மைத்தாய முல்லை மலர்களை யணிந்து அம் மணம் மிகுவாள் என்பான், **கமழ் கொள** என்றும் கூறினான்.

"ஒன்றுத் தமரினும்[1]" என்ற சூத்திரவுரையில், வேந்தற் குற்றுழிப் பிரிந்தோன் பருவவரவின்கண் உருவு வெளிப்பட்டுழிப் புலம்பியது; **உதவி** யென்றலின் வேந்தற்கு உற்றுழி யாயிற்று என்பர் **நச்சினார்க்கினியர்.** (௬)

447. பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே
பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
ஆடு சிறைவண் டவிழ்ப்பப்
பாடல் சான்ற காண்கம் வாணுதலே.

---

1. தொல். பொ. 41,

இது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் அவன் வினைமுற்றி மீளும் வேட்கையனாய்ப் பருவவரவின்கண் தலைமகளை நினைத்துச் சொல்லியது.

உரை : பனியால் வளரும் செம்முல்லையின், சிச்சிலிப் பறவையது வாய்போற் சிவந்த அரும்புகள், அசைகின்ற சிறகுகளை யுடைய வண்டினம் மலர்த்த மலர்ந்து, அவை தேனுண்டு பாடுதற்கு அமைந்தன; அது கார்ப்பருவ நிகழ்ச்சி யாதல் குறித்து நாம் நம் காதலியின் ஒளி பொருந்திய நுதலைக் காண்டற்கு விரும்புவே மாயினேம் ஆகலான், வினையாற் பிணிப்புண்டு நிற்கும் வேந்தன், உள்ளம் வினைமுற்றி விரைய மீளுதலைச் செய்வானாக எ. று.

பிணி என்றதற் கேற்ப **வீடு பெறுக** எனப்பட்டது. **தொழில் பிணி வீடுபெறுதல்,** வினைமேற் சென்ற உள்ளம் அதனை முடித்து விரைய மீளுதல் என்றவாறு. **பிணி**யென்பதற்கு முன்னர்க் கூறினும். தளவின் முகை சிரலின் வாய் போறல், "சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப, ஈர்ந்தண் தளவம் தகைந்தன[1]" என்பதனாலும் அறிக. தளவின் மலர்ச்சி கார்ப்பருவ வரவுணர்த்தக் கண்டான், இது தான் வருவல் எனத் தலைமகட்குக் குறித்துப் போந்த பருவமாகலானும், தன் சொல் தேறி யிருப்பவள் வரவு தாழ்த்தவிடத்து ஆற்றாது நுதல் பசந்து வேறுபடுவள்என அஞ்சுகின்றானாகலானும், **காண்கம் வாணுதலே** என்றும்,எனினும், வினை முற்றுதவழி மீளுதல் வினைவலோர்க்கு உடன்பாடு அன்மையின், **பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே** என்றும் கூறினான். இவ்வாற்றால் இத் தலைமகன் வினைவலபாங்கன் என்பது உணர்க. (எ)

---

1. கார். 36.

448. தழங்குகுரன் முரசங் காலை யியம்பக்
கடுஞ்சின வேந்தன் றொழிலெதிர்ந் தனனே
மெல்லவன் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயற் கனைதுளி காரெதிர்ந் தன்றே
அஞ்சி லோதியை யுள்ளுதொறும்
துஞ்சா தலமர லெதிர்ந் தனமே.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் பருவம் வந்த விடத்தினும் மீளப்பெறாது அரசன் செய்தியும் தன் செய்தியும் கூறி ஆற்றாயது.

உரை: முழுங்குகின்ற ஓசையினையுடைய முரசங்கள் **காலையில் ஒலித்து அப் பொழுதினை யுணர்த்த, மிக்க சினம்** பொருந்திய வேந்தன் வினைமுடித்தலைத் தொடங்கினான்; மெல்லிய பள்ளங்களின் அருகே படர்ந்த முல்லைக்கொடிகள் மலர, மிக்கெழுந்த மழை ஒலிக்கின்ற பெயலைச் செய்து கார்ப்பருவம் தொடங்காநின்றது; அவ்வாற்றால், விரைவில் **வினை முடித்துக் கார்வரவில் காதலியொடு கூடி இனிதிருத்தல் கூடு மெனும் மகிழ்ச்சியால் அழகிய சிலவாகிய கூந்தலை யுடையாளை நினைக்குந்தோறும், நாம் கண்படை கொள்ளாது வினைமேலும் காதலியின் காதல்மேலும் கருத்தைப் போக்கி அலமருதலைக் கொள்வேமாயினேம்** எ. று.

அரசர் இருக்குமிடங்களில், அவர் பள்ளி யெழுங் காலை முரசு இயம்பப்படுதல் அக்கால வழக்காதலின், **தழங்குகுரன் முரசம் காலை இயம்ப** என்றார். பாசறைக் கண் தங்கிய வழியும் அஃது உண்டென்பது, "பருந்துபறக் கல்வாப் பார்வற் பாசறைப், படுகண் முரசம் காலை இயம்ப [1]" என்பதனால் அறிக. ஆழ மின்மையின், **மெல்ல வல்** எனப்பட்டன.

---

1. மதுரைக், 232.

பகைவரோடு வினைசெய்கின்ற பொழுது, அவர் மாட்டுக் கண்ணோடாது செய்யவேண்டுதலின், **கடுஞ்சின வேந்தன்** என்றும், கார்காலம் வினைசெய்தற்கு வாய்ப்புடைய தன்மையின் **தொழில் எதிர்ந்தனனே** யென்றும், தான் குறித்த பருவவரவு நோக்கித் தலைமகள் ஆற்றாளெனக் கருதி இணைந்தவன் வேந்தன் செய்தி கண்டு உவகை மிகுதலின், **துஞ்சாது அலமரல் நாம் எதிர்ந்தனமே** யென்றும் கூறினான். இதனால் தலைமகன்கண் **கண்டுயின் மறுத்தல்** என்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

"ஒன்றாத் தமரினும்" என்ற சூத்திரவுரையில் "இது வேந்தற் குற்றுழிப் பிரிந்தோன் பருவம் வந்துழி மீளப் பெறாது அரசன் செய்தியும் பருவத்தின் செய்தியும் தன் செய்தியும் கூறிப்புலம்பியது" என்பர் **நச்சினார்க்கினியர்.**

449. *முரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு*
பணைநிலை முனைஇய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே
ஒண்ணுதற் காண்குவம் வேந்துவினை விடினே.

இது, பாசறைக்கண் வேந்தனோடு வினைப்பொருட்டாற் போந்திருந்த தலைமகன் அவ்வேந்தன் மாற்றுவேந்தர் தருதிறை கொண்டு மீள்வானாகப் பொருந்துழித் தானும் மீட்சிக்குத் தேர் சமைத்த எல்லைக்கண்ணே, அவ்வரசன் பொருத்தம் தவிர்ந்து மீண்டும் வினைமேற்கொண்டானாகச் சொல்லியது.

உரை ; முரம்புகள் நிறைந்த மேட்டுநிலங்கள் இடம் கெடும்வகை உருண்டு செல்லும் உருளையுடன், பந்திக்கண் நிற்றலை வெறுத்த வலியினையுடைய குதிரைகள் பூட்டித் திண்ணிதாய்த் தேரும் சமைக்கப்பெற்றுளது ; வேந்தன் தானும் வினைதவிர்வானாயின் ஒள்ளிய நுதலினையுடையாளை நாம் சென்றய்திக் காணலாம் எ. று.

எச்சவும்மை வருவிக்கப்பட்டது. **சென்று எய்தி** யென்பன அவாய்நிலையான் வந்தன. **திண்ணிதின் மாண்டன்று தேர்** என்றதனால், வேந்தன் மீளக் கருதினமையும், அதற்குக் காரணமாகிய மாற்றரசர் தரும் திறைகோடற்குப் பொருந்தினமையும், **வினைவிடினே** என்றதனால் அவ்வேந்தன் பொருத்தம் தவிர்ந்தமையும் பெறப்பட்டன. **முரம்பு**, பரல் நிறைந்த கரம்புநிலம்; "முரம்புதலை மணந்த நிரம்பா வியவின்[1]" என்றும், "முரம்புகண் ணுடைய ஏகி[2]" என்றும் வருதலால் உணர்க. **பணை**, குதிரைப் பந்தி. வலிமிகுதியாற் செலவே விரும்புகின்றமையின் குதிரைகள் பணைநிலையை வெறுப்பவாயின; "பணைநிலை முனைஇய வினைநவில் புரவி[3]" என்றும், "பணை நிலை முனைஇய பல்லுளைப் புரவி[4]" என்றும் சான்றோர் கூறுவர். **ஒண்ணுதல்**, அன்மொழித்தொகை. வினைமுடித்து மீளுதற்கு வேந்தன் சமைந்தமையின், தேர்கள் செவ்வையாகப் பண்ணப்பட்டமையான், **மாண்டன்று தேரே** என்றும், மீளுதற்கண் குதிரைகள் மிக விரைந்த செலவினவாம் ஆதலின், அதனால், நிலை தளராமை நோக்கித் தேர்கள் பழுது பார்த்துச் செவ்விதின் அமைக்கப் பெற்றமை தோன்றத் **திண்ணிதின் மாண்டன்று** என்றும், அந்நிலையில் தன் காதலியின் மகிழ்ந்த முகத்தை விரைவிற் காண்டல் கூடும் என்று எழுந்த உள்ளக்கிளர்ச்சி, வேந்தன், மீளவும் வினை மேற்கொள்ளக் கருதினமை யறிந்து வாடுதலின், **வேந்து வினைவிடின் ஒண்ணுதல் காண்குவம்** என்றும் கூறினான்.

இது வேந்தன் திறைகொண்டு மீள்வுழித் தானும் சமைந்த தேரை அமைத்துக்கொண்டு **திண்ணிதின் மாண்டன்று தேர்** எனப் பாகனொடு கூறியவழி அவ்வேந்தன் திறை வாங்காது வினைமேற் சென்றானாகப் பாகனை நோக்கிக் கூறியது என்பர் **நச்சினார்க்கினியர்**.　　　　(௧)

---

1. நற். 374.　　2. குறுந். 400.　　3. அகம். 254.
4. நெடு. 93.

450. முரசுமா றிரட்டு மருந்தொழில் பகைதணிந்து
நாடுமுன் னியரோ பீடுகெழு வேந்தன்
வெய்ய வுயிர்க்குநோய் தணியச்
செய்யோ ளிளமுலைப் படீஇயரெங் கண்ணே.

இது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுற்று மையின் பாசறைக்கண் இருந்து தன் மனக்கருத்து உரைத்தது.

ப. உரை: **மாறு இரட்டும்** என்றது மாற்றார் முரசொலிக்கு மாறுபட் டெழும் என்றவாறு.

உரை: பெருமை பொருந்திய வேந்தன், முரசங்கள் மாறுபட் டொலிக்கும் விலக்குதற் கரிய போர்த்தொழிலைச் செய்தற்கு ஏதுவாகிய பகை முடித்துத் தன் நாடு நோக்கி மீளக் கருதுவானாக; அதனால், என் கண்கள், குறித்த பருவ வரவு நோக்கி ஆற்றாவாய் வெய்துயிர்த்து வருந்தும் என் நோய் தீர்வான், செய்யாளாகிய அவள் இளமை பொருந்திய மார்பிடைக் கூடி உறக்கம் எய்துக எ. று.

மாறுபட்டொலித்தலாவது, மாற்று வேந்தர் தானையிடை யெழும் முரசொலிக்கு எதிராக, அடல் குறித்த வேந்தன் தானையிடை முரசம் எடுத்தும் படுத்தும் கோட்டியும் ஒலித்தல். **அருந்தொழில்,** பகைவரால் விலக்க முடியாத போர்த்தொழில். **பகை,** பகைமை காரணமாக எழும் சினத் தீ. **உயிர்க்கும்** என்னும் பெயரெச்சம் காரணப்பெயர் கொண்டது. உயிர்த்தற் கேதுவாய காமநோய் என விரியும். வெய்துயிர்த்தல் கூறவே, வாய்வெருவுதல் முதலாயின அடங்கின. கற்புடை மகளிர்க்குப் பொதுவாக வுள்ள செம்மை, இப்பொழுதிற் சிறப்பாக விளங்குமாறு தோன்றச் **செய்யோள்** என்றார். "செறிவும் நிறையும் செம்மையும் செப்பும், அறிவும் அருமையும் பெண்பாலான [1]" என **ஆசிரியர்** கூறுவது காண்க.

1. தொல். பொ. 209.

பாசறைக்கண் இருந்து பருவவரவு கண்டு தலைவியை நினைக்கும் உள்ளத்தில் வினை முடியாமை தோன்றி நோய் விளைத்த தாயினும், வினையே ஆடவர்க்கு உயிராதலின் வினை முற்றி யல்லது மீளாத வேந்தனது வினையாண்மையை வியந்து கூறலின், **பீடுகெழு வேந்தன்** என்றும், போர்வினையிற் கலந்து அதனை உற்றும், வேந்தர் தத்தமக்குரிய முரசினை மாற்றார் முரசுக்கு எதிராக முழக்குப வாதலின், **முரசு மாறு இரட்டும் அருந்தொழில்** என்றும், பகை தணிந்தா லல்லது போர் அறுதல் இல்லாமை பற்றிப் **பகை தணிந்து** என்றும், எதிர்த்த வேந்தனது பகை தணியக் கண்டு பிறரும் பணிந்து திறை பகராது மாறுபடுவரேல், போர்வினை நீளுமாதலின், அவரும் அது செய்க எனவும், அது கொண்டு வேந்தன் தன் நாட்டிற்கு மீள்வானாக எனவும் விழையுமாறு தோன்ற, **நாடு முன்னியரோ** என்றும், குறித்த பருவம் வந்தும், காதலன் வந்திலாமை எண்ணியும் அதுவே பற்றுக்கோடாகத் தன்கண் ணெழுந்த வேட்கை மிக்கும் வருந்தும் தலைவியது வருத்தத்தை **வெய்ய வுயிர்க்கும் நோய்** என்றும், தன் சொல்வழி இருக்கும் அவளது கற்புநலத்தை வியந்து **செய்யோள்** எனவும், தனது ஆராக்காதல் மிகுதி தோன்ற, **இளமுலைப் படீஇயர் என் கண்** என்றும் கூறினான். (ம)

46. பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து.

இது தலைமகள் ஆற்றியிருக்குமாறு தலைமகன் தெளிவிப்பான் குறித்துச் சென்ற பருவம் எய்தினமை கண்டு, தலைமகள் தன்னோடும் தோழியரோடும் நிகழ்த்தும் கூற்றுப் பொருளாக வந்த பாட்டின் தொகுதி யாகலின், இப்பத்து இப்பெயர்த்தாயிற்று.

451. *கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்*
தேர்தரு விருந்திற் றவிர்குதல் யாவது
மாற்றருந் தானை நோக்கி
ஆற்றவு மிருத்தல் வேந்தனது தொழிலே.

இது, வேந்தர்க்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் குறித்த பருவம் நினைந்து ஆற்றியிருந்த தலைமகள் அப் பருவவரவின் கண் பாசறையினின்றும் வந்தார், அரசன் செய்தி கூறக் கேட்டு ஆற்றாளாய்ச் சொல்லியது.

உரை : நாம் ஈண்டுச் செயலற்று வருந்தப் பிரிந்த நம் தலைவர் தாம் குறித்த கார்ப்பருவம் எய்தினமையால் தேரேறி நம் மனைக்கண் விருந்தாய்ப் போந்து தங்குதல் யாங்ஙனம் கூடும்? பகைவரால் தொலைத்தற் கரிய தானையின் இருப்பு நோக்கிப் பாசறையிடத்தே பெரிதும் இருத்தல் வேந்தனது செயல் ஆயினமையின் எ. று. எனவே, யான் எங்ஙனம் ஆற்றுவேன் என்பதாம்.

கார்கால நிகழ்ச்சிகட்கு உரிய காலம், **கார்செய் காலை** எனப்பட்டது; "ஆர்பெயல் உதவிய கார்செய் காலை[1]" என்றாற்போல. ஒடுவுருபு ஆனுருபின் பொருட்டு; இஃது

---

1. அகம். 314.

உருபுமயக்கம். உடம்புதரு பணியில் விதுப்புற் றிருக்கும் உடம்புக்குக் கார்காலம் மிக்க வாய்ப்பாதலின் உயிருணர்வைத் தன்னடிப் படுத்தித் தன்வழியே நினைவு மிகுவித்து மயக்குதலால், அறிவொடு பட்ட செயல் அறுதலின், காதலர் பிரிவை, **கையறப் பிரிந்தோர்** என்றார். **தவிர்தல்,** தங்குதல். சின்னாள் தங்கிச் செல்லும் இயல்பு தோன்றத் **தேர்தரு விருந்து** என்றார். மாற்றுதல், தொலைத்தல்; **மாற்றருந் தானை** யென்றது பகைவரால் அறைபோகப்படாத தானை யென்றுமாம். பெரிதும் இருத்தலாவது, கார்ப்பருவம் வந்தும் பாசறையிருப்பை மேலும் சின்னாள் மேற்கொண்டிருத்தல். **மாற்றருந்தானை நோக்கி ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே** என்றது, பாசறையினின்றும் வந்தார் கூற்றைக் கொண்டெடுத்து மொழிந்தது. இருத்தல், வினைமேற் செல்லும் அரசர்க்குரிய அறுவகைத் தொழில்களுள் ஒன்று. அவை, நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், **இருத்தல்,** பிரித்தல், கூட்டல் என்பன. யாம் என்பது முதலாயின குறிப்பெச்சம்.

பிரிந்த காதலன் வற்புறுத்திய பொழுது எய்தக் கண்டு அவன் வாராமையால் ஆற்றுமை மிகுதலின், **கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்** என்றும், கார்ப்பருவம் போர்வினைக்கு ஆகாமையின், அக்காலையில் பிரிந்த தலைமகன் மீண்டு போந்து மனைக்கண் தங்கிப் போர்வினைக்குரிய பருவவரவில் பிரிதல் அமையும் என உழையர் கூறினர்க்கு, அஃது ஆகாது என்பதுபட, **தேர்தரு விருந்தின் தவிர்குதல் யாவது** என்றும் கூறினாள். கார் வரவால் செய்வினை இடையீடுபடக் கண்டு வேந்தன் மீள்வா னாயின் பாசறை யிருக்கும் தானை முரணவிந்து மாறுதலும் கூடுமாகலின், அது நோக்கி வேந்தன் மீளக் கருதிற்றிலன் என்பாள், **மாற்றருந் தானை நோக்கி** என்றும், வினை முடியுங்காறும் இருத்தலை வேந்தன் துணிந்துளான் என்பாள், **ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழில்** என்றும், எனவே, இக் கார்ப்பருவத்தின்கண் யான்

எங்ஙனம் ஆற்றுவேன் என்றும் கூறினள். யான் எங்ஙனம் ஆற்றுவேன் என்பது குறிப்பெச்சம். இஃது அழிவில் கூட்டத்து **அவன் பிரிவாற்றுமை.** (க)

452. வறந்த ஞாலம் தளிர்ப்ப வீசிக்
கறங்குர லெழிலி கார்செய் தன்றே
பகைவெங் காதலர் திறைதரு முயற்சி
மென்றோ ளாய்கவின் மறையப்
பொன்புனை பீரத் தலர்செய் தன்றே.

இது, குறித்த பருவத்து வாராது தலைமகன் பகைமேல் முயல்கின்ற முயற்சி கேட்ட தலைமகள் கூறியது.

உரை: கோடையால் நீரின்றி யுலர்ந்த நிலம் அது பெற்றுச் செழுமை யெய்துமாறு முழங்குகின்ற ஓசையினை யுடைய மேகம், மழையைப் பெய்து கார்காலத்தைச் செய்வதாயிற்று; **அது** தாம் குறித்த பருவமென்று கருதாது பகைதணி வினையை விரும்பிய காதலர், பகை யொழிந்து பணிந்து அவர் தரும் திறை பெறுதற்கு முயலும் முயற்சி, என் மென்றோளின் அழகிய நலம் ஒழியுமாறு பொன்னிறம் கொண்ட பீர்க்கம் பூப்போற் பசலை யெய்துவித்தது எ. று.

குறித்த பருவம் வந்தெய்தியவழியும் தலைமகன் வாராமையானும், வாராமைக் கேதுவாய முயற்சி கேட்டமையானும் ஆற்றேனாயினேன் என்பதாம். **வறந்த,** வறம் என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சம்; "நீரற வறந்த நிரம்பா நீளிடை [1]" எனப் பிறரும் வழங்குதல் காண்க. கோடையால் நீரின்றி வாடிய உயிரினம் தளிர்த்துச் செழுமை யுறுமாறு கார்மழை நீரைப் பெய்தலின், **வறந்த ஞாலம் தளிர்ப்ப வீசி** என்றார்; "உயிர் தளிர்ப்பத் தீண்டலால் [2]" என்றாற் போல. **கறங்குகுரல்**

1. அகம். 53. 2. குறள். 1106.

என்பது **கறங்குரல்** என விகாரமாயிற்று; "தழங்குரல் மயிர்க்கண் முரசு[1]" என்றாற் போல. கார்செய்தலாவது, கார்காலத்து மழையைப் பெய்தல். செற்றார்பால் வெம்மையும், நட்டார்பால் தண்மையும் உடைமை தலைமக்கள் இயல்பாதலின், **பகைவெங் காதலர்** எனத் தலைமகனைக் குறித்தார். திறைதரு முயற்சியாவது, "ஒடிவில் தெவ்வர் எதிர்நின்று உரைஇ, இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென, அம்புடை வலத்தர் உயர்ந்தோர்[2]" பரவுவது. பீர்க்கம்பூ பொன்னிறத்த தாதலின், பசலைக்கு உவமையாயிற்று; "பெருநல் ஆய்கவின் ஒரீஇச் சிறுபீர், வீயேர் வண்ணங் கொண்டன்று கொல்லோ ....பானாட் கங்குலும் பகலும், ஆனாது அழுவோள் ஆய்சிறு நுதலே[3]" எனச் சான்றோர் கூறுவது காண்க.

கார்ப்பருவ வரவில் காதலர் வருவரென ஆற்றியிருந்தாள், அரசன் திறைதரு முயற்சி கேட்டலும், ஆற்றாது பசந்தா ளாகலின், **முயற்சி மென்றோள் ஆய்கவின் மறைய, பீரத் தலர்செய் தன்று** என்றாள். இது **பசலைபாய்தல்.**

நீரின்மையான் வருந்திய ஞாலத்துக்கு எழிலி கார் செய்து தளிர்க்கச் செய்ததாக, காதலரது திறைதரு முயற்சி, அவரது கூட்ட மின்மையான் வருந்திக் கையற்றிருக்கும் நமக்கு அக் கையறவின்மேலும் ஆய்நலம் கெட்டுப் பசந்தொழியச் செய்வதாயிற்று என்பாள், **எழிலி கார்செய் தன்று** என எடுத்தோதினாள். (உ)

---

453. *அவரோ றுந் தேரை தேவிட்ட மிசைதோறும்*
வெங்குரற் புள்ளின மொலிப்ப வுதுக்காண்
கார்தொடங் கின்றாற் காலை யதனால்
நீர்தொடங் கினவா ணெடுங்கணவர்
தேர்தொடங் கின்றா னம்வயி னானே.

---

1. நற். 93. 2. பதிற். 80. 3. அகம். 57.

இது, பருவங் கண்டு ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ப. உரை: **தேர் தோடங்கின்ருல்** என்பது தேர் வரத் தொடங்குதல் இல்லையாயிற்று எ. று.

உரை: நீர் நின்ற பள்ளங்கள்தோறும் தேரைகள் ஓசையிடக் குன்றிடந்தோறும் வெவ்விய குரலையுடைய பறவைகள் ஒலியினைச் செய்ய, காலம் கார்ப்பருவமாதல் தொடங்கிற்று; அதனைக் காண்பாயாக; அதனால், இப் பருவவரவில் வருவல் எனக் குறித்துச் சென்றவர் வாராமை நோக்கி என் நெடிய கண்கள் நீர்சொரிதலைத் தொடங்கின; மற்று, அவருடைய தேர் நம்மிடம் வருதலைத் தொடங்கிற் றன்ருகலான் எ. று.

இப் பருவவரவில் என்பது முதலாயின வருவிக்கப் பட்டன. வினைமாற்றுப் பொருட்டாய இடைச்சொல் விகாரத்தால் தொக்கது. மழை பெய்தலால் பெருகிய தண்ணீர் பள்ளங்களில் நின்றவழி, ஆண்டு வதியும் தவளைகள் ஒலித்தலின், **அவல்தொறுந் தேரை தெவிட்ட** என்ருர். "பழமழை பொழிந்த புதுநீ ரவல, நாநவில் பல்கிளை கறங்க [1]" என்றும், "படுமழை பொழிந்த பயமிகு புறவின், நெடுநீ ரவல பகுவாய்த் தேரை, சிறுபல் வியத் தின் நெடுநெறிக் கறங்க [2]" என்றும் பிறரும் கூறுப.

தேர் தொடங்கு இன்று என்புழித் **தொடங்கு,** முத னிலைத் தொழிற்பெயர். "குற்றியலுகரமும் அற்றென மொழிப [3]" என்றதனுல் உயிரேறி முடிந்தது. **புள்ளினம்,** மரம், குன்று முதலியவற்றின் மேலிடத்தே கூடு கட்டி வாழும் இயல்பின வாதலின், **மிசைதொறும்** என்ருர். நில வரைப்பில் காற்றின் அழுத்தம் மிக்கிருத்தலின், புள்ளி னம் மிசையிடத்தே கூட்டமைக்கும் இயல்புடையவாயின

1. நற். 42. 2. அகம். 154. 3. தொல். எழுத்து. 106.

என அறிக. அழுத்தம் மிக்க நீர்க்குள் ளிருந்து மேல் வருவோர் கைகால்களை உதைத்துக்கொண் டெழுதல் போலப் புள்ளினமும் நிலவரைப்பினின்று மேனிலை எய்து தற்குச் சிறைகளை அசைத்தெழுந்து ஏகுவது இதற்குப் போதிய சான்று; மேலிடத்தே இருப்பின் காற்றின் அழுத் தத்தை எதிர்த்து நீந்திச் செல்லும் செலவு எளிதாமென்க.

தாம் தம் துணையொடு புணர்ந்து, தம்போற் புணராது தனித்தோர்மாட்டு இரங்காது தம் ஓசையால் துன்புறுத் தலே யன்றி, அவர்கட்கு அவர் தம் துணைவர் ஏறிவரும் தேரிற் கட்டிய மணியோசை போல இசைத்துப் பொய்த் தலின், **வெங்குரற் புள்ளினம் ஒலிப்ப** என்றும், நெடிய வாயினும் பொறுக்கும் ஆற்றல் இல என்பாள், **நெடுங்கண்** என்றும், குறித்த பருவம் எய்திற்றாகவும் வாராமை அவர்க்கு நன்றன்று என்பாள், **அவர்** என்றும் கூறினாள். துணையொடு புணர்ந்த புட்கள் பிரிந்தோர்மாட்டு இரங்காது ஒலிக்கு மென்பது, "இருந்தோட்டுப் புள்ளினம், தாம் புணர்ந்தமையின் பிரிந்தோர் உள்ளா, தீங்குர லகவ[1]" என்பதனாலும், புள்ளினம் தேரின் மணியோசை போல் ஒலித்தல், "புள்ளொலி கேட்டொறும், தேர்மணித் தெள்ளிசை கொல்லென, ஊர்மடி கங்குலும் துயில்மடிந் ததுவே[2]" என்பதனாலும் அறிக. (௩)

454\. *தளவின் பைங்கொடி தழீஇப் பையென*
நிலவி னன்ன நேரரும்பு பேணிக்
கார்நயந் தெய்து முல்லையவர்
தேர்நயந் துறையுமென் மாமைக் கவினே.

இது, பருவவரவின்கண் தலைமகள் ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

1\. குறுந். 191. 2. நற். 287.

உரை : வெண்முல்லைகள் செம்முல்லையின் பசிய கொடியினைச் சூழ்ந்து நிலவு போலும் நேரிய அரும்புகளைத் தாங்கிக் கார்ப்பருவம் வந்ததும் நயந்து மெல்ல மலர்தலை எய்தும்; அவ்வாறே என் மாமைக்கவினும் காதலர் ஏறி வரும் தேரை விரும்பியிருந்து, அவர் வரக்கண்டதும் விளங்கும், காண் எ. று.

தளவு, செம்முல்லை. முல்லை பைங்கொடி தழீஇ அரும்பு பேணி, கார் நயந்து பையென எய்தும்; மாமைக் கவின் தேர் நயந்து உறையும் என இயையும். மலர்தலை எய்தும் காரெதிர் பொழுதின்கண் என்க. அரும்பு கட்டிக் கார்ப்பருவம் வந்ததும் மலர்தலைச் செய்தலின், **அரும்பு பேணிக் கார் நயந்து எய்தும்** என்றார். அரும்பும் வெண்ணிறத்த தாதல் பற்றி **நிலவின் அன்ன** எனப்பட்டது.

முல்லை, கார் வரவு நோக்கி அரும்பு பேணி, வந்தவழி மலர்தலை எய்துவது போலக் காதலன் தேர்வரவு நோக்கியிருக்கும் தன் மாமைக்கவின் வந்ததும் விளங்கித் தோன்றும் என்பாள், **அவர் தேர் நயந்து உறையும் என் மாமைக் கவின்** என்றாள்.

தாம் குறித்த பருவம் போந்தமையின், அவரும் தாழாது வருவரெனக் கருதி ஆற்றியிருக்கின்றேனென் பாள், தன் மாமைக்கவின்மேல் வைத்துக் கூறினாள். ஆகவே, அவன் வாராது தாழ்த்தவழித் தான் தன் கவின் வாடி மெலியுமாறு கூறினளாம். (௪)

355\. *அரசுபகை தணிய முரசுபடச் சினைஇ*
ஆர்குர லெழிலி கார்தொடங் கின்றே
அளியவோ வளிய தாமே யொளிபசந்து
மின்னிழை நெகிழச் சாஅய்த்
தொன்னல மிழந்தவென் றடமென் றோளே.

இஃது ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

ப. உரை : அரசு பகை தணிந்து எல்லாரும் மீளும் வண்ணம் கார் வந்தது ; இத் தோளுக்குரியவரோ போதரார் என்றவாறு.

உரை : அரசர் பகைப்பொருட்டு மேற்கொண்ட போர்வினை தணியவும், முரசங்கள் ஒலி யடங்கவும், மிக்க முழக்கத்தையுடைய மேகம் மின்னி யிடித்துக் கார்ப்பருவத்தைச் செய்யத் தொடங்கிற்று; அது, தாம் குறித்த பருவமெனக் கருதி அவர் வாராமையின், மேனி யொளி குன்றப் பசலை பாய்ந்து, மின்னுகின்ற இழைகள் நெகிழ்ந்து நீங்கும் வண்ணம் மெலிந்து தம் பண்டை அழகினை இழந்த என் பெரிய மெல்லிய தோள்கள் மிகவும் அளிக்கத்தக்கவாயின எ. று.

எனவே, அரசர் பகை தணியுமாறு கார்வந்ததே யன்றி என் மென்றோள் மெலிவு கெடுமாறு அவர் வந்திலரென இரங்கியவாறும். **பகை,** ஆகுபெயர். முரசுபட என்பதை உவமமாக்குதலு மொன்று. கார்காலம் போர்வினைக்கு ஏற்றதன்மையின், **அரசு பகை தணிய** என்றும், போர் முரசும் ஒடுங்குதலால் **முரசுபட** என்றும் கூறினர். **சினை இ** என்பது இடிக்கு இலக்கணை. அடுக்கு, தோளின் மெலிவு மிகுதி யுணர்த்திற்று.

கார்ப்பருவ வரவில் மீண்டு வருவதாக வற்புறுத்திச் சென்ற தலைமகன் வருமுன்பே கார்ப்பருவம் வரக் கண்ட தலைமகள் ஆற்றுளாய், வினைவயிற் பிரிந்த வேந்தர் மீளுதற்குரிய கார்காலம் வந்துவிட்ட தென்பாள், **அரசு பகை தணிய முரசுபட எழிலி கார்தொடங்கின்று** என்றும், இந் நிலையில் வருதற்குரிய தலைமகன் வாராமையின், அவனுக் குரிய என் தோள்கள் வருந்தத் தக்க மெலிவை எய்துவ வாயின என்பாள், **அளியவோ அளிய தாமே** என்றும், நிறம் கெட்டுப் பசலை எய்திய திறத்தை **ஒளி பசந்து** எனவும், மெலிந்தொழிந்தமையை **மின்னிழை நெகிழச்**

சாஅய் எனவும், இளமை யழகு கெடுதலைத் **தொன்னலம் இழந்த என் தடமென்றோள்** எனவும் கூறினாள். தலைமகள் தோள் தலைவற் குரிய தென்பதை, "சாயிறைப் பணைத் தோட் கிழமை தனக்கே மாசின் றுதலும் அறியான்[1]" எனச் சான்றோர் கூறுதல் காண்க. **ஒளி பசந்து** என்றது பசலைபாய்தலும், **மின்னிழை நெகிழ** என்றது **உடம்பு நனி சுருங்குதலு** மாம்.

பெருமையுடையவாயினும் தலைமகன் வினைமுற்றி மீளுங்காறும் ஆற்றகில்லாமையின், **மென்றோள்** என்றாள்.

456. உள்ளார் கொல்லோ தோழி வெள்ளிதழ்ப்
பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்
வெண்கொடி யீங்கைப் பைம்புத லணியும்
அரும்பனி யளைஇய கூதிர்
ஒருங்கிவ ணுறைதல் தெளித்தகன் றோரே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் வந்திலனாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

உரை: தோழி, வெண்மையான இதழ்களையும் பகற் போதில் தோன்றும் திங்களைப் போலும் உருவினையுமுடைய பகன்றையின் பெரிய மலர், வெள்ளிய கொடியாகிய ஈங்கையின் பசிய புதர் அழகுற மலரும், பொறுத்தற் கரிய பனிப்போடு கலந்த கூதிர்ப்பருவத்தின்கண், நம்மோடு கூடி ஒருங்கு வதிதற் கேற்பக் கார்ப்பருவத்தே வருவல் என நம்மைத் தெளிவித்துப் பிரிந்த காதலர் அப்பருவவரவினை நினையார் கொல்லோ, நினைவரேல், வாராதிரார் ஆகலான் எ.று.

நினைவரேல் முதலாயின அவாய்நிலையான் வந்தன. **பகன்றை**, சிவதைக்கொடி "பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி[2]" என்பத னுரையில் **நச்சினார்க்கினியர்**, "இது சிவதை; 'பகன்றைப்பூ உற நீண்ட பாசிலைத் தாமரை'

1. அகம். 32. 2. குறிஞ். 88.

என்புழி வெள்ளிவட்டில் உவமை கோடலின், இது கிலு கிலுப்பை யன்று" என்று கூறுதலா லறிக. இது பனிக் காலத்து மலர்தலை, "பாண்டி லொப்பின் பகன்றை மலரும், கடும்பனி யற்சிரம் [1]" என்று சான்றோர் கூறுதல் காண்க.

பகன்றைக்கொடி ஈங்கைப் புதலிற் படர்ந்து மலர்ந்து விளங்குவது பற்றி, **வெண்கொடி ஈங்கைப் பைம்புதல் அணியும்** என்றார். பைம்புதல் அணியும் கூதிர், அரும் பனி அளைஇய கூதிர் என இயையும். கூதிரைத் தொடர் வது பனிப்பருவ மாயினும் கூதிர்தானும் குளிரைச் செய் யும் பருவ மாகலின், **அரும்பனி அளைஇய கூதிர்** என்றார்.

கார்ப்பருவத்தே வந்தாலன்றிக் கூதிர்க்கண் ஒருங்கு வதிதல் கூடாமையின், **கூதிர் ஒருங்கிவண் உறைதல் தெளித்தகன்றோரே** என்றும், ஈங்கை மலர்தலால் கார்ப் பருவம் வரக் கண்டவள் அவன் வாராமை யறிந்து, **உள் ளார் கொல்லோ** என்றும் கூறினள்.

கூதிர் காலத்தே மலர்தற் குரிய பகன்றை கார்ப்பரு வத்தே மலர்ந்து ஈங்கைப்புதலை அணிசெய்ய நம் காதலர் வருதற் குரிய கார்ப்பருவம் வந்தும், தாம் வந்து நலன் தாராராயின், இது தான் குறித்த பருவமென்பதை அறவே மறந்தாரேயாவர் என்றவாறு. ஆகவே, யான் ஆற்றுமாறு என்னை என்பதாம். "கார் தொடங்கின்றே காலை காதலர், வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை, வென்றி வேட்கையொடு நம்மு முள்ளார், யாதுசெய் வாங்கொல் தோழி [2]" எனப் பிறண்டும் தலைவி வருந்துமாறு காண்க.

457. பெய்பனி நலிய வுய்தல் செல்லாது
குருகினம் நரலும் பிரிவருங் காலைத்
துறந்தமை கல்லார் காதலர்
மறந்தமை கல்லாதென் மடங்கெழு நெஞ்சே.

---

1. நற். 56.　　2. அகம். 364.

இது, பருவவரவின்கண் ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரை : பெய்கின்ற பனி வருத்துதலால் உய்யுமா றின்றிப் புள்ளினம் ஒருங்கு கூடி யொலிக்கும் பிரிதற் கரிய கார்ப்பருவத்தே, நம்மைப் பிரிந்துறைதல் ஆற்றுராயினும், என் மடம் பொருந்திய நெஞ்சம், அவரை மறந்து சிறிது போதும் அமையாதாகலின் யான் செய்யுமாறு என்னை எ. று.

பெய்பனி, வினைத்தொகை. தொகைச் சொல்லாற் கூறியது, தனக்குரிய கால மெய்தியவழித் தவருது பெய்யும் தொழிற்பண்பை உணர்த்தற்கு. **உய்தல் செல்லாது,** ஒருசொல்லாய் உய்யாது என்பதுபட வந்தது. "கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது[1]" என்ருற் போல. **குருகினம்,** நாரை, கொக்கு முதலிய நீர்வாழ் பறவைகள். நீரின்கண் வாழும் இயல்பினவாகிய குருகுகளும் பெய்பனிக்கு ஆற்ருது வருந்துகின்றன என்றற்குக் **குருகினம் நரலும்** என்ருர். **துறந்து அமைகல்லார் காதலர்** என்றது தோழி கூற்றைக் கொண்டுகூறியது.

பெய்பனிக்கு ஆற்ருது குருகினம் நரலும் பிரிவருங் காலை யென்பதைக் காதலர் நன்கு அறிவராகலின், அவர் விரைவில் வந்தெய்துவர்; இப் பனிப்பருவத்தில் நின்னைப் பிரிந்து சிறிதுபோதும் இருத்தல் வல்லுநரல்லர் என்றற்கு, **பிரிவரு காலைத் துறந்து அமைகல்லார் காதலர்** எனத் தோழி கூறினளாக, நின் சொல்வழி யான் தேறியிருந்தே னுயினும், என் நெஞ்சம் இருத்தற் குரிய திண்மை யிழந்து அவரை நினைந்தவண்ணம் உளது என்பாள், **மறந்து அமைகல்லாது என் மடங்கெழு நெஞ்சு** என்றும், தாம் குறித்த பருவம் வந்துழியும் காதலர் வாராமையின் நம்மை மறந்தனர் என்று கொண்டதனைத் தோழி வற்புறுத்தவழியும் விடாமையின் **மடங்கெழு நெஞ்சு** என்றும் கூறினள் எனக் கொள்க. (எ)

---

1. அகம். 2.

458. துணர்க்காய்க் கொன்றைக் குழற்பழ மூழ்த்தன
அதிர்பெயற் கெதிரிய சிதர்கொள் தண்மலர்
பாணர் பெருமகன் பிரிந்தெனை
மாணல மிழந்தவென் கண்போன் றனவே.

இது, பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன் வரவு பார்த்திருந்த தலைமகள் பருவமுதிர்ச்சி கூறி ஆற்றளா யுரைத்தது.

ப. உரை: **சிதர்கோள் தண்மலர்** என்றது சிந்துதல் கொண்ட தண்ணிய கொன்றைப்பூ என்றவாறு **சிதர்**, சிந்துதல்.

உரை: குலைபொருந்திய காய்களையுடைய கொன்றையின், மகளிர் குழல் போலும் பழங்கள் முற்றின; முழங்கிப் பெய்கின்ற மழைக்கு உதிர்ந்த அதன் தண்ணிய மலர்கள், பாணர்கட்கு அவர் வேண்டும் பொருள்களை வழங்கும் பெருமகனாகிய நம் காதலன் பிரிந்தானாக, அவன் பொருட்டு மாட்சிமை யுற்ற அழகிழந்து பசந்த என் கண்களைப்போல் பொன்னிறம் கொண்டு தோன்றின எ. று.

கொன்றையின் பழம் ஊழ்த்தலும் அதன் மலர்கள் உதிர்தலும் கூறியது கார்ப்பருவ முதிர்ச்சி யுணர்த்தற்கு. கொன்றைப்பழம் குழல்போறலை, "வீயும் வியப்புறவின் வீழ்துளியான் மாக்கடுக்கை, நீயும் பிறரொடுங்காண் நீடாதே —ஆயுங், கழலாகிப் பொன்வட்டாய்த் தாராய் மடலாய்க், **குழலாகிக்** கோல்சுரியாய்க் கூர்ந்து,[1]" என்று பிறரும் கூறினர். "வென்றி மழவிடை யூர்ந்தார்க் குரியள் இக் கொன்றையம் பூங்குழலாள்[2]" என்றார் பிறரும். இதற்கு உரை கண்ட **அடியார்க்குநல்லார்**, "கொன்றைப் பழக் குழற் கோதையர் என்றார் **வளையாபதியினும்**" என்பார். பூத்த மரம் காய்த்துப் பழுக்குமிடத்துப் பூக்கள் உதிர்தல் இயல்பாயினும், கார்காலத்து மிகுபெயலால் விரைய

1. திணை. 150-93.　　2. சிலப். 16. கொளு. 6.

உதிர்ந்தமை தோன்ற, **அதிர்பெயற் கெதிரிய சிதர்கொள் தண்மலர்** என்றார். சிதர், வண்டுமாம். உதிர்ந்த பூப் பொன்னிறம் விளர்த்துத் தோன்றலின், பசலையுற்ற கண்ணுக்கு உவம மாயிற்று. "கொன்றைப்பூவின் பசந்த வுண்கண் [1]" என்ப. **பாணர் பெருமகன்,** பாணர்களைப் புரக்கும் தலைவன்; "அகவுநர் பெருமகன் [2]" "சான்றோர் பெருமகன் [3]" என்பன காண்க.

காதலன் குறித்த கார்ப்பருவம் வந்தும் அவன் வாரானாக, ஆற்றுமை மிக்க தலைமகள், வருவலென்ற கார்ப்பருவம் வந்து கழியும் செவ்வி எய்துவது கண்டு வருந்துகின்றா ளாகலின், **துணர்க்காய்க் கொன்றைக் குழற்பழம் ஊழ்த்தன** என்றும், கார்காலத்திற் பெய்யும் கனவிய மழைக்கு ஆற்றது கொன்றைப்பூ உதிர்தலின், **அதிர்பெயற் கெதிரிய சிதர்கொள் தண்மலர்** என்றும், மழையால் நனைந்து நிறம் விளர்த்துத் தோன்றும் பூ, பண்டைய அழகிழந்து பசந்து விளங்கும் கண்களை ஒத்தல் பற்றி, **மாணலம் இழந்த என் கண்போன்றனவே** என்றும் கூறினள். வண்டு பாடக் கொன்றை பூவைச் சொரிதல், பாடி வரும் பாணர்க்குப் பொன் வழங்கும் தலைமகனை நினைப்பித்தலின், அவனைப் **பாணர் பெருமகன்** என்றாள். **இஃது அழிவில் கூட்டத்து அவன் பிரிவாற்றுமையும் பசலை பாய்தலுமாம்.** (அ)

459. *மெல்லிறைப் பணைத்தோள் பசலை தீரப்*
புல்லவு மியைவது கொல்லோ புல்லார்
ஆரரண் கடந்த சீர்கெழு தானை
வெல்போர் வேந்தனொடு சென்ற
நல்வய லூரன் நறுந்தண் மார்பே.

இது, "வேந்தன் வினைமுற்றினன்; நின் காதலர் கடுக வருவர்" எனக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

---

1. ஐங். 500. 2. அகம். 113. 3. பதிற். 67.

உரை : பகைவருடைய கடத்தற் கரிய அரண்களைக் கடந்த மறமாண்பு அமைந்த தானையினையுடைய வெல்லு கின்ற போரைச் செய்யும் வேந்தனுடன், வினைவல பாங் கனாய்ச் சென்ற நல்ல நன்செய் நிலங்களை யுடைய ஊரனது நறுவிய தண்ணிய மார்பு, மெல்லிய தொடி யணிந்த பெரிய தோள்களால் பசலை தீருமாறு யாம் தழுவுதற்கு அமை யுமோ, அன்றி அமையாது விரிந்து விளங்குமோ எ. று.

இறை, ஆகுபெயர். **பணை.** மூங்கிலுமாம். **சீர்,** அடற் றகையும், ஆற்றலும், படைத்தகையும் உடைமையால் எய்தும் மறப்புகழ். தலைமக னாதலின் வேந்தனுக்கு வினைவல பாங்கனாய்ச் சென்றான் என்பது அவாய்நிலையான் வந்தது.

வினைமேற் சென்ற வேந்தன் அதனை முடித்தனன் என்றும், அதனால் தலைமகன் வரற்கு அமைந்தான் என்றும் அறிந்துளா ளாகலின், **வேந்தனொடு சென்ற நல்வயலூரன்** என்றும், தலைமகன் வரவு கேட்டு எய்திய உவகை மிகுதியால் புல்லு நினைந்து ஐயுற்று மெலிதலின், **புல்லவும் இயைவது கொல்லோ** என்றும் கூறினாள். **இஃது ஐயம்செய்தல்.** (௯)

460. *பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்*
இருங்கல் வெற்பன் றூதுந் தோன்றா
ததையிலை வாழை முழுமுத லசைய
இன்னா வாடையு மலைக்கும்
என்னா குவென்கொ லளியென் யானே.

இது, வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகனைப் பருவ முதிர்ச்சியினும் வரக் காணாது தலைமகள் சொல்லியது.

உரை : மிக்க சினத்தையுடைய வேந்தன் தானும் பாசறைக்கண் தங்குதலை வெறானயினன் : அதனாற் பெரிய கற்கள் பொருந்திய மலைநிலத் தலைவனாகிய நம் காதலனிடத் திருந்து தூதுகளும் வாராவாயின : இவற்றிற் கிடையே நெருங்கிய இலைகளையுடைய வாழைமரத்தின் அடிமுதல்

உச்சிவரை அசையும்வண்ணம் துன்பத்தைச் செய்யும் வாடைக்காற்றுப் போந்து வருத்தாநிற்கும்; ஆகலின், அளிக்கத் தக்க யான் என்னுகுவேன் கொல்லோ, அறியேன் எ. று.

பாசறை இருப்புக்கு மிக்க சினம் காரணமாகலின், **பெருஞ்சின வேந்தன்** என்றார். **பெருமை**, மிகுதிப் பொருட்டு; "பெரும் பொருளாற் பெட்டக்க தாகி[1]" என்றாற் போல. கார்காலத்தில் பாசறை இருக்கை இன்பம் பயவாதாகலின், முனிதல் கூறப்பட்டது. வினைமுற்றும் செவ்வியை நெருங்குதலின், தூது வாராதாயிற் றென்க. வேந்தனும் முனியான், தூதும் தோன்று, வாடையும் அலைக்கும்; ஆகவே என்னுகுவென் கொல், அளியேன் என இயையும். தாவரநூல் முறைப்படி வாழை, மர மெனற் காகாதாயினும், அடிப்பட்டு வந்த வழக்குப்பற்றி மரமென்றும்.

வினை முடியாமையின் பாசறைக்கண் தங்கி அதனை முடித்தலே பொருளாகக் கருதினுகைலின், **வேந்தன் பாசறை முனியான்** என்றும், போரிடைப் பகைவர்மாட்டுக் கண்ணேடாது வினைசெய்தல் வேண்டுதலின், **பெருஞ்சின வேந்தன்** என்றும், அவ் வேந்தனது தானை நோக்கி யிருத் தலின், **வெற்பன் தூதும் தோன்று** என்றும், கார்ப்பருவம் முதிர்ந்து பனிப்பினைச் செய்து வருத்துதலின், **இன்னு வாடையும் அலைக்கும்** என்றும் கூறினுள். "நிலமக்கள் சால வுடைத்தெனினும் தானை, தலைமக்கள் இல்வழியில்[2]" என்ப வாகலின், தானை நோக்கி யிருத்தல் இன்றியமையா தாயிற்று. **இன்னு வாடை** யென்றாள், காதலர்ப் பிரிந்தோர் புலம்பப் பெயல் கலந்து வருதலின். தூது தோன்றுமை யானும், வாடை அலைத்தலானும் ஆற்றுளாயினமை தோன்ற **அளியென் யானே** யென்றாள். உம்மை ஆற்றும் வாயிலாம் சிறப்புணர நின்றது. (ய)

1. குறள். 732. 2. ஷை. 770.

47. தோழி வற்புறுத்தபத்து.

இது, தலைமகன் பிரிந்தவழியும், பிரிந்து நீட்டியவழி யும், அவன் குறித்த பருவவரவின்கண்ணும் ஆற்ருளாய் வேறுபட்ட தலைமகளைப் பருவம் அன்மையும், தலைமகன் அன்புடைமையும், பிற தகுவனவும் கூறித் தோழி வன் புறை வகையால் ஆற்றுவிக்கும் பாட்டுக்களின் தொகுதி யாகலின் இப்பெயர்த்தாயிற்று.

461. வான்பிசிர்க் கருவியிற் பிடவுமுகை தகைய
கான்பிசிர் கற்பக் கார்தொடங் கின்றே
இனையல் வாழி தோழி யெனைய தூஉம்
நிற்றுறந் தமைகுவ ரல்லர்
வெற்றி வேந்தன் பாசறை யோரே.

இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி வரவு கூறி, "உரைத்த பருவம் வந்த தாகலான் அவர் வருவர்" என வற்புறீஇயது.

ப. உரை : கான் பிசிர் கற்ப என்றது மழை பெய்திட்டால் மரம் பெய்யும் என்னும் முறைமைபற்றிக் கூறியவாறு.

உரை: தோழி, மேகம் மழையைப் பெய்தலால் தொகுதியினையுடைய பிடவங்கள் அரும்பரும்ப, கானம் அம் மழையினை யேற்றுத் துளியைச் சிந்தாநிற்பக் கார்ப் பருவம் தொடங்குவதாயிற்று; வென்றியினை யுடைய வேந் தனது பாசறைக்கண் தங்கும் காதலர் அது தாம் வருவல் எனக் குறித்த பருவ மாகலின், சிறிதும் நின்னைப் பிரிந்திருத் தலை அமையாது கடுக வருவ ராகலின் நீ வருந்தற்க எ. று.

பிசிர்கற்ப என்பது ஒருசொல்லாய்ச் சிந்தாநிற்ப என்னும் பொருள் தந்து நின்றது. **பிசிர்**, மழையினது நுண்ணிய துளி. **கருவி,** தொகுதி. **பிடவு,** முல்லைவகையுள்

ஒன்று; மரமுமாம். இது கொத்துக் கொத்தாக மலர்வது பற்றிக் **கருவியின் பிடவு முகை தகைய** என்றார். "தொகு முகை விரிந்த முடக்காற் பிடவு [1]" என வருதல் காண்க. **பிடவு,** பிடா எனவும் வழங்கும்; "யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும் [2]" என **ஆசிரியர்** கூறுவது காண்க. **தகை,** அழகு. மலர்ந்து அழகுசெய்ய என்னும் பொருளில் ஈண்டுத் **தகைய** என்றதனால், இது தகை யென்னும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம் எனக் கொள்க. பிசிர் கற்றலாவது, மழை பெய்த பின்னர், மரங்கள் தாங்கி நிற்கும் மழைநீரைத் துளித்தல், "பெயல் உலந் தெழுந்த பொங்கல் வெண்மழை, அகலிரு விசும்பில் துவலை கற்ப [3]" என்று பிறரும் கூறுவது காண்க. கார் தொடங்கின்று; ஆகலின், பாசறையோர் அமைகுவரல்லர், இனையல் என மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க. கடுக வருவ ராகலின் என்பன முதலாயின குறிப்பெச்சம்.

கான் பிசிர் கற்பக் கார் தொடங்கின்றே என எடுத்து மொழிந்தாள், அது தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்திய பொழுதாகலின்; பிறரும், "துனைதரு தண்கார் வருதும் யாம் எனத் தேற்றிய பருவம் காண் அது பாயின்றால் மழையே [4]" என்பது காண்க. பிரிந்த காதலர் நின்னொடு பொருந்துதலை எஞ்ஞான்றும் நினைந்தொழுகும் நீர்மையர் என்றற்கு, **எனையதூஉம் நிற்றுறந்து அமைகுவரல்லர்** என்றாள்; பிறரும், "ஆண்டு அமைந்து உறையுந ரல்லர், நின் பூண்தாங் காகம் பொருந்துதல் மறந்து [5]" எனத் தோழி வற்புறுத்துமாறு அறிக.

வெற்றி வேந்தன் எனவே வினைமுற்றுதல் ஒருதலை என்பது பெற்றாம். வேந்தன் வினைமுடித்தமையும், கார்ப் பருவம் தொடங்கினமையும், தலைமகன் கடுக வருதற் கேதுவாயினமை பெற்றாம். (௪)

---

1. அகம். 344. 2. தொல். எழுத்து. 229.
3. நெடுநல். 19–20. 4. அகம். 85. 5. ஷை. 159.

462\. ஏதில பெய்ம்மழை காரென மயங்கிய
பேதையங் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவனினி மடந்தைநின் கலிழ்வே நின்வயின்
தகையெழில் வாட்டுந ரல்லர்
முகையவிழ் புறவி னாடிறந் தோரே.

இது, பருவம் கண்டு வேறுபட்ட கிழத்தியைத் தோழி பருவம் அன்றெனை வற்புறீஇயது.

உரை: மடந்தாய், அரும்புகள் மலரும் முல்லைக் காட்டினை யுடைய நாட்டினைக் கடந்து சென்ற காதலர், நின்னிடத்து உளதாய மேம்பட்ட அழகினைக் கெடச் செய்யும் பான்மைய ரல்ல ராகலின், இயைபில்லன வாய மழையைப் பெய்யும் மேகத்தைக் கார்ப்பருவத் தெழும் மேகமெனப் பிறழக் கொண்ட அறியாமையால் மலர்ந்த கொன்றையின் கோதை போலும் பூக்கள் நின்ற நிலையை நோக்கி இப்பொழுது வருந்தும் நின் துயரம் என்ன பயனைச் செய்யுமோ? கூறுக எ. று.

பெய்தற் குரிய கார்காலமாகிய ஏது இல்லையாகவும் பெய்கிறது இம் மழை என்பது தோன்ற **ஏதில பெய்ம் மழை** என்றார்; "மின்னுப் வானேர்பு இரங்கு மொன்றோ அதன் எதிர் கானமஞ்ஞை கடிய ஏங்கும், ஏதில கலந்த இரண்டற்கு என் பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே[1]" என்றார் பிறரும். **பேதையங் கொன்றை** என்றது விரிக்கும் வழி விரித்தல். **தகையெழில்,** "தகை வனப்பு[2]" என்றாற் போல மிக்க அழகு என்பதுபட நின்றது. நாடு இறந்தோர் தகையெழில் வாட்டுந ரல்லர்; ஆகலின், இனி நின் கலிழ்வு எவன் என மாறிக் கூட்டி வினைமுடிவு செய்க. கொன்றை, கோதைபோல் மலர்தலைப் பிருண்டும், "குறும்பல் கோதை கொன்றை மலர[3]" என்று கூறினார். **கோதை,** பூமாலை.

1\. குறுந். 194. 2. அகம். 69. 3. ஐங். 497.

பெய்தற் கேதுவாகிய கார்ப்பருவ மழையன்று என்று உரைக்கின்றாளாகலின், **ஏதில பெய்ம்மழை** யென்றும், அதனை ஏதுவாகக் கொண்டு, காரெனக் கருதிக் கொன்றை மலர்ந்தது அறிவுடைமையன்றெனப் பழித்தலின், **காரென மயங்கிய பேதையங் கொன்றை** என்றும், பேதையின் செயல் நோக்கிக் கலுழ்தல் பயனில் செயல் என்பாள், **எவன் இனி மடந்தை நின் கலிழ்வே** என்றும், **இனி** என்றதனால் இதுகாறும் அறிவு அறைபோகாது அவர் தெளித்த சொல் தேறி யிருந்த நீ இப்போழ்து கலிழ்தல் நன்றன்று என்றும், நாடு கடந்து சென்றாராயினும், நின் மாட்டுப் பெருங்காதலர் என்பாள், **தகையெழில் வாட்டுநர் அல்லர்** என்றும் கூறினாள்.

நாடு இறந்தா ராயினும் நின்பாற் பேரன்பின ராகலின், நின் நலம்கெட ஆண்டே தங்குவா ரல்லர், நீ வருந்தற்க என்பாள், **தகையெழில் வாட்டுநர் அல்லர்** என்றாள் என்றுமாம். "அகன்றன ராயினும் பெரும்பேரன் பினர் தோழி[1]" எனத் தோழி கூறுவது காண்க. வற்புறுத்தும் தோழி மலர்ந்து தோன்றும் கொன்றை முதலியவற்றிற்குப் பேதைமை ஊட்டிக் கூறுதலை ஏனைச் சான்றோரும், "மடந்தை மதியின்று, மறந்து கடன்முகந்த கமஞ்சூன் மாமழை, பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல், காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில, பிடவுங் கொன்றையுங் கோடலும், மடவ வாகலின் மலர்ந்தன பலவே[2]" என்றும், "மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை, கல்பிறங் கத்தம் சென்றோர் கூறிய, பருவம் வாரா வளவை நெரிதரக், கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த, வம்ப மாரியைக் காரென மதித்தே[3]" என்றும் கூறுப.

முகையவிழ் புறவின் நாடு என்றது, கார்ப்பருவ வரவை அவர்க்கு அப்புறவே மலர்ந்து காட்டித் தாழாது விரைந்து மீளச் செய்யு மாகலின் நீ வருந்துதல் ஒழிக என வற்புறுத்தியவாறு. (உ)

1. அகம். 91. 2. நற். 99. 3. குறுந். 66.

463. புதன்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரிநின்
நலமிகு கூந்தல் தகைகொளப் புனைய
வாரா தமையலோ விலரே நேரார்
நாடுபடு நன்கலந் தரீஇயர்
நீடினர் தோழிநங் காத லோரே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் தாழ்த்துழித் தோழி காரணம் கூறி வற்புறீஇயது.

உரை: தோழி, புதர்களின் மேலே மலர்ந்து தோன்றும் நறிய மலர்களை அழகுறத் தொடுத்து நின் வனப்பு மிக்க கூந்தல் அழகு கொள்ளப் புனைந்து மகிழ்வான் நம் காதலர் வாராதமைதலை ஒருகாலும் செய்யார்; ஆயினும், பகைவர் நாட்டின்கட் பெறப்படும் சீரிய பொருள்களைக் கொணர்தற்பொருட்டுத் தாழ்த்தனர், காண் எ. று.

தொடர்புபடத் தொடுத்தலைத் **தொடரி** என்றார்; "மனைவிளக் குறுத்து மாலை தொடரி[1]" என்றாற்போல. காதலர் என்றதற் கேற்பக் **கவின்பெறத் தொடரி** என்றும், "தகைகொளப் புனைய" என்றும் கூறினாள். தலைமகன் பிரிந்தவழித் தலைமகள் தன் கூந்தலிற் பூச்சூடி ஒப்பனை செய்து கோடல் கற்புநெறி யன்மையின், **தகைகொளப் புனைய** என்றார். பிறுண்டும் நின் காதலர் விரைந்து வந்தன ராகலின், "தொடிதோள் இவர்க எவ்வமும் தீர்க, நெறி யிருங் கதுப்பின் கோதையும் புனைக[2]" எனத் தோழி கூறுதல் காண்க. நன்கல மெனவே, நினக்கு நலம்செய் யும் பொருள்கள் என்றுளுமாம். நன்கல மாவன; பகைவர் தரும் திறைப்பொருளும், அவர்தம் நாட்டினை நலமுறுவித்தலால் எய்தும் பொருளுமாம்.

1. அகம். 86. 2. ஷை. 269.

பகைவர் நாடுகளை வென்று, அவர் தரும் திறைப் பொருள் பெறுதலே யன்றி, அந் நாடுகளைத் தமவாக்கி, அவற்றின்கண் ஆக்கம் மிகுமாறு தங்கி ஆவன புரிந்து பொருள் வரும் வாரி பெருக்குதல் அரச நீதி யாகலின், **நேரார் நாடுபடு நன்கலம் தரீஇயர் நீடினர்** என்றாள். "மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய, முல்லை முதலாச் சொல்லிய முறையால், பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும், இழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவே[1]" என்று விதித்தும், "நனிபுகன்று உறைதும் என்னுது ஏற்றெழுந்து, பனிவார் சிமையக் கானம் போகி, அகநாடு புக்கு அவர் அருப்பம் வெளவி, யாண்டுபல கழிய வேண்டுபுலத் திறுத்து, மேம்பட் மரீஇய வெல்போர்க் குரிசில்[2]" என்று கூறியும் சான்றோர் காட்டுதல் உணர்க.

நன்கலம் தருற்பொருட்டுச் சிறிது நீடின ராயினும், நின் நன்னலம் மறவாத நெஞ்சின ராகலின் விரைந்து வருவர் என்பாள், **வாராது அமையலோ விலர்** என்றாள். "காடிறந் தகன்றோர் நீடின ராயினும், வல்லே வருவர் போலும் ....மாவின் தளிரே ராகம் தகைபெற முகைந்த, அணங்குடை வனமுலைத் தாயநின், சுணங்கிடை வரித்த தொய்யிலை நினைந்தே[3]" என்று பிறரும் கூறுவது காண்க. ()

464. *கண்ணெனக் கருவிளை மலரப் பொன்னென*
இவர்கொடிப் பீர மிரும்புதன் மலரும்
அற்சிர மறக்குந ரல்லர்நின்
நற்றோண் மருவரற் குலமரு வோரே.

இது, வரைந்த அணுமைக்கண்ணே பிரிந்த தலைமகன் குறித்த பருவம் வந்துழி, இதனை மறந்தார் என்ற தலைமகட்குத் தோழி, "வரைவதற்கு முன்பு அவர் அன்புடைமை இதுவாக லான் மறத்தல் கூடா" தெனச் சொல்லி வற்புறீஇயது.

---

1. தொல். பொ. 28. 2. மதுரை. 148-51. 3. அகம். 177.

உரை : தோழி, வரைதற்கு முன்பு, நின்னுடைய நல்ல தோள்களைக் கூடுதல் கருதிப் பல்லாற்றானும் துயருழந்து வருந்தினாராகலின், கருவிளைகள் கண்போல் மலரவும், அருகுள்ளவற்றைப் பற்றிப் படரும் பீர்க்குத் தான் படர்ந்த பெரிய புதலின்கண் பொன்போல் மலரவும் எய்தும் பனிக் காலத்தே நின்னை மறந்துறைவாரல்லர் எ. று.

கருவிளை, கருங்காக்கணம்பூ. இது மகளிர் கண்போன் மலர்தலை, "காதலர்ப் பிரிந்த கையறு மகளிர், நீர்வார் கண்ணிற் கருவிளை மலர[1]" என்பதனாலும், பீர்க்குப் பொன்போல் மலர்தல், "புன்கொடி முசுண்டைப் பொறிப் புற வான்பூப், பொன்போற் பீரமொடு புதற்புதல் மலர[2]" என்பதனாலும் அறிக. பீர்க்கம்பூ மகளிர் பசலைபோறல், "புதலிவர் பீரி னெதிர்மலர் கடுப்பப், பசலை பாய்ந்த நுதலே னாகி[3]" என்று சான்றோர் கூறுதலால் அறியப்படும். **உலமரல்**, அலமரல் போல்வதோர் உரிச்சொல்; "ஊறில் வழிகளும் பயில வழங்குநர், நீடின்றாக இழுக்குவர் அதனால், உலமரல் வருத்தம் உறுதும்[4]" "உலமரல் உயவுநோய்க்கு உய்யுமாறுரைத்துச்செல்[5]" என்று சான்றோர் வழங்குதல் அறிக. **மருவரல்**, கூடுதல்.

தலைமகள் தலைமகனைப் பிரிந்து கையற்று வருந்துவதனாலும், மேனி பசலைபாய்ந்திருத்தலாலும் இவையிரண்டனையும் உடன்கூறினாள். பல்லாறுவன, களவின்கண் இரவினும் பகலினும் குறிவழி யொழுகலும், இடையீடு படுதலும், சேட்படுக்கப் படுதலும் முதலாயின. மறப்பவராயின் இத்துணை இடையீடுகளையும் தாங்கி நின்னை மணப்பாரல்லர்; ஆகவே, அவர் நின்பாற் பிரிவருங் காதலரென்பாள், **நற்றோள் மருவரற்கு உலமருவோரே** என்றும், அப்பெற்றியார் இது தாம் குறித்த பருவமென்று மறவாதே விரைய வருவாரென்றற்கு, **அற்சிரம் மறக்குநரல்லர்** என்றும் கூறினாள். (௪)

---

1. அகம்: 294.　2. நெடுநல். 13-4.　3. அகம். 135.
4. ஷை. 18.　5. கலி. 113.

465. நீரிகு வன்ன நிமிர்பரி நெடுந்தேர்
கார்செய் கானம் பிறபடக் கடைஇ
மயங்குமல ரகல நீயினிது முயங்க
வருவர் வாழி தோழி
செருவெங் குரிசில் தணிந்தனன் பகையே.

இது, பருவம் கண்டு வேறுபட்ட தலைமகளை வேந்தன் வினைமுடித்தா னெனக் கேட்ட தோழி வருவரென வற்புறீஇயது.

ப. உரை: நீரிகுவன்ன நிமிர்பரி என்றது நீரோட்டம் போல உயர்ந் தசைந்து செல்லும் செலவினையுடைய மா என்றவாறு.

உரை: தோழி, நீர் விழுதலை யொத்த மிக்க செலவினை யுடைய நெடிய தேரைக் கார்ப்பருவம் தொடங்கிய காடுகள் பிற்படுமாறு முற்படச் செலுத்திக் கூடுதற் குரிய அகன்ற மார்பினை நீ நன்கு முயங்குமாறு நம் காதலர் வருவர், போரை விரும்பும் அரசனும் பகை தணித்தற்குக் கொண்ட வினைமுற்றின னாகலான் எ. று.

தொழிலுவமம் தேரினது செலவின் விரைவுச்சிறப்பு உணர நின்றது; "குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக[1]" என்றார் பிறரும். கார்ப்பருவத்தே மலரும் மலர்களாலும், மழைத்துளியை யேற்றுச் சிந்துதலாலும் கார்ப்பருவ வரவினை இனிது காட்டுதலின், **கார்செய் கானம்** எனப் பட்டது. மயங்கு, முதனிலைத் தொழிற்பெயர். அஃது இப் பொருட்டாதல், "நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும், கலந்த மயக்க முலக மாகலின்[2]" என்பதனாலும் அறிக. **மயங்குமலர் அகலம்** என்பதற்கு மாலை யணிந்து விளங்கும் மார்பு என்றும் கூறுவர். **செருவெங் குருசில்** என்றது வேந் தனை; "பகைவெங் காதலர்[3]" என்றாற்போல. வீரராயினார்

1. குறுந். 189. 2. தொல். பொ. 644. 3. ஐங். 452.

போரே விரும்பும் பான்மைய ராகலின், **செருவெங் குரிசில்** என்றார். "போரெனிற் புகலும் புனைகழல்மறவர்[1]" என்றும், "மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது[2]" என்றும் கூறினர் பிறரும்.

குரிசில் பகை தணிந்தமையாலும், தாம் குறித்த பருவம் வந்தெய்தினமையாலும், காதலர் விரைய வருவ ரென்பாள், **வருவர் வாழி தோழி** என்றும், தலைமகற்கு எய்தும் இன்பத்தை **நீஇனிது முயங்க** என்றும் கூறினாள்.

466. *வேந்துவிடு விழுத்தொழி லெய்தி யேந்துகோட்*
டண்ணல் யானை யரசுவிடுத் தினியே
எண்ணிய நாளகம் வருதல் பெண்ணியல்
காமரு சுடர்நுதல் விளங்கும்
தேமொழி யரிவை தெளிந்திசின் யானே.

இது, பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளை, அவர் போன காரியம் இடையூறின்றி முடித்து வருதல் பல்லாற்றானும் தெளிந்தேன் எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

உரை: பெண்மைக்குரிய இயல்பு, அழகிய ஒளி பொருந்திய நெற்றியிடத்தே விளங்கும் இனிய மொழிகளை யுடைய அரிவையே, பெருவேந்தர் பொருட்டுச் செல்வ தாகிய விழுமிய தூதினை மேற்கொண்டு சென்று முடித்து, உயர்ந்த கொம்புகளையுடைய பெரிய யானை மிக்க அவ்வரசர் பால் விடைபெற்றுக் கொண்டு நமக்குக் குறித்த பருவத்தே தாழாது வருதலை இப்பொழுது பல்லாற்றானும் அறிந்தேன்; ஆகலின், நீ ஆற்றியிருப்பாயாக எ. று.

"வேந்துவிடு தொழிலொடு சென்றனன்[3]" என்றாற் போலாது, **வேந்துவிடு விழுத்தொழில்** என்றது, உயர் தொழிலாகிய தூதின்மேல் நின்றது; "வேந்துவிடு விழுத் தூது ஆங்காங்கு இசைப்ப[4]" என்று பிறரும் குறிப்பது

1. புறம். 31.　　2. முல்லை. 67.　　3. புறம். 319.
4. அக. 284.

காண்க. **வேந்து** என்றது அரசர் இனத்துக்குரிய பண்பு கொள்பெயராய் விழுத்தொழிலாகிய தூதினைச் சிறப்பித்து நின்றது. **அரசு** என்றது, தூதுவினையால் சந்து செய்விக்கப் பட்ட வேந்தர் மேலதாயிற்று. **விடுத்தலாவது,** ஈண்டு வேந்தர்க்கு விடை கொடுக்குமாற்றால் தான் அவர்பால் விடை பெற்று மீளுதல்; "ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன[1]" என்பதனால், தலைமகன் தூதுபோதல் அமையும் என அறிக. பெண்ணியல் நுதலிடத்தே விளங்கும் அரிவை, தேமொழி அரிவை என இயையும். **பெண்ணியல்,** கண்ணிடனுடைல், தோள் இடம் துடித்தல், நுதலொளி சிறத்தல் முதலிய பெண்பாற் குரிய குறிகள். பல்லாருவன, தலைமகனோடு உடன்சென்று மீண்டோர் கூறுவனவும், நன்னிமித்தமும் பிறவுமாம். **சின்,** முன்னிலை யசைச்சொல்; "ஏனையிடத்தொடும் தகுநிலை யுடைய என்மனார் புலவர்[2]" என்றதனால் தன்மைக்கண் வந்தது.

தற்பயன் கருதாது நாட்டின் நல்லரசு கண்ணிய செலவாதலின் தலைவனது தூதிற் பிரிவை **வேந்துவிடு விழுத்தொழில்** என்றும், அதனை மேற்கொண்டு சென் றவன் இடையூறின்றி இனிது முடித்தமை தெளிந்து கூறலின், **எய்தி** என்றும், அதனால் அவன் பொன்றுப் புகழும் குன்றாப் பொருளும் பெற்று மீளுதலை, **ஏந்து கோட்டு அண்ணல் யானை அரசு விடுத்து** என்றும், பிரிவின் கண் தான் குறித்த நாளை மறவாது நினைவிற் கொண்டு அக் காலவெல்லைக்குள் மீள்வன் என்பாள், **எண்ணிய நாளகம் வருதல்** என்றும், அதனை நின்பால் தோன்றும் சில பெண்மைக்குறிகளால் தெளிந்தேன் என்பாள், **பெண்ணியல் காமர் சுடர்நுதல் விளங்கும்** என்றும், **தெளிந் திசின் யானே** என்றும் கூறினாள். காதற் கொழுநற் குளவாகும் நன்மை தீமைகள் மகளிர் மேனிக்கண் தோன் றும் சில குறிகளால் உணரப்படும் என்பது பற்றி, **பெண்**

1. தொல். பொ. 26. 2. தொல். சொல். 275.

ணியல் காமர் சுடர்நுதல் விளங்கும் என்ருள். "சென்ருேர் புனைநலம் வாட்டுந ரல்லர், மனைவயின் பல்லியும் பாங்கொத் திசைத்தன, நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே [1]" என்றும், "இருஉ வூங்கண் இனிய படுஉம், ...பொய்யலர் வருவர் வாழி தோழி [2]" என்றும் தோழி வற்புறுத்துவது காண்க. (௬)

467. புனையிழை நெகிழச் சாஅய் நொந்துநொந்
திணையல் வாழியோ இகுளை வினைவயின்
சென்ருேர் நீடினர் பெரிதெனத் தங்காது
நம்மினும் விரையு மென்ப
வெம்முரண் யானை விறற்போர் வேந்தே.

இது, தலைமகன் வினைவயிற் பிரிய ஆற்ருளாகிய தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

ப. உரை: **சென்ருேர் நீடினர் பெரிது** என்றது பெயர்த்துரை.

உரை: தோழி, வெவ்விய மாறுபாட்டினை யுடைய யானைப்படை கொண்டு சிறந்த போரைச் செய்யும் வேந்தன் தான் சென்றவிடத்தே நெடிது தங்கினன் என்றே ஞகை, அவ்விடத்தே தங்காமல் போந்து கூடுதலை நம்மினும் மிக விரைகுவா ஞயினன் என உடன் சென்று மீண்டோர் கூருநிற்ப ராகலின், வினைவயிற் பிரிந்த நம் காதலர் விரைய வாராது மிகவும் தாழ்த்தனர் எனச் சொல்லி அழகுற அணிந்த இழைகள் நெகிழ்ந்து நீங்குமாறு உடம்புநனி சுருங்கி உளம் மிக வருந்தி அழுதலைச் செய்யற்க எ. று.

புனையிழை, வினைத்தொகை. அடுக்கு மிகுதிப் பொருட்டு; "சில்செவித் தாகிய கேள்வி நொந்து நொந்து [3]" என்ருற் போல. **இகுளை**, தோழி; "இகுளை கேட்டிசின் காதலந் தோழி [4]" என வருதல் காண்க.

1. கலி. 11. 2. நற். 246. 3. புறம். 68. 4. அகம். 138.

வேந்துஎன்றது தோழியால் வினவப்பட்டோர் தலைமகனைக் குறித்துரைத்தது; தோழி கூற்றுக்கினும் அமையும். **சென்றோர் நீடினர் பெரிதென** என்றதை இரண்டிடத்தும் கூட்டி, நீடினர் பெரிதென இனையல் எனவும், நீடினர் பெரிது எனத் தங்காது ....விரையும் என்ப எனவும் உரைக்க.

உண்டியிற் சுருங்கி உடம்பு மிக மெலிந்து உறக்கமுமின்றி வருந்தும் தலைமகளது ஆற்றுமையை விதந்து, **புனையிழை நெகிழச் சாஅய் நொந்துநொந்து** என்றும், பிரிந்தோர் நின் மாண்நலம் விழைந்து மீளுங்கால் அது நின்பால் குன்றியிருக்குமாயின் பெரிதும் வருந்துவ ராகலின் நீ மெலிதல் கூடா தென்பாள், **இனையல் வாழியோ இகுளை** என்றும், அவர்க்குத் தாம் மேற்கொண்ட வினையினும் நின் கூட்டமே பொருளாதலின், அதனை விரைந்து முடித்துத் துனைபரி நெடுந்தேர் கடவிக் கடுக வருவா ராயினர் என்பாள், **நம்மினும் விரையும்** என்றும், அதனை உடன் சென்று மீண்டோர் பலரும் கூறுவர் எனப் பிறர்மேல் வைத்தும் கூறினுள். "வினை பொருளாகத் தவிர்விலர் கடை சிவந்து, ஐய அமர்த்த உண்கண் நின், வையேர் வாலெயிறு ஊறிய நீரே [1]" எனப் பிறரும் கூறுதல் காண்க. உடன்சென்று மீண்டோர்பால், சென்றோர் நீடினர் பெரிது என்றேனுக, உடனே அவர் என்னை மறுத்துத் **தங்காது நம்மினும் விரையும் என்ப** என்று தோழி கூறினுள்.

புனையிழை நெகிழ என்றது **உடம்புநனி சுருங்கல், நொந்து நொந்து** என்றது அழிவில் கூட்டத்து **அவன் பிரிவாற்றுமை.** (எ)

468. *வரிநுணல் கறங்கத் தேரை தெவிட்டக்*
கார்தொடங் கின்றே காலை யினிநின்
நேரிறைப் பணைத்தோட் கார்விருந் தாக
வடிமணி நெடுந்தேர் கடைஇ
வருவ ரின்றுநங் காத லோரே.

---

1. அகம். 237.

இது, பிரிவுநீட ஆற்றாளாய தலைமகட்குத் தோழி பருவம் காட்டி இன்றே வருவரென வற்புறீஇயது.

உரை: வரிகளையுடைய தவளைகளும் தேரைகளும் ஒலிசெய்ய இக்காலைக் கார்ப்பருவம் தொடங்குவ தாயிற்று: இது தாம் வருவல் எனக் குறித்த பருவமாகலின், இனி, நம் காதலர் நின்னுடைய நேரிய தொடி யணிந்த பருத்த தோள் கட்குப் பொருந்திய விருந்தாதலை வேண்டி வடித்த ஓசை யினையுடைய மணி கட்டிய நெடிய தேரைச் செலுத்தி இன்றே வருவர், காண் எ. று.

கார்ப்பருவத்தே தேரையும் தவளையும் ஒலித்தல் இயல்பாதல், *"அவல்தோறும் தேரை தெவிட்ட*[1]" எனப் பிறாண்டும் கூறியவாற்றா லறிக. **கறங்கல்,** தெவிட்டல் *என்பன ஒருபொருட் கிளவி.* **நுணல்,** *தவளை.* "*மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும் தன் வாயால் கெடும்*[2]" என்பர் **முன்னுறையரையனார். காலை,** ஈண்டுப் பருவத்தின் மேற்று. **ஆர் விருந்து,** பெறுதற்கரிய உயர்ந் தோர் விருந்து. **வடிமணி,** வடித்த ஓசையை யுடைய மணி. ஓசையின் இயல்பு அதனை வெளியிடும் மணிமேல் ஏற்றப் பட்டது.

பிரிந்து சென்ற தலைவர் மீண்டு வந்தவழி விருந்து *செய்து கோடல் மகளிர்க்கு விதியாகலின்,* **பணைத்தோட் கார் விருந்தாக** என்றும், அவன் வரவுணர்த்தி மகிழ்வித் *தலின்,* **வடிமணி நெடுந்தேர்** *என்றும்,* **நம் காதலோரே** எனப் பின்னர்க் கூறுதலின், **இன்று** என்றும் கூறினாள். (அ)

469. பைந்தினை யுணங்கல் செம்பூழ் கவரும்
வன்புல நாடற் றரீஇய வலனேர்பு
அங்க ணிருவிசும் பதிர வேறொடு
பெயல்தொடங் கின்றே வானம்
காண்குவம் வம்மோ பூங்க ணோயே.

---

1. ஐங். 453. 2. பழ. 184.

இது, பிரிவு நீட ஆற்றாளாய தலைமகட்குத் தோழி, "அவரை நமக்குத் தருதற்கு வந்தது காண் இப்பருவம்" எனக் காட்டி வற்புறீஇயது.

ப. உரை: அங்கண் இருவிசும்பு அதிர ஏறொடு பெயல் தொடங்கின்றே வானம் என்றது அவர் தப்பாது வருவரென்பது கூறிற்று.

உரை: பூப்போலும் கண்களை யுடையாய், பசிய தினையினின்று உதிர்ந்து உலர்ந்தவற்றைச் செம்பூழ்ப் பறவைகள் கவர்ந்து உண்ணும் புன்செய்நில நாடனைக் கொணர்வான், மழை வலமாக எழுந்து அகன்ற இடத்தை யுடைய விசும்பின்கண் இடியேற்றோடு முழங்கிப் பெயலைத் தொடங்கிற் றாகலின், அவர் தப்பாது வருதலைக் காணலாம், வருக எ. று.

"பூவென் ஒருபெயர் ஆயியல் பின்றே, ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே [1]" என்புழி உம்மையை எச்சவும்மையாகக் கோடலால் மெல்லெழுத்து மிகுதலும் உரித்து எனக் கொண்டு அடக்குக. "பூங்கணுய மூக்க லூங்காள் [2]" என்றார் பிறரும். செயப்படுபொருள் வருவிக் கப்பட்டது. **செம்பூழ்,** காடையினத்தைச் சேர்ந்ததொரு புள். **வன்புலம்,** முல்லையைச் சார்ந்த புன்செய்நிலப் பகுதி; "வன்புலக் காட்டுநாட் டதுவே [3]" என்பதனாலு மறிக. ஞாயிறே யன்றி மழையும் மேருமலையை வலமாக எழுந்து வருதலின், **வலன் ஏர்பு** என்றார். "பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செலல் எழிலி [4]" என்றும், "தாழ்பெயற் பெருநீர் வலனேர்பு வளைஇ, மாதிரம் புதைப்ப [5]" என்றும் சான்றோர் கூறுதல் காண்க.

---

1. தொல். எழுத். 268. 2. நற். 90. 3. அகம். 94.
4. முல்லை. 4-5. 5. அகம். 84.

வானம் பெயல் தொடங்கும் கார்ப்பருவம் அவர் தாம் வருவது குறித்த பருவ மாகலின், **தரீஇய** என்றும், அப்பருவவரவில் தப்பாது வருவ ரென்பாள், **காண்குவம் வம்மோ** என்றும் கூறினள். நடுக்கப் பொருட்டாய உரிச் சொல் முழங்குதல் மேற்று, **பூங்கணோயே** என்றது, தலைமகள் மழையெழுதல் நோக்கித் தலைமகன் வாராமையால் ஆற்றாளாயினமை யுணர்த்திற்று. வன்புலம் தனக்குரிய கார்ப்பருவ வரவில் இனையை விளைத்துச் செம்பூழ் முதலிய வற்றை ஊட்டுதல் போலத் தாமும் அப்பருவ வரவில் தாழாது போந்து நமக்கு நலஞ்செய்வா ரென உள்ளூறுத் துரைத்தலின், **காண்குவம் வம்மோ** என்று வாளாது உரைத்தாள். "துணைதரு தண்கார் வருதும் யாம்எனத் தேற்றிய, பருவம் காண்அது பாயின்றால் மழையே[1]"எனப் பிறாண்டும் தோழி கூறுதல் காண்க. (௯)

470. இருநிலங் குளிர்ப்ப வீசி யல்கலும்
அரும்பனி யளைஇய வற்சிரக் காலை
உள்ளார் காதல ராயி னொள்ளிழை
சிறப்பொடு விளங்கிய காட்சி
மறக்க விடுமோநின் மாமைக் கவினே.

இது, பருவம் வந்தது கண்டு தாம் குறித்த இதனை மறந் தாரென வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

உரை : ஒள்ளிய இழையினையுடையாய், மழையின்றி வெம்மை மிக்கிருந்த பெரிய நிலம் குளிருமாறு மழையைப் பெய்து பொறுத்தற் கரிய குளிரை நாளும் கலப்பித்த அற் சிரப் போழ்தின்கண், காதலர் நம்மை நினையாராயின், பெருமையுடன் விளங்குதற் கேதுவாகிய அவர் அறிவு தானும் நின் மாமைக்கவினை மறத்தற்கு விடுமோ, விடாது காண் எ. று.

---

1. அகம். 85.

குளிர்ப்ப என்வே மழையின்மையால் வெம்மை மிக்கு இருந்தமையும், கார்மழையால் அது தணிந்து குளிர் எழுந் தமையும் பெற்றும். மிக்க வெம்மையைப் பொறுத் திருந்த நிலம் பனி கலந்த அற்சிரக் காலக்கு ஆற்றுது என்றற்கு **இருநிலம்** என்றும், கார்கால இறுதியில் பெய்யும் மழை பனி கலந்து குளிர் செய்யும் இயல்பிற் ருதலின், **அரும்பனி அளைஇய அற்சிரம்** என்றும் கூறினர். **ஆயின்** என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. காதலர் உள்ளா ராயினும், மாமைக்கவின் அவரது காட்சியை மறக்கவிடுமோ என இயையும். ஓகாரம் எதிர்மறை.

அரும்பனி யளைஇய அற்சிரக் காலையைக் கூறினள், அது தலைவன் குறித்த பருவமாகலின். இது தலைமகள் கூற்றினைக் கொண்டு கூறியது. **உள்ளாராயின்** என்றது மறவாமை யுணர நின்றது. சிறப்பெய்துதற்கு ஏதுவாகிய ஆற்றல் மூன்றனுள், அறிவு சிறந்தமையின், **சிறப்பொடு விளங்கிய காட்சி** யென்றும், அதுதானும் உள்ளத்தைச் சென்றவிடத்தாற் செலவிடாது நன்றின்பால் உய்ப்ப தாகலின், **காட்சி மறக்க விடுமோ** என்றும், சிறப்பொடு விளங்கும் அவரது அறிவை நின்வயிற் பிணிக்கும் வன்மை நின் அழகிற்கு உண்டென்பாள் **நின் மாமைக் கவின்** என்றும் கூறினள். அன்பிலர் கொடியர் என்ற தலை மகட்குத் தோழி, அவர் அன்பும், அறிவும் ஒருங்குடைய ராகலின் தப்பாது வருவரென வற்புறுத்தியவாறு. (ங)

48. பாணன் பத்து.

பாணர் என்பவர், தமிழகத்தில் தமிழ்மொழியோடு நெருங்கிய தொடர்புகொண்டு அது வளர உடன்வளர்ந்து அது வீழ உடன்வீழ்ந்து மறைந்து போன பழந்தமிழ்க் குடிகள். இவர்கள் வளம்பெற்று வாழ்ந்த காலம் இத் தொகைநூற் பாட்டுக்கள் தோன்றிய சங்ககாலமாகும். அக்காலத்தே, தமிழ், இயல் இசை கூத்து என மூன்றாய் இயன்று மூவேந்தர் போல் முழுப்புகழ் எய்தி நின்றது. மூவேந்தரும் குறுநிலத் தலைவரும் ஏனைச்செல்வரும் முத் தமிழையும் தம் நினைவு சொல் செயல் என்ற மூன்றையும் போலப் பேணி வளர்த்தனர். அதனால் இயல்வகை புலவ ரிடத்தும், இசைவகை பாணரிடத்தும், கூத்துக் கூத்த ரிடத்தும் வளர்ந்து வந்தன. புலவர் ஓம்பிய இயற்றமிழை வேந்தரும் பிற செல்வரும் பெரிதும் விரும்பி, புலவர் கட்கு ஊரும் பொருளும் மிகைபட நல்கி மேன்மை செய் தனர். அப்புலவர்களால் தொல்காப்பியம் முதலிய இலக் கண வழக்குநூல்களும், திருக்குறள் முதலிய வாழ்க்கை நூல்களும் தோன்றி வழிவழியாக வழங்கிவருவன வாயின. பாணர்க்கும் கூத்தர்க்கும் வேண்டுவன நல்கிச் சிறப்பித்த தனால் பெருநாரை பெருங்குருகு முதலிய இசைநூல் களும், பரதம் அகத்தியம் முதலிய கூத்துநூல்களும் தோன்றிச் சுமார் 1000 ஆண்டுகட்கு முன்வரை இருந்து பின்னர்ப் பாணர் முதலியோர் பேணுவாரற்று வீழ்ந்த போது உடன் வீழ்ந்து மறைந்தன.

தமிழகத்துத் தமிழினத்தவர்க்குள்ள பிறவிப் பண்பு களுள் புதுமை காமுறல் என்பது சிறந்த ஒன்றாகும். தமிழ்த் தலைமகன் இயல்பு கூறுமிடத்து, அவன் "நாளும் புதுவோர் மேவலன் [1]" என்று சான்றோர் குறிப்பர். யாவ

---

1. ஐங். 17.

ரேனும் புதியவர் வரக் காணினும் புதுக்கருத்தும் புது மொழியும் எய்தப் பெறினும் அவர்தம் குணம் செயல் களையோ, அவற்றின் நலந்தீங்குகளையோ முன்னுற நோக்காது வரவேற்று மேற்கொண்டு தழீஇச் செல்வது அப் புதுமைக் காமத்தின் செயற் சிறப்பாகும்.

பெருநிலப் பகுதியாகிய ஆசிய நாட்டின் கிழக்கில் வாழும் மக்களுள், சீனர், சப்பானியர், சாவகர், அருமணர் (பர்மியர்) என்ற மக்களினத்தைத் போன்றவரே தமிழர்; பண்டை நாளில் மேலை நாட்டவரோடு நெருங்கிய தொடர்பு பெறாது கீழ்ப்பகுதியில் வாழ்ந்த சீனர் முதலாயினருடன் தொடர்புகொண்டு வாழ்ந்திருக்கின்றனர். தமிழ்நாட்டு வழக்காறுகள் பல சீனம் சாவகம் அருமணம் முதலிய நாடுகளில் காணப்படுதற்குக் காரணம் இதுவேயாகும். என்றாலும், புதுமைபால் பெருங்காமம் கொண்டு அதற்குத் தலைதாழ்ந்து மேற்கொண்டொழுகும் மனப்பான்மை தமிழினம் ஒன்றினிடத்தில்தான் சிறந்து காணப்படுகிறது. அதன் விளைவே, இன்று தமிழினம் தாழ்ந்து பிறர்க்குப் பணியாளாம் சிறுமை எய்தி நிற்பதும் சீனரும் சப்பானியரும் வல்லரசுகளாய் வாழ்வதுமாகும்.

சங்ககாலத்துக்குப் பின்புதான் தமிழினத்தை இந்தப் புதுமைக் காமவெறி பற்றி அலைக்கத் தொடங்கிற்று. புதுமைக்கு முதன்மையும் தலைமையும் தந்து பேணியதனால், தனக்குரிய தமிழ்க்கருத்துக்களையும் தமிழ்மொழியையும் தமிழினம் புறக்கணிக்கத் தலைப்பட்டது. புதுமை வெறி பற்றி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் கழியினும், இன்னும், "தமிழ்தானே" எனப் புறம்பழிக்கும் புல்லறிவு கற்று வல்ல பெரியோர் முதல் கல்லா இளைஞர் ஈருக எல்லாருடைய பேச்சிலும் இருந்து வருவது நாடறிந்த உண்மை. "ஆங்கிலம் தானே" என எந்த ஆங்கிலேயனும், "சருமனி தானே" என எந்தச் சருமானியனும், "வங்காளம் தானே" என எந்த வங்கா

ளியும் கூறுதற்கு நாணும் இழிமையுரை, கற்ற தமிழன் நாவில் தங்குதடை யின்றித் தவழ்ந்து விளையாடுகிற தென்றல், தமிழினம் இழிமக்களினத்திலும் கடைப்பட்ட இழினமாகி யிருப்பது இந்தப் புதுமையிற் காமுறும் புன்மைப்பண்பு தந்த பொதுப்பரிசு என்னலாம்.

சங்ககாலத்துக்கும் பல்லவர்காலத்துக்கும் இடையே வடமொழியும் வடவர் கருத்துக்களும் தமிழகத்தே பெரு வாரியாகப் புகத் தலைப்பட்டன. புதுமைக் காமுகரான தமிழர் அவற்றை ஆர்வத்தோடு வரவேற்றனர்; வடவர் கருத்துக்கள் பல தமிழ்வாழ்க்கையில் தகுநிலை பெற்றன. தமிழர் வடமொழியில் பெரும்புலமை எய்தினர். வேத வேதாந்த நூல்வகைகளிலும் வடமொழி வல்ல தமிழ்ச் சான்றோர் செய்தன பல உண்டு. அருத்த சாத்திரம் எழுதிய கௌடிலியரும், நாலந்தா பல்கலைக் கழகத்தில் தலைமை பெற்று விளங்கிய தருமபாலரும், பௌத்த தருக்க ஞானியான திக்கநாகரும், பட்டாசாரியன் மதத்தை நிறுவிய குமரில பட்டரும் பிறரும் தமிழ்நாட்டுத் தமிழி னத்துச் சான்றோர் என்பர். பல்லவர் காலத்தும் தமிழகத் தார் வடமொழிக்கும் அதன் பயிற்சிக்குமே முதன்மையும் தலைமையும் தந்து புதுமைவெறியராய்ப் பொலிவுற்றனர். பல்லவர்க்குப் பின் வந்த பாண்டியர் சோழர் என்ற தமிழ் வேந்தர் காலத்தும் தமிழ்மக்கள் புதுமைக் காமத்திற் புந்தி சலியாமல், புதுமொழிகட்கும் புதுமொழிக் கருத்துக் கட்கும் அடிமையாகி, "தமிழ் தமது மொழி; அது வழங் கும் நாடு தமது தமிழ்நாடு; அதனைப் பல்லாயிரம் ஆண்டு களாகப் பேசி வரும் பழங்குடிமக்கள் தாம்" என்பதை அறவே மறந்து வாழ்ந்தனர். அதனால், தமிழகத்தின் வடபகுதி தெலுங்கும், வடமேற்குக் கன்னடமும், மேலைப் பகுதி மலையாளமும் துளுவுமாகிய மொழிகளின் தோற்ற மும், அவற்றை வழங்கும் மக்களினமும் தமிழினத்தின் புதுமைக்காமம் விளைவித்த பயன் என்பதை நினைவு கொள்ளவேண்டும். தெலுங்கு, கன்னடம், துளு, மலை

யாளம் ஆகிய இம்மொழிகளும் இவற்றைப் பேசும் மக்களும் தமிழும் தமிழினமுமே என்பதை நினைந்து ஒழுகி வாழ்வதற்கும் நெஞ்சு இடம்தராத வகையில் இப் புதுமைக்காமம் தன் தீமைப்பயனை விளைவித்துவிட்டது. வடநாட்டில் முகமதியர் காலத்து வந்த அரபு பாரசிகம் முதலிய புதுமொழியின் வ்ரவும் மக்களிடையே கிளை மொழி பல கிளைத்தற்கு இடம் தந்ததாயினும் அவை தத்தம் முதல்நிலையை மறப்பிக்கும் தீமையை அத்துணை மிகுதியாகச் செய்யவில்லை என்பர்.

புதுமையிற் காமுறல் என்னும் இத்தீயபண்பு, தெலுங் கரும் கன்னடரும் மலையாளரு மெனத் தமிழினத்தைச் சிதறிப் பிரிந்தேகச் செய்ததோடு நில்லாது, தமிழகத் தின் உள்ளே இருந்து செய்த தீமை மிகவும் பெரிது. இயற்கையோடு ஒன்றி உயர்ந்த இயற்றமிழை ஈடழித்தது; செயற்கை நடையும் அணியும் தோற்றுவித்து, இயலை வளர்த்த புலவரினத்தை வறுமைச்சேற்றில் தள்ளி வலி யிழக்கச் செய்தது. இசையும் கூத்தும், புதுமை இசையும் புதுமைக் கூத்தும் தழுவ முயன்று, அன்னநடை கற்கப் போய் உள்ளநடையும் இழந்தாற்போலத் தமிழ்க்குரிய பண்ணிசையும் தமிழ்க்கூத்தும் இருந்த இடம் தெரியா மல் கெடச்செய்து கொண்டன. தமிழ்க்கூத்தர் ஆரியக் கூத்து ஆடிப் பார்த்தனர். முடிவில் இசையும் கூத்தும் இறந்தொழிந்தன; அவற்றை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த கலைவாணரான பாணரும் கூத்தரும் மறைந்தொழிந்தனர். இடைக்காலப் பல்லவ பாண்டிய சோழர் கல்வெட்டுக்களில், பாணரும் கூத்தரும் ஆங் காங்கே மிகச் சிலராய் வாழ்ந்து வந்த குறிப்புக்கள் காணப்படுகின்றன.[1] இசை மறைந்த பின்பு, தமிழ்க்கூத்து மாத்திரம், தமிழ்க்கூத்து ஆரியக்கூத்து எனப் பிரிந்து நின்று வாழ முயன்ற திறத்தைத் திருவொற்றியூர் முதலிய

1, A. R. No. 90 of 1931-2.

இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. ஆயினும், தமிழினத்தின் புதுமை மோக வெறி அதனை மீளத் தலைதூக்காத பேரிருட் படுகுழியில் நன்றாகப் புதைத்துவிட்டது. இப்போது முத்தமிழைப் பாடுநரும் இல்லை; பாடுநர்க்கு அதனை அறிந்து பயில ஊக்குநரும் இல்லை.

புதுமைக்காமத்துக்கு அடிமையாகாது அதனைத் தனக்கு அடிபணிந்து பயன்பட வாழச் செய்த காலம் பண்டைச் சங்ககாலம் என்பது முன்பே குறிக்கப்பட்டது. அப்போது புலவரும் பாணரும் கூத்தரும் முத்தமிழையும் முறையே வளர்த்து வந்தனர். இயற்றமிழ் புலவரிடத்தே வளர, இசையும் கூத்தும் பாணரிடத்தே வழிவழியாக வழங்கிவந்தன. பொதுவாக, மக்கள், உழவு,கைத்தொழில், வாணிகம் ஆகிய தொழில் வகைகளைச் செய்தாராயினும், ஒருசிலர் அரசியற் பணியிலும், ஒருசிலர் சமயப்பணியிலும், ஒருசிலர் கல்விப்பணியிலும், ஒருசிலர் ஓவியம் சிற்பம் முதலிய கலைப்பணியிலும் ஈடுபட்டிருந்தனர். போர்த்துறை யொன்றே எல்லார்க்கும் பொது. போர்க் காலத்தில் படைமறவனாய்ப் பணிபுரிபவன் ஏனைக் காலத்திற் குடிமகனாய்த் தனக்குரிய தொழில் செய்து வாழ்வன். "சீறூர்க் குடியு மன்னும் தானே கொடி எடுத்து, நிறை யழிந்து எழுதரு தானைக்குச் சிறையு மன்னும் தானே[1]" என்பது காண்க.

உலகம் பொன்றினும் பொன்றாது நிற்பது புகழ் என்றும், அது பெறுவதே உலகில் ஒருவன் உடலோடு கூடி வாழ்வதனால் எய்தும் ஊதியம் என்றும் தமிழ்மக்கள் கருதினர். "புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின், உலகுடன் பெறினும் வேண்டலர்[2]" என்பர் சான்றோர். இப்புகழைப் பாட்டிடைத் தொடுத்து நிலை பெறுவிப்பது முத்தமிழின் முழுநோக்க மாகும். இயல் வல்ல புலவரும் இசை வல்ல பாணரும் கூத்து வல்ல

1. புறம். 314.   2. ௸.

கூத்தரும் உழவு, தொழில், வாணிகம், போர் முதலிய வற்ருல் சிறந்தோர் புகழைப் பாடியும் ஆடியும் நிலைபெறு விப்பர். அதனுல் புலவர் முதலாயினுர் வாழ்வு, அவராற் புகழப்படும் செல்வர் தரும் கொடையையே சார்ந்திருந் தது. முத்தமிழ் வாழ்நர் யாவராயினும் அவர் வாழ்வு பிறர்க்குத் தீங்கு செய்வதன்று என்பது பற்றி அவர்க்கு எத்தகைய தடையும் எவரும் எக்காலத்தும் செய்வதில்லை; வேந்தர் தம்மிற் பகைத்துப் படைகொண்டு போர்செய்யு மிடத்தும் இப் பாணரும் புலவரும் தங்குதடை யாதும் இன்றி எங்கும் செல்வர். இது பழந்தமிழ் வாழ்வு, இயல் முதலிய முத்தமிழ்க்கு அளித்திருந்த தனிப்பெருந் தலைமைப் பரிசாகும். ஆனதுபற்றியே புலவரும் பாணரும் நாடுமுழுதும் சிறப்பெய்தி யிருந்தனர்.

இயல் முதலிய மூன்றும் சேர்ந்ததே தமிழ்; அதனுல், புலவரும் பாணரும் கூத்தரும் ஒருவர் ஒருவரின் சுற்ற மாய்க் கூடி நாடுகளில் உள்ள செல்வரைச் சென்று கண்டு பரிசில் பெற்று வாழ்ந்தனர். இசைத்துறையில் யாழ், துடி, பறை, முழவு எனப் பலவகைக் கருவிகள் உண்டு! அதனுல் அவற்றை இயம்பும் பாணர், பாணர் துடியர் பறையர் முழவர் எனப் பலதிறப்படுவர். கூத்தாடுவோர் கூத்தர் எனப்படுவர். இவர்கட்கு வேறு தொழில் இன்மை யின், இவர்கட்கு வேண்டுவன கொடுத்து வாழ்வித்தல் தமிழ் மக்களுள் உடையோர் கடனும்; அதனைப் பாண் கடன் என்றலும் வழக்கு. "துடியன் பாணன பறையன் கடம்பன் என்று, இந்நான்கு அல்லது குடியு மில்லை[1]" என்பதும் இதுபற்றியே சான்ருேரால் குறிக்கப்படுகிறது. இது கொண்டே பாணர்குடி பலதிற மக்களைக் கொண்ட பெருங்குடி என்பதும் இனிது பெறப்படும்.

உடலோடு கூடிய உயிர்க்கு அன்பும் அருளும் போல, பொருளொடு கூடிய பாட்டுக்கு இசையும் கூத்தும் சிறந் தனவாகும். கண்ணுக்குக் கண்ணேட்டம் போலப் பாட் டுக்குப் பண் இன்றியமையாது என்பர் திருவள்ளுவர்.

---

1. புறம்.

பாட்டிடை எழும் பண், மக்கள் உள்ளத்தில் அன்பும் அருளும் வளர்தற்குப் பெருந்துணையாய் இருத்தலின், பண்ணிசைத்து வாழும் மக்களைப் பாணர் என்று பெயரிட்டுச் சிறப்புறப் பேணி வளர்த்தது பண்டைத் தமிழ் வாழ்வு. பாண்குடி மகளிருள் பாடலும் ஆடலும் வல்லவர் *பாடினி, விறலி* எனப் பெயர் கூறப்படுவர்.

இயல் இசை கூத்துக்களில் சிறந்த புலமை பெற்ற பாணர், மன்னர் மதிக்கும் மாண்பும் செல்வமும் பெற்று மேன்மை எய்தினர். ஒரு பாண்டியன், "பொன்னிவள நாடு பாணன்பெறப் புரிந்தான்[1]" என்றும், மாறை நாட்டுத் தலைவனான வாணன், மதுரையைக் கைப்பற்றிப் பாணர்க்குத் தந்த குறிப்பை, "பாணன் மதுரைப் பதியாள வைத்த பிரான்[2]" என்றும் பிற்காலக் கல்வெட்டுக்கள் கூறுவது இதற்குப் போதிய சான்றாகும். போர்க்களத்தில் மன்னர்கள் மறவுணர்ச்சி மீதூர்ந்து பகைவர் நாட்டினை அடர்ந்து அழித்தொழுகுவராயின், அவர் செயலால் நாடு எய்தும் கேட்டினை அவர்க்குத் தம் இசைவாயிலாக உணர்த்தி அவர் உள்ளத்தில் அருளறம் தோன்றச் செய்வர். மறவெறி கொண்டு மனையறத்தில் மனங்கொள்ளாது பாசறைக்கண் நெடிதுறையும் வேந்தர்பால் சென்று மனைமகளிரின் காதல் மாண்பும் மனைவாழ்வின் இன்பச்சிறப்பும் இசையில் தொடுத்துப் பாடி, அவர் உள்ளத்து மறப்பண்பை மாற்றி மனைநலத்தை நினைப்பிப்பர். பகைவேந்தர்க்குத் தகுவனகூறி இருபெருவேந்தரையும் ஒன்றுபடுத்தும் உயர்பணியிலும் பாண்பெரியோர் பாடுபடுவர். இன்றைய அரசியல் செல்வவாழ்வுகளில் நாளிதழ்வாணருக்குள்ள நன்மதிப்பு முற்றும், பண்டு புலவர் பாணர் முதலிய முத்தமிழ் வாணருக்கு இருந்ததென்னின் அது மிகையாகாது. காக்கையூர்ப் பாடினியான நச்செள்ளையாரும் ஔவையாரும் பாண்மகளிருள் நல்லிசைப்புலமை பெற்ற மெல்லியற் சான்றோராவர். அவர்கள், முறையே

1. P. S. In. No. 652. 2. பெருந்தொகை. 1191.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனாலும், அதியமான் நெடுமான் அஞ்சியாலும் சிறப்பிக்கப் பெற்ற திறத்தை பதிற்றுப்பத்தும் புறநானூறும் தெரிவிக்கின்றன. இப் பாணர்கட்கு வேந்தர் ஊர்களும் மிக்க பொருளும் தந்து பாராட்டியுள்ளனர். குதிரை பூட்டிய தேர்களில் பாணர்களை ஏற்றிக் காலால் ஏழடிப் பின்சென்று வழிவிடுவது முடிவேந்தர் அந்நாளின் மேற்கொண்டிருந்த சிறப்பு முறை. யானைகளையும் அவற்றைப் பேணுதற் குரிய பொருளையும் பெருஞ்செல்வர் பாணர்கட்கு அளித்தனர். பாணர்களுள் ஆடவர்க்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூவும், மகளிர்க்கு மாலையும் பிற அணிகலங்களையும் வேந்தரும் செல்வரும் பரிசு நல்குவர்.

இசையும் கூத்தும் பயிலாது போர்த்துறையில் ஈடுபட்டு மற்போரிலும் நாடுகாத்தலிலும் சிறந்த பாணர்களும் உண்டு. அவருள் பாணன் என்பான் பாலியாற்றின் வடகரையில் உள்ள நாட்டில் அரசுபுரிந்தான்; "வடாஅது, வல்வேற் பாணன் நன்னாடு[1]" என்று சான்றோர் பாராட்டிக் கூறுவர்; அந்நாட்டில் பாலியாற்றின் கரையில் உள்ள பெரும்பாணப்பாடியும் பாண்மலையும் அப் பகுதியிலுள்ள கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகின்றன. அவன் வழிவந்தோர் வாணர் எனவும் வாணாதிராயர் எனவும் வாணதரையர் எனவும் நிலவினர்; வடார்க்காடு வட்டத்துத் திருவல்லம் கோயிலில் அவர்களுடைய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. பிற்காலத்தே அவர்கள் தமிழகமுழுதும் பரவியிருந்தனர்; வாணகோவரையர் என்பாரும் பண்டைய பாணன் வழிவந்தோரே யாவர். வேறொரு பாணன் மற்போரில் சிறந்து சோழர் பேரவையில் புகழ்பெற்று விளங்கினான்; உறையூரில் வாழ்ந்த வெளியன் தித்தன் போரவையில் இருந்த பாணனொடு மற்போர் செய்ய, கங்கநாட்டுப் பகுதியிலிருந்து கட்டி என்பவன்

1. அகம். 325.

வந்து, "போரவையில் ஒலிக்கும் கிணைப்பறையின் ஒலி கேட்டமாத்திரையே அஞ்சி யோடினன்" என அகப்பாட்டொன்று[1] கூறுகிறது; குடநாட்டுக்கு வடக்கிலுள்ள ஆரியநாட்டிலிருந்து பொருநன் என்பவன், குட்ட நாட்டுக் கணையன் என்பவனெடு கூடிப் பாணனெடு மற்போர் செய்ய வந்து முடிவில் பாணன் வலிக்கு ஆற்ருது, கணையன் நேரிற் கண்டு நாணுமாறு தோற்ருன்.[2]

பாண்மக்களுள் இசையும் கூத்தும் பிறவும் பயிலாது தாழ்நிலையில் வாழ்ந்தோர் தூண்டில் கொண்டு சென்று மீன்பிடித்து விற்று வயிறுவளர்த்தனர். சிலர் உழுதும் உழுவித்தும் வாழ்ந்தனர்; வேறுசிலர் பனைநாரும் பனம் போழும் கொண்டு கயிறும், மீன்வலையும் கூடை சுளகு முதலியனவும் முடைந்து வாழ்ந்தனர். சிலர் விலங்குகளை வேட்டையாடி யாழ்க்கு நரம்பும் தோற்கருவிகட்குத் தோலும் அமைத்துத் தந்தனர். ஒருசிலர் செல்வர் மனைக்கும் பரத்தையர் மனைக்கும் தூதுசென்று அவரது புறத்தொழுக்கத்துக்கு வாயில்களாகப்பணிபுரிந்து வாழ்ந்தனர். வாயில்களாவாரை, "தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி இளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர், யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[3]" என்று **தொல்காப்பியம்** கூறுகிறது.

கீழ்நிலைப் பாண்மகளிர் ஆடவர் கொணர்ந்த மீன்களை நெல்லுக்கும் பிற பொருளுக்கும் விற்று வாழ்க்கை நடத்துவர். சிலமகளிர் செல்வர் மனைகளில் பணிப்பெண்களாய்த் தொண்டுசெய்வர். ஆடலில் சிறந்தோர் விறலியராகி வேந்தர் நல்கும் தலைக்கோல் பெற்று விளக்கமுற்றுத் திகழ்ந்தனர். பாடல் வல்லோர் பாடினிகளாய்ப் புகழ் பரப்பி வாழ்ந்தனர். பாணர் பலரும் மீன் பிடிக்கும் தூண்டிற்கோலும், இசைக்கும் கூத்துக்கு முரிய கருவிகளைப் பெய்த பைகளைச் சுமக்கும் காவடிக்கோலும், ஏனை

---

1. அகம். 226. 2. ஷை, 386. 3. தொல். பொ. 193.

யோர் கழைக்கோலும் தாங்கிச் செல்ல, மகளிருள் பாடினியும் விறலியும் தலைக்கோலும் மீன்விற்போர் கழைக்கோலும் கொண்டு செல்வர். இதனால், வடநாட்டுச் சீக்கியர் எப்போதும் கையில் வாளேந்தி இயலுவது போலப் பண்டைத் தமிழகத்துப் பாண்மக்கள் கையில் கோலேந்தித் திரிவது மரபாயிற்று. ஆதலாற்றான், பாணரைக் குறிக்கும் போது, அவர்தம் கோலை விதந்து, "தேமுதிர் சிமையக் குன்றம் பாடும், நுண்கோல் அகவுநர்[1]" என்றும், "மாக்கோல் யாழ்ப் பாண்மகனே[2]" என்றும் சான்றோர் கூறுவாராயினர்.

பாணர்களின் செயல்வகை பற்றி, பாணர், அகவுநர் கூத்தர், கோடியர், இயவர், பொருநர் எனப் பலபெயர்களால் நூல்களில் குறிக்கப்படுவர். அவை அனைத்தும் அவரவர் செய்தொழில் காரணமாகப் பிறந்தவையேயன்றிச் சாதிப்பெயர்கள் அல்ல என்பதைத் தெளிய உணர்தல் வேண்டும். பாணர் வரலாறு தமிழ்மொழியின் ஒருசார் வரலாறாகப் பிணைந்திருத்தலின் இத்துணையும் கூறல் வேண்டிற்று. இனி, இப்பாணர்கள் தமிழ்ச்செல்வர் மனைவாழ்வில் கலந்து பணிசெய்யும் திறத்தை ஈண்டுத் தொகுக்கப்பட்டுள்ள பாட்டுக்களிற் காணலாம்.

471. *எல்வளை நெகிழ மேனி வாடப்*
பல்லிதழ் உண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குரிசில்
அதுமற் றுணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி யென்னவர் தகவே.

இது, பருவவரவின்கண் தூதாகி வந்த பாணன் கூறிய வழித் தோழி சொல்லியது.

1. அகம். 208. 2. இணைமா. 150; 125.

உரை: பாணனே, இலங்குகின்ற வளைகள் நெகிழ்ந் தோடவும், மேனி வாட்டமெய்தவும், பலவாகிய இதழ் களை யுடைய மலர்போலும் மையுண்ட கண்கள் பனி யலைத்தலாற் கலங்கி நீர்சொரியவும், வீரம் பொருந்திய குரிசி லாகிய தலைவர் பிரிந்தே சென்றார்; அதனையும் நீ யுணர்ந்திலை போல்கின்றாய்; அற்றாக, நீ இப்போழ்தும் தூது வருகின் றனை யாகலின், நின்னைத் தூது விடுத்த அவரது தகவு என்ன பயனுடையதாம்? எ. று.

நெகிழாது செறிந்து நின்று ஒளிதிகழ்தற் குரிய வளை நெகிழ்ந்தோடுமாறு தோன்ற, **எல்வளை** எனச் சிறப்பித் தார். வாடுதல், பசந்து மெலிதல். **பல்லிதழ் உண்கண்,** பூப் போலும் கண் என்றவாறு; "பல்லிதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ [1]" என்புழிக் கூறியன காண்க. **பனி அலைக் கலங்க** என்றவழி, **அலை,** முதனிலைத் தொழிற் பெயர். மறவினை பொருளாகத் தலைமகன் பிரிந்தமை தோன்ற, **மறங்கெழு குரிசில்** என்றார்.

தன்மாட்டு அன்புடையார் வளை நெகிழ்ந்து மேனி வாடிக் கண் கலங்கி வருந்தப் பிரிதல் தன் தலைமைக்கு ஆகா தென்பாள், **துறந்தோன் மன்ற** என்றும், மகளிர் மாட்டுக் கண்ணோடாது அவரை வருத்தல் மறத்துறை யன்மையின் அவற்கு அது தகவன் றென்பாள், **மறங்கெழு குரிசில்** என்றும், தூதுபோய் மீளுங்காறும் அவள் ஆற்றா ளெனக் கூறி மீள்விக்க வாராது பிரிவுணர்த்துதற்கு வந்த தனை மறந்தொழிந்தாய் என்றற்கு, **உணர்ந்தனை போலாய்** என்றும், பிரிவு கருதிய துணையே ஆற்றாளாயினட்குப் பிரிந்த பின்னரும் தூது விடுத்து வரவு தாழ்த்தல் அருளுடையார் செயலன்று என்பாள், **இன்னும் வருதி** என்றும், **என் அவர் தகவே** என்றும் கூறினாள்.

---

1. ஐங். 170.

எல்வளை நெகிழ என்றது, **உடம்புநனி சுருங்கல்.** மேனி வாட என்றது, **பசலைபாய்தல்.** உண்கண் பனியலைக் கலங்க என்றது, **பிரிவாற்றாமை.** சிறப்பும்மை, தலைமகளின் ஆற்றாமை மிகுதி யுணரநின்றது. இதனைத் தழுவி நிற்கும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. இவற்றால், தலைமகன் பொதுவகையால், தன் பிரிவுணர்த்தியவழித் தலைமகள் உடன்படாமை கண்டு, உணர்த்தாது பிரிந்தானாக, பாணன் போந்து அவன் பிரிவுணர்த்தினமை பெற்றாம். பன்மை, பழித்தற்கண் வந்தது. மறமுடையார் மகளிர் மாட்டுக் கண்ணோடல் வேண்டு மென்பது, "ஆவு மானியற் பார்ப்பன மாக்களும், பெண்டிரும் பிணியுடையீரும் பேணித், தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும், பொன்போற் புதல்வர்ப் பெறாஅதீரும், எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்என, அறத்தாறு நுவலும் பூட்கை[1]" என முன்னோரும், "பெண்ணுயிர் அவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்வில் சாதல் எண்ணினன்[2]" எனப் பின்னோரும் கூறுதல் காண்க. இவ்வாறு தலைமகனைத் தோழி, பாணர் முதலியோர்முன் பழித்துக் கூறல் வழுவாயினும், "வாயிற் கிளவி வெளிப்படக் கிடத்தல், தாவின்றுரிய தத்தங் கூற்றே[3]" என்பதனால் அமையும். (க)

472. கைவல் சிறியாழ்ப் பாண நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே
எம்மி னுணரா ராயினுந் தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யா ராகுத னோகோ யானே.

இது, குறித்த பருவம் வரவும் தலைமகன் வாரானாகிய வழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது.

1. புறம். 9. 2. சீவக. 3. தொல். பொ. 241.

உரை: இசைத்தல் தொழிலில் வல்ல சிறிய யாழை ஏந்திய பாணனே, நும்முடைய தலைவர் தாம் வருவது குறித்துச் சென்ற பருவம் வந்தெய்தியது; அதனை எம்மைப் போல் அறியா தொழிந்தா ராயினும், அவர் உரைத்தவை பொய் பொருந்திய சொற்களாயின கண்டு யாம் நாணி வருந்துவதனையும் அறியா ராயினமைக் கன்றே யான் வருந்துவே னாயினேன் எ. று.

யாழ்வகையுள் பேரியாழ் உண்மையின் சீறியாழ் கூறப்பட்டது. ஆயிரம் நரம்பினையுடைய பேரியாழ் கையிற் கொண்டு செல்லும் எளிமைத் தன்மையின், கையிலேந்தி இசைத்துவரும் பாணன் **சீறியாழ்ப் பாணன்** எனப்பட்டான். யாழ் இசைத்தலில் புலமை மிக்குடைமை பற்றி, **கைவல் சீறியாழ்** என்றார்.

தலைமக்கள் புகழைப் பாடிப் பரப்பும் பாணர் கூத்தர் முதலாயினார்க்கு அவர் வேண்டுவன கொடுத்துப் பேணுதல் மரபாகலின், தலைவர்களைப் "பாணர் பெருமகன்" என்றும், "பாண ரொக்கல்" என்றும், சான்றோர் சிறப்பிப்பர். அம்முறைமை பற்றி, **கைவல் சீறியாழ்ப் பாண நுமரே** என்றாள். பிறாண்டும் "நினக்கு யாம் பாணரு மல்லேம் எமக்கு நீயுங் குரிசிலை யல்லை மாதோ [1]" எனப் பாணன் கூறுதல் காண்க.

செய்த பருவம், பிரிந்த காலையில் தலைமகன் தான் மீண்டு வருதற்குக் குறித்த பருவம். பருவ வரவினை முன்பே யுணர்ந்து தலைமகற்குத் தூது விடுத்துத் தெரிவியாத குறை தலைமகட்கு அமையும் என்பார், **எம்மின் உணரா ராயினும்** என்றார். கிளவி என்றவிடத்துப் பொருட்டுப் பொருளதாகிய குவ்வுருபு தொக்கது. எய்யா ராகுதல் என்பதை எய்யாமையும் உடையராகுதல் எனப் பிரித்துரைக்க. நாணலும் எய்யாராகுதல் என்று கொள்

1. ஐங. 480.

ளின், தாம் உரைத்தவை பொய்ச்சொற்க ளாகுதற்கு நாணுதல் உயர்ந்தோர் இயல்பாயிருக்க, அதனையும் அறியாதொழுகுதல் எனப் பொருள்தந்து வழுவாம் என உணர்க.

வருவல் எனக் குறித்த பருவம் வந்தெய்திய வழியும் தலைமகன் வாராது தாழ்த்தமையான், **நுமரே செய்த பருவம் வந்து நின்றதுவே** என்றும், பருவம் வந்து நின்ற வழியும், தெளிவித்துச் சென்ற தலைவர் வாராமையான், இது பருவ மன்றெனக் கொண்டுள்ளேம் என்பாள், **எம்மின்** என்றும், இது தாம் குறித்த பருவ மென்பதனை அவர் உணராரல்லர் என்பது பட, **உணரா ராயினும்** என்றும், பருவவரவில் வருகுவேன் என வற்புறுத்த சொல் பொய்த்தற்கு நாணி அஞ்சாது, யாம் அது கண்டு நாணி வருந்துவதையும் நினையாது தூது போக்குதல் நன்றன்று என்பாள், **பொய்படு கிளவி நாணலும்** என்றும், மெய்ம்மையே ஒழுகுதலுடையரா யிருந்தார் அவ்வொழுக்கத்திற் பிழைத்தாராயின், வரும் ஏதம் பலவா மாகலின், **எய்யா ராகுதல் நோகோ யானே** என்றும் கூறினள். உம்மை பின்னும் கூட்டப்பட்டது. நம்மின் உணரா ராயினும் என்றற்கு, பருவவரவினை யாம் முன்பே உணரா தொழிந்த வாறு போல அவரும் உணராது ஒழிந்தா ராயினும், பொய்படு கிளவிக்கு யாம் நாணலும், அதனை அவர் எய்யாராய் ஒழுகுதலும் தப்பாது உணர்ந்தாரில்லை; அதனால் யான் வருந்துவே னயினேன் என்றுரை ளெனினுமாம். ஈண்டுப் **பொய்படு கிளவி நாணுத** லாவது, தாம் தெளிவித்துச் சொல்லியவாறே மீள லாகாமையின், அது பொய்த்தற்கு அஞ்சிப் பாணனால் வினை முடியாமை தெரிவித்தல். எய்யாராய் ஒழுகுதலாவது, தூதுரையாலும், ஒழுகலாற்றாலும் பண்டை அன்புடைமை தோன்ற ஒழுகுதல். இங்ஙனம் தோழி இரங்கிக் கூறியது, "வருத்த மிகுதி சுட்டுங் காலை, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[1]" என்பதனால் அமையும்.

---

1. தொல். பொ. 226,

இது குறித்த பருவத்துத் தலைவன் வாராவழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறிய தென்பர் நச்சினார்க்கினியர்.[1] (உ)

473. பலர்புகழ் சிறப்பினுங் குரிசி லுள்ளிச்
செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
இன்னா வரும்படர் எம்வயிற் செய்த
பொய்வ லாளர் போலக்
கைவல் பாணவெம் மறவா தீமே.

இது, தலைமகன் பிரிந்த நாட்டிற்குச் செல்வேம் என்ற அவன் பாணற்குத் தலைமகள் சொல்லியது.

உரை: இசைத்தொழிலில் வல்ல பாணனே, உயர்ந்தோர் பலரும் புகழ்தற்குரிய சிறப்பினையுடைய நும் தலைவனை நினைந்து செல்லுதலை நீ விரும்பினையாயின், இன்னாமையால் பொறுத்தற் கரிய துயரத்தினை எம்பாற் செய்த பொய்த்தல் வல்ல அவர்போல எம்மை மறவாது, அவர்க்கு எம் ஆற்றாமையைக் கூறுவாயாக எ. று.

பலர் புகழும் சிறப்பே மெய்யாய சிறப்பாதல் பற்றிப் **பலர்புகழ் சிறப்பு** என்றார். **பலர்,** உயர்ந்தோர். பாணர் பாடும் பாட்டிற் கெல்லாம் தலைவன் தலைமகனாகலின், அவனை நினைந்து செல்வது பாணர்க்கு இயற்கை யென உணர்க. **செலவு நயந்தனை யாயின்** என்றது, தலைமகன் சென்றுறையும் நாட்டின் சேய்மை யுணர நின்றது. **படர்தல்,** நினைத்தல். படர்தல் காரணமாகத் துயரும் இன்னாமையும் உண்டாதலின், **இன்னா அரும்படர்** என்றார். ஒரு பொய்யை உரைத்தவிடத்து அதனை மறைத்தற்கு வேறு பல பொய்களைப் படைத்து மொழிதற்கு அறிவும் மனமும் வன்மை மிக வேண்டுதலின், பொய் கூறுவோரைப் **பொய்**

1. தொல். பொ. 150.

வலாளர் என்ப. "பொய்வலாளன் மெய்யுற மரீஇ[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. பாணன் சுற்றமொடு கூடிச் செல்லும் பான்மைய னாகலின், **நும் குரிசில்** என்று பன்மையிற் கூறி, முன்னிற்போன் பாண்தலைவனாதல் தோன்றப் **பாண** என ஒருமையிற் கூறினார். "ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி, பன்மைக் காகும் இடனுமார் உண்டே[2]" என்பதனால் அமையும்.

தான் கொண்ட துன்பம் மெய்ப்பட்டுப் பாணற்குப் புலனாதலின், **எம்வயிற் செய்த** என்றும், கார்ப்பருவ வரவில் வருகுவல் என்றவன், அது வந்தெய்தியும் வாராமையினாலும், சான்றோர் அஞ்சும் பொய்ம்மையைச் செய்தொழுகினமையாலும், **பொய்வலாளர்** என்றும், அவர் மறந்தா ராயினும், யாம் மறவேம் என்பாள், **மறவாதீமே** என்றும் கூறினாள்; இஃது **அன்புதொக நிற்றல்.**

"அவனறி வாற்ற அறியு மாகலின்[3]" என்ற சூத்திரத்துப் "பல்வேறு நிலை" என்றதனால், இது தூதுவிடக் கருதிக் கூறியது என்பர் **நச்சினார்க்கினியர்.** (கூ)

474. *மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்*
செய்யரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவ லென்னும்
நன்றா லம்ம பாணன தறிவே.

இது, பிரிவின்கண் ஆற்றாமை கண்டு தூதாகிச் சென்று அவனைக் கொணர்வல் என்ற பாணன் கேட்பத் தலைமகள் சொல்லியது.

---

1. குறுந். 30. 2. தொல். சொல். நச்சி. 461.
3. தொல். பொ. 147.

உரை : வெகுண்டு போந்த பகைவர் தம்மைக் காத்துக் கோடற்குச் செய்த அரண்கள் பலவற்றையும் அழித்த போர்த்தொழிலில் மிக்க தானையோடு விரையச் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தி வழிகள் பல கடந்து சேண் சென்ற நம் காதலரைக் குற்றமில்லாத ஒளி பொருந்திய நுதல் விளக்கமுறும் வண்ணம் கொணர்வல் என்று பாணன் கூறுகின்றுனாகலின், தோழி, அவனுடைய அறிவு நன்றாயிருந்தது, காண் எ. று.

தம்மிடத்தே அமையாது வெகுண்டெழுந்த வழியே ஒருவர் பகைவராதலின், **கறுத்தோர்** என்றார். தன்னியல்பில் சிறுகுற்றமும் இன்றித் தலைவன் பிரிவால் பசந்து ஒளி மழுங்கியிருப்பது பற்றி, **மையறு சுடர்நுதல்** என்று சிறப்பித்தார். **விளங்க** என்றது பசந்தமை சுட்டி நின்றது. பண்டு இருந்த அரண் போதிய வன்மை யிலதாதலும் தலைமகளது படைவலியின் பெருமையும் முன்னுணர்ந்து பகைவர் வலிசெய்து கொண்ட அரண் என்றற்குச் **செய்யரண்** என்றும், எனவே புதுமையும் வன்மை மிகுதியுமுடைய அந்த அரணையும் தலைவனுடைய தானை எறிந்து சிறந்த தென்பாள், **செய்யரண் சிதைத்த செருமிகு தானை** என்றும் கூறினுர். அதர்பல கடைஇச் சென்றவராகிய காதலரை நுதல் விளங்கத் தருகுவல் என்றும் என இயைக்க. ஒருவினை யொடு பன்மை பற்றி வந்த உயர்பின் வழித்து.

மிக்க சேய்மைக்கட் சென்றன ரென்பாள், **அதர்படக் கடைஇச் சென்றவர்** என்றும், நாம் அவரை யின்றி யமையேமாய்க் கொண்ட நோயினை வாய்விட்டுக் கூரு முன்பே குறிப்பின் உணர்ந்து கூறினமையாலும், மிகப் பயின்ருர்க் கன்றிப் புலனுகாத நம் நுதற்பசப்பினை நுனித்து உணர்ந்து **சுடர்நுதல் விளங்க** என்றதனுலும், அவன் அறிவை வியந்து, **நன்ரு லம்ம பாணனது அறிவே** என்றும் கூறினுள்.

"அவனறிவு[1]" என்ற சூத்திரத்துப் "பல்வேறு நிலை" என்றது கொண்டு, இது பாணனைத் தூதுவிட்டுக் கூறிய தென்பர் நச்சினார்க்கினியர். (௪)

475. தொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநல னிழந்தவென் கண்ணும் நோக்கிப்
பெரிதுபுலம் பினனே சீறியாழ்ப் பாணன்
எம்மெவ் காதலொடு பிரிந்தோர்
தம்மோன் போலான் பேரன் பினனே.

இது, பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தலைமகனுழை நின்று வந்தோர் கேட்பத் தன் மெலிவு கண்டு இரங்கிய பாணனைத் தோழிக்கு மகிழ்ந்து சொல்லியது.

உரை: தோழி, தொடிகள் நின்ற நிலையினின்றும் நெகிழ்ந்து நீங்குமாறு வாட்ட மெய்திய என் தோளையும் மாவடுப் போலும் அழகினை இழந்த என் கண்களையும் நோக்கிச் சிறிய யாழைக் கையிலே யுடைய பாணன் மிகப் புலம்பினனாகலின், அவன் எம்முடைய காதலொடு பிரிந்து சென்ற நம் காதலரைத் தமக்குத் தலைவனாக வுடையனாயினும் அவர் போலின்றி நம்பால் மிக்க அன்புடையனாயிரா நின்றான் எ. று.

கலங்க என்னும் செயவெனெச்சம் காரியப்பொருட்டு. **வடி**, மாவடு. "நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம் [2]" என்ப சான்றோர். பிரித்துழித் தலைமகள் தோளும் கண்ணும் நலனிழந்து தோன்றிக் கூடியவிடத்து அந்நலனைப் பெற்றுத் திகழ்தல் தோன்ற, "தோள் கவின் எய்தின தொடிநிலை நின்றன; நீள்வரி நெடுங்கண் வாள்வனப் புற்றன [3]" என அழகுறப் பிறரண்டுங் கூறுதல் நோக்கி இன்புறுக. **வடிநலன்**, வடியைப் போறலாகிய நலமென விரியும்.

---

1. தொல். பொ. 147. 2. ஐங். 61. 3. ஷை. 498.

அவர் பிரிந்தா ராயினும், அவர் மாட்டுச் சென்ற தன் காதல் நீங்காமையின் **காதலொடு பிரிந்தோர்** என்றும், அவர்க்கு உரியவ னாயினும், அவர் நம்மை மறந்தது போல அன்றி இவன் நம்மை நோக்கிப் பெரிதும் இரங்கிப் புலம்பு கின்றான் என்பாள், **தம்மோன் போலான்** என்றும், **பேரன் பினனே** என்றும் கூறினாள். "தொடிநிலை கலங்க வாடிய தோள்" என்றது. **உடம்புநனிசுருங்கல்.** "வடி நல னிழந்த கண்ணும்" என்றது அவன் **பிரிவாற்றாமை.** (௬)

476. *கருவி வானங் கார்சிறந் தார்ப்பப்*
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்
அன்பின் மாலையு முடைத்தோ
வன்புறைப் பாணவவர் சென்ற நாடே.

இது, பிரிவாற்றாமை அவற்கும் உளதன்றே, நீ வேறுபடு கின்றது என்னை என்ற பாணற்குத் தலைமகள் கூறியது.

உரை : எம்மை வற்புறுத்தலையுடைய பாணனே, தொகுதியை யுடைய வானம் மழை மிக்கு முழங்க, பருவம் நோக்கி மலர்ந்துள்ள பசிய கொடிகளாகிய முல்லையின் பூக்களைப் பலவாகிய ஆக்களையுடைய ஆயர் மாலை யிடத்தே தொடுத்து அணியும் அன்பில்லாத மாலைக் காலத்தையேனும் அவர் சென்ற நாடு உடையது கொல்லோ எ. று.

கருவி, தொகுதி. கார்காலத்து மழைமுகில் மிக் கெழும் காட்சியைக் **கார் சிறந்தார்ப்ப** என்றார். கார்ப் பெயலால் வளம் பெற்றுப் பூத்து விளங்குதல் தோன்றப் **பைங்கொடி முல்லை** எனச் சிறப்பிக்கப்பட்டது. **பருவம் செய்தலாவது,** மாலைப்போதில் மலர்ந்து கார்காலம் எய்தி

நிற்றலைத் தெரிவித்தல்; "பூங்கொடி முல்லை தொகுமுகை இலங்கெயி ருக, நகுமே தோழி நறுந்தண் காரே [1]" என்று பிறரும் கூறுவது காண்க. **படலை**, மாலை; "பல்லான் கோவலர் படலை சூட்ட [2]" என்றாற் போல. கோவலர் முல்லை சூடுதலை, "தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப், பல்லான் கோவலர்க் கண்ணிச், சொல்லுவ வன்ன முல்லை வெண்முகையே [3]" என்று சான்றோர் கூறுவது காண்க. மாலைப்போது, காதலரைப் பிரிந்து தனித்திருக்கும் மகளிர்க்குத் "துனியரும்பித் துன்பம் வளர வரும் [4]" ஆகலின், **அன்பில் மாலை** என்றும், ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தலைச் செய்யும் பாணனை, **வன்புறைப் பாணன்** என்றும் கூறினார்.

வன்புறைப் பாண என்றாள், இவட் குளதாய பிரிவாற்றாமை அவற்கும் உண்டெனை அவன் கழறுகின்றமையின் பைங்கொடி முல்லை பருவம் செய்தல் அவர் சென்ற நாட்டின்கண் இல்லா தொழியினும், காதலன்புடையார் செயலை விளக்கும் மாலைக்காலமும் உண்டன்றே என்றது, மாலையம் பொழுது கண்டு தான் ஆற்றா ளாயினமை உணர்த்திவாறு; "காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து ஏதிலர் போல வரும் [5]" என்ப. பருவமல்லாக் காலத்தும் மழை சிறந்து ஆர்த்த லுண்மையின், **பருவம் செய்தன பைங்கொடி முல்லை** யென்றாள். அவர் சென்ற நாட்டின் கண் மாலைப்பொழுது உளதாயின், அவரும் "மாலை நோய் செய்தல் [6]" அறிந்து விரைய வந்து சேர்ந்திருப்ப ரென்பது கருத்தாகலின், **மாலையும் உடைத்தோ** என்றாள்; "போனார் நாட்டு உளதாங்கொல், மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்த இம்மருண்மாலை [7]" என **அடிகளும்** பாடுதல் காண்க. (௬)

1. குறுந். 126. 2. புறம். 265. 3. குறுந். 358.
4. குறள். 1223. 5. ௸. 1224. 6. ௸. 1229.
7. சிலப். கானல். 41.

477. பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொ டரும்படர் உழப்போள்
கையறு நெஞ்சிற் குயவுத்துணை யாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்னோற் பாணவெந் தேரே.

இது, தலைமகன்மாட்டுப் பாணனைத் தூது விடுத்த தலைமகன் கூறியது.

உரை: பாண, குளிர்ந்த மலர்போலும் நீண்ட கண் பசப்பெய்தத் துனி மிகுதற்குக் காரணமாகிய துயரத்தோடு பொறுத்தற்கரிய துன்பத்தினை உறுகின்ற தலைமகளுடைய செயலற்ற நெஞ்சிற்கு உசாத்துணையாகச் சிறிது போது தங்குவை யாயின், எம்முடைய தேரினை ஆண்டு எய்தக் காண்பாய் எ. று.

துனி, அன்பு காரணமாகத் தோன்றும் வெறுப்பு. மன்னும் ஆலும் அசை. **துணையாதல்**, நெஞ்சின்கண் தோன்றிய துன்பத்தை நீக்குதற்குத் துணையா யுதவுதல்; "துன்பத்திற் கியாரே துணையாவார்[1]" என்புழிப் போல. **பனிமலர் நெடுங்கண்**, பனித்துளி தாங்கி நிற்கும் மலர் போல வருத்தத்தால் கண்ணீர்த் துளி தாங்கி நிற்கும் நீண்ட கண். துனி மிக்கவழித் துயரம் தோன்றி வருத்த வருந்தும் தலைமகளைத் **துனிமலி அரும்படர் உழப்போள்** என்றார். துனியால் உள்ளம் தளர்ந்து துயர் உறுவோர்க்குத் தனிமை தளர்ச்சியும் துயரமும் மிகுவித்துத் தீது துணியுமாறும் செய்துவிடு மாகலின், அக்காலை உசாத்துணை இன்றியமையாமை பற்றி, **உயவுத்துணையாக** என ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்; "கங்குல் உயவுத்துணை யாகிய துஞ்சா துறைவி[2]" என்பர். **சிறுவரை**, சிறிது போது; "இன்று செலினும் தருமே சிறுவரை நின்று செலினும் தருமே[3]" என்றாற் போல்வது.

1. குறள். 1299. 2. அகம். 298. 3. புறம். 171.

பெரும்பொழுதாகிய காரும், சிறுபொழுதாகிய மாலையும் ஒருங்கே தோன்றி நிலவுதலின், அவட்குத் துனி தோன்றுதலும், அதன்பயனாகத் துன்பம் ஒருகாலைக் கொருகால் மிகுதலும் நினைந்து கூறுகின்றானாதலால், **துனிமலி துயரமொடு அருந்துய ருழப்போள்** என்றும், துயர் மிக்கவழி அவள் நெஞ்சு செயலற்று இனைதல் ஒருதலை என்பான், **கையறு நெஞ்சம்** என்றும், அந் நெஞ்சத்து மிக்கதனை வாய்விட்டுக் கூறியவழி, ஆற்றாமை சிறிது நீங்குமாகலின், **உயவுத் துணையாகி** யென்றும், தான் விரையப் போதருதல் கூறுவான், **சிறுவரைத் தங்குவை யாயின்** என்றும் கூறினான்.

இது, "தலைவிமாட்டுப் பாணனைத் தூதாக விடும் தலைவன் கூறியது[1]" என்பர் **நச்சினார்க்கினியர்.** இது, தூது விடும் தலைமகன் கூறிய தென்பர் **இளம்பூரணர்.** [2] (எ)

478. *நீடின மென்று கொடுமை தூற்றி*
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்
தியாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லிய துரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே.

இது, பிரிந்துறையும் தலைமகன், தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனை, "அவள் சொல்லிய திறம் கூறுக" எனக் கேட்டது.

உரை : முல்லைத்திணைக்குரிய நல்ல யாழையுடைய பாணனே, யாம் விரும்பும் எம் காதலி வரத் தாழ்த்தன மென்று எம்பால் அன்பின்மை கூறி வாட்ட முற்ற நெற்றியினை யுடையளாய்த் துன்பம் மிகுதலான், வாழ்க்கையில் வெறுப்புற்று நின்னிடத்துச் சொல்லிய சொல்லை நீ எமக்குக் கூறுக எ. று.

1. தொல் பொ. 41. 2. ஷை. 48.

கொடுமை, ஈண்டுச் சொல் கோடுதல்; சொல்லிய வாறு நடவாமை; "கொடியார் கொடுமை யுரைக்கும்[1]" என்பது காண்க. தூற்றுதல், பலர்க்கும் தெரியவுரைத்தல்; "துறைவன் துறந்தமை தூற்றுகொல்[2]" என்பது காண்க. பிறிதுநினைதல், உயிர்வாழ்க்கையில் விரும்பிய உள்ள மின்றி வெறுத்த உள்ளம் கொளல்; இது வருத்தம் மிக்க விடத்து உளதாவது; "வருத்த மிகுதி சுட்டுங் காலை, உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்[3]" என்பர் **ஆசிரியர்.** நோய் மிகச் சாஅய்ப் பிறிதுநினைந்து சொல்லி யது என இயையும். ஏனை மருதயாழ் பாலையாழ் குறிஞ்சி யாழ் போல, முல்லையாழ் முல்லைக்குரியது; இதற்குரிய பண் செவ்வழி; இது மாலைப்போதில் இசைத்தற் குரியது. **மதி,** முன்னிலை யசை.

பருவவரவில் வருவேன் எனச் சொல்லிப் போந்த தான் அது வந்தெய்தியவழியும் வினைமுற்றாமையால் தாழ்த்தமையின், அச்சொல் கோடியது எனச்சொல்லித் தலைமகள் வருந்துவ ளாகலின், **கொடுமை தூற்றி** என்றான். தோழியரோடும் பிற வாயில்களோடும் கூறிப் புலம்பு தலின், **தூற்றி** யென்றும், நுதல் வாடி நலன் அழிதலின், அவள் துனியுற்று உயிர் வாழ்தற்கண் வெறுப்புக்கொள் வாளென நினைக்கின்றானாகலின், **பிறிது நினைந்து** என்றும், தாழ்த்த காலமெல்லாம் ஆற்றாமை மிகுதலின், **நோய்மிகச் சாஅய்** என்றும் கூறினான். தம்மாட்டுக் காதலன்புடையார் இன்னாத சொல்லினும், கேட்போர்க்கு அச்சொல் இன்பமே நல்குதல் இயல்பாகலின், **சொல்லியது உரை மதி** என்று சொன்மேல் வைத்து மொழிந்தான்; "சொல்லு மதி பாண சொல்லுதோ றினிய[4]" எனப் பிறாண்டும் வருதல் காண்க. இதனால் தலைமகள்மாட்டு **அருள் மிக வுடைமை** யென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

இது, பாசறைக்கண் தூது கண்டு கூறிய தென்பர் **இளம்பூரணர்.**[5] தூதுகண்டு அவள் கூறிய திறம் கூறுக எனக் கேட்டது என்பர் **நச்சினார்க்கினியர்.**[6] (அ)

---

1. குறள். 1235. 2. ஷை. 1157. 3. தொல். பொ. 226.
4. ஐங். 479. 5. தொல். பொ. 43. 6. ஷை. ஷை. 41.

479. *சொல்லுமதி பாண சொல்லுதோ றினிய*
நாடிடை விலங்கிய வெம்வயி னானாறும்
அரும்பனி கலந்த வருளில் வாடை
தனிமை யெள்ளும் பொழுதின்
பனிமலர்க் கண்ணி கூறிய தெமக்கே.

இது, தலைவி விடத் தூதாய்ச் சென்ற பாணன் மாற்றம் கூறக் கேட்ட தலைமகன் இவ் வாடை வருத்தத்திற்கு மருந்தாக இன்னும் கூற வேண்டும் எனக் கூறியது.

உரை : பாண, நாடிடைக் கிடந்த வேற்றுநாட்டின் கண் வந்துள்ள எம்மிடத்து, நாடோறும் பொறுத்தற் கரிய குளிரோடு கூடிய அருளில்லாத வாடைக்காற்றுப் போந்து எம் தனிமை குறித்து வருத்தும் இக்காலத்தில், குளிர்ந்த மலர் போன்ற கண்களையுடையாள் விடுத்த மாற்றம் எமக்கு நீ சொல்லுந்தோறும் இவ்வாடை வருத்தத்திற்கு மருந்தாய் இனிமை பயத்தலான், இன்னும் கூறுக எ. று.

இடைவிலங்குதல், இடையே குறுக்கிட்டுக் கிடத்தல்; தலைவன் வந்திருக்கும் நாட்டுக்கும் அவனுடைய நாட்டுக்கும் இடையே பல நாடுகளைக்கடந்து வந்தமை கூறியது, நெடிய சேய்மைக்கண் பிரிந்திருப்பது உரைத்தற்கு. வாடை, குளிர் செய்யும் காற்றாதலின், **அரும்பனி கலந்த** என்றும், தென்றல் போல உயிர்கட்கு இன்பம் செய்யாமை பற்றி, **அருளில் வாடை** என்றும் கூறினர். **தனிமை எள்ளும் பொழுது**, தனித்தோர்க்குத் துன்பநினைவு விளைவுக்கும் மாலைப்போது; "தனியோர் இரங்கும் பனிகூர் மாலை[1]" எனச் சான்றோர் குறிப்பது காண்க. எள்ளுதல், ஈண்டு இலக்கணை. **சொல்லுமதி** என்றது கூற்றின் மேலும், **இனிய** என்றது கூற்றிடை நிற்கும் சொற்களின் மேலும் நின்றன. **நாடிடை விலங்கிய எம்வயின்** என்றதனால் மிக்க சேய்மைக்

1. குறுந். 358.

கண்ணுள்ள வேற்றுநாட்டு அகவயின் வந்தெய்தியது பெறும். வாடை கூறவே, வினைமுடியாமையின் தூது போக்கினமை பெறப்பட்டது.

குளிரால் மிக்க நடுக்கத்தைச் செய்து வருத்துதலின், **அரும்பனி கலந்த அருளில் வாடை** என்றும், அது காதலர்ப் பிரிந்தார் கையற்று நலியும் பான்மைத் தாகலின், **தனிமை எள்ளும்** என்றும், ஆர்வலர் உரைக்கும் எல்லாச் சொல் லும் இனிய வாதலின், **சொல்லுதோறு இனிய** என்றும், மீட்டும் கேட்டற்கு நெஞ்சம் அவாய்நிற்றலே யன்றி அவ் வாடை செய்யும் வருத்தத்தைச் சொற்களின் இனிமை மறப்பித்தலின், **சொல்லுமதி** என்றும் கூறினான். (௯)

480. நினக்கியாம் பாணரு மல்லேம் எமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரித ழுண்க ணுகுத்த
பூசல் கேட்டு மருளா தோயே.

இது, தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கட் சென்ற பாணன் தலைமகனை நெருங்கிச் சொல்லியது.

உரை: பெரும, நின்னையே விரும்பி யுறையும் காதலி யாவாள் தன் மனைக்கண்ணே நின் பிரிவாற்றாது புலம்புற்றுக் குளிர்ந்த மலர்போலும் கண்கள் கலுழ்ந்து சொரிந்த கண்ணீரை யாமும் பிறரும் கூறக் கேட்டுவைத்தும் நீ விரைந்து மீளுதலைக் கருதாது இருந்தனை யாகலின், நினக்கு யாம் பாணருமாகோம்; எமக்கு நீதானும் தலைவனு மல்லாய் எ. று.

ஆர்வலர் சொரியும் கண்ணீர் பூசல் தரும் என்பவாக லின், **உகுத்த பூசல்** என்றார். உம்மை, பூசல்கேளா முன்பே மீளற்குரியை என்பது தோன்றநின்றது. **நினக்கு யாம் பாணரும் அல்லேம்** என்றதே அமையு மாயினும், **எமக்கு**

நீயும் குருசிலே யல்லே என்றது, வினை முற்றிய தலைமகன் மீளுதலைக் கருதாது பிறிது கருதி யிருந்தமை கண்டு பாணன் விரைய மீளுதற்பொருட்டுப் புலந்து கூறியது. இது "பொருட்பயம் பட வந்த அறக்கழிவு.[1]" பொருள், தலைவி பக்கல் நின்று மனைவாழ்க்கை இன்பம் பெருக உறுவது. வினைமுற்றினன் மீளக் கருதாமைக்கு ஏது வினைத்திறமே யன்றிப் பிறிதின்மை தோன்ற, **நீவெங்காதலி** என்று **ஆசிரியர்** குறித்தார். அருளுதல், ஈண்டு விரைந்து மீளுதற்பொருட்டு.

தன் காதலிமாட்டு அருளிலாத நீ பிறர்மாட்டும் அப்பெற்றியனே யாவாய் எனக் கற்பித்துக் கொண்டு, **நினக்கு யாம் பாணரும் அல்லேம், எமக்கு நீயும் குருசிலேயல்லே** என்றான். இதன்கண் பாணன், தலைவியின் ஆற்றாமை தோன்ற, அவளுடைய தனிமையும், ஆற்றாமையும் விளக்கிக் கூறியது அவற் குரிய இலக்கணம்; என்னை, "நிலம் பெயர்ந் துறைதல் வரைநிலை யுரைத்தல், கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை யுரிய[2]" என்றா ராகலின். அன்றியும் இவன் எண்வகைக் குறிப்பும் நன்னயப் படுத்துத் தலைமகற்குக் காட்டல் வேண்டு மாகலின், **நினக்கு யாம் பாணரு மல்லேம்** என்றதனாற் **பெருமிதமும்**, எமக்கு **நீயும் குருசிலே யல்லே** என்றதனால் **வெகுளியும்**, **நின் வெங்காதலி** என்றதனால் உவகையும், **தன்மனைப் புலம்பி** என்றதனால் **மருட்கையும்**, **ஈரித ழுண்கண் உகுத்த பூசல்** என்றதனால் **அழுகையும்**, **அருளாதோயே** என்றதனால் **இளிவரலும்** படக் கூறினமை அறிக.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே[3]" என்றவிடத்து இது பாணர் கூறியது என்பர் **இளம்பூரணர்**. (ம)

---

1. தொல். பொ. 218. 2. ஷை. ஷை. 169. 3. ஷை. ஷை. 45.

49. தேர் வியங்கொண்ட பத்து.

இது தேர்ப்பாகனைத் தேரை விரைந்து செலுத்துமாறு தலைமகன் ஏவுதலைக் கொண்ட பொருளவாய பாட்டுக் களின் தொகுதியாகலின், இப்பெயர்த்தாயிற்று. வியம், ஏவல்; வியங்கோள் என்புழிப் போல.

481. சாயிறைப் பணைத்தோ ளவ்வரி யல்குல்
சேயிழை மாதரை யுள்ளி நோய்விட
முள்ளிட் டூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே.

இது, வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

உரை : தேர்ப்பாகனே, நுண்ணிய சந்து பொருந்திய தொடி யணிந்த பருத்த தோள்களையும், அழகிய வரி பொருந்திய அல்குலையும், செவ்விய இழைகளையு முடைய காதலியை நினைத்தலால் எய்தும் வருத்தம் தீர, நின்னுடைய புட்போல நிலம் தீண்டாத செலவினையுடைய கலித்த குதிரை பூட்டிய தேரை, அக்குதிரைகள் விரைந்து செல்லு மாறு முட்கோலாற் குத்திச் செலுத்துக எ. று.

இறை, ஆகுபெயரால் தொடியை உணர்த்திற்று. *திரட்சியினை யுடைய மூங்கில் போலும் தோளெனினுமாம்.* "வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள்[1]" என்று பிறரும் வழங்குதல் காண்க. **மாதர்**, காதல். "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட் டாகும்[2]" என்பவாகலின், **விடுதல்**, *தீர்தற்பொருட்டு.* **முள்**, ஈண்டு ஆகுபெயராய்த் *தாற்றுமுட்கோலை யுணர்த்திற்று.* "*திண்டா வைம்முள்*

1. அகம். 213. 2. தொல். சொல். 318.

திண்டி நாஞ்செலற், கேமதி வலவ தேரே [1]" என்றார் பிறரும். செய்தனெச்சம் காரணப் பொருட்டு. வேண்டிய விடத்து இறப்பவும் மிக்க செலவினை யுடைத்தாய் நிலம் திண்டாது பறப்பது போறலின், **புள்ளியற் கலிமா** என்றார்; "உள்ளம் போல உற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா உடைமை யான [2]" என்றும், "உலகுகடப் பன்ன புள்ளியற் கலிமா [3]" என்றும் பிறரெல்லாம் கூறுதல் காண்க.

வேறுபடுதற் குரிய தோளும், அல்குலும், இழையும் கூறலின், தன் பிரிவால் அவை அங்ஙனமாயின கொல்லோ என நினைக்குந்தோறும், துயர் எழுந்து வருத்துதலின், **நோய்விட** என்றும், அவை அவ்வா றுகாமை வேண்டி, **சாயிறைப் பணைத்தோள் அவ்வரி யல்குல், சேயிழை மாதர்** என்றும் கூறினன். அவை பிரிவிடை வேறுபடு மென்பது, "தொடி நிலை கலங்க வாடிய தோளும்[4]" என்றும், "தேரகல் அல்குல் அவ்வரி வாட[5]" என்றும், பிறாண்டும் வருவன வற்றா லுணர்க. (க)

*482. தெரியிழை யரிவைக்குப் பெருவிருந் தாக
வல்விரைந்து கடவுமதி பாக வெள்வேல்
வென்றடு தானை வேந்தனொடு
நாளிடைச் சேப்பி னூழியி னெடிதே.*

இதுவுமது.

உரை: பாகனே, வெள்ளிய வேலேந்தி எதிர்த்தோரை வஞ்சியாது வெல்லுகின்ற தானையினை யுடைய அரசனோடு இடைச்சுரத்து ஒருபொழுது தங்கினும், அஃது ஊழியினும் நெடிதாய்த் தோன்றுதலின், ஆராய்ந் தணிந்த இழையினை யுடைய அரிவையாவாட்கு மிக்க விருந்தாகிச் சென்று எய்துமாறு மிக விரையத் தேரைச் செலுத்துவாயாக எ. று.

1. நற். 21. 2. தொல். பொ. 194 3. அகம். 64.
4. ஐங். 475. 5. ஷை. 315.

காதலன் விரும்பும் இழையினையே தேர்ந்தெடுத் தணியும் கற்புவழிப் பட்ட பொற்பும் அறிவும் விளங்கத் **தெரியிழை அரிவை** என்றார். பெருமை நல்கும் விருந்து, **பெருவிருந்து** எனப்பட்டது; "விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்[1]" எனத் **திருவள்ளுவர்** கூறுவர். இடைச் சுரத்தே ஒருநாள் சேப்பின் என மாறுக. காதல் வயப் பட்ட இருபாலார்க்கும் பொதுவாதலால், **ஊழியின் நெடிதே** எனப் பொதுப்பட மொழிந்தார்.

விருந்தெனில் விரும்பும் திருந்திய மனையறத்தினள் என்பான், **அரிவைக்குப் பெருவிருந்தாக** என்றும், வேட்கை வயத்த ராயினார்க்கு அது தணியாத சிறுபொழுதும் பேரூழி யின் நெடிதாகத் தோன்றுதல் இயல் பாதலின், **நாளிடைச் சேப்பின் ஊழியின் நெடிதே** என்றும் கூறினன். "அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும் முல்லை சான்ற கற்பின் மெல்லியற் குறுமகள்[2]" என்றும், "விருந்தயர் விருப் பினள் வருந்தும்[3]" என்றும் தலைவியது விருந்தயர் மாண்பு விதந்து கூறப்படுவது காண்க.

"ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேட்சென்றார், வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு[4]" என்று **திருவள்ளுவர்** குறிப்பது ஒப்புநோக்கத் தகுவது. இடையே யாண்டும் நில்லாது போதலே செயற்பாற் றென்பதாம். "வேந்து விடு தொழிலொடு செல்லினும், சேந்துவர லறியாது செம்மல் தேரே[5]" என்றார் பிறரும். "வினைவயிற் பிரிந் தோன் மீண்டுவரு காலை, இடைச்சுர மருங்கில் தவிர்குதல் இல்லை, உள்ளம் போல உற்றுழி யுதவும், புள்ளியல் கலிமா உடைமை யான[6]" என்பது **தொல்காப்பியம்**. (உ)

1. குறள். 87 2. நற். 142. 3. ஷை. 374.
4. குறள். 1269. 5. குறுந். 242. 6. தொல். பொ. 194.

483. ஆறுவனப் பெய்த வலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்னுறக் கடவுமதி பாக
நன்னுத லரிவை தன்னலம் பெறவே.

இதுவுமது.

உரை: பாக, யாம் செல்லும் நெறி அழகுறுமாறு மலர்கள் மலர்ந்து பரவின: வேந்தனும் வினைமுற்றி மீண்டனன்: தேரிற் பூட்டிய மாவும் விரைந்து செல்லுவவாயின: ஆகலின், நல்ல நெற்றியினை யுடைய அரிவை தனது நலமுற்றும் பெறுதற்பொருட்டுத் தேரை முற்படச் செலுத்துவாயாக எ.று.

தேர் விரைந்து இனிது செல்லுதற்கு வழியருமை இடையீடு செய்யும் என்பது பற்றி, ஆறு வனப்பு எய்தவும் தேர் இனிது செல்லவும், **அலர்தாயின** என்றார்; எனவே, தலைமகட்குக் குறித்த காலவரவும் காட்டியவாறாயிற்று; "நன்கலம் களிற்றொடு நண்ணா ரேந்தி, வந்து திறை கொடுத்து வணங்கினர் வழிமொழிந்து, சென்றீ கென்ப வாயின் வேந்தனும், நிலம்வகுத் துறாஅ ஈண்டிய தானை யொடு, இன்றே புகுதல் வாய்வது நன்றே[1]" என்று பிறரும் கூறுதல் காண்க. வினைமேற் சென்ற விலங்குகள் மனைக்குரிய மீளும் நெறியில் நிறுத்தியவழிப் பாகர் செலுத்த வேண்டாதே விரைந்து செல்லுமாகலின், **மா விரைந்தனவே** என எடுத்தோதுவா ராயினர்.

நெறியும் பிரிந்துழிப் போலன்றி மலர் பரந்து வனப்பிற் றாகலினும், விரைய வராது தாழ்த்தமைக்கு ஏதுவாகிய வேந்தன் வினைமுற்றினமையாலும், இனித் தகைப்பன இல்லை யென்பான், **முன்னுறக் கடவுமதி** என்றான்.

---

1. அகம். 124.

"வேந்தனும் வெம்பகை தணிந்தனன் தீம்பெயற், காரும் ஆர்கலி தலைஇயின்று தேரும், ஓவத் தன்ன கோபச் செந் நிலம் வள்வா யாழி யுள்ளுறு புருளக், கடவுக காண் குவம் பாக [1]" என்றார் பிறரும். நலனிழந்து மெலிந்தனள் எனப் பாணர் போந்து தூது கூறக் கேட்டுளா னாகலின், **நன்னுதல் அரிவை தன்னலம் பெற** என்றான். "தண்பதக் காலை, வரினும் வாரா ராயினும் ஆண்டு அவர்க்கு, இனிது கொல் வாழி தோழி எனத் தன், பல்லிதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப, அருந்துய ருடையள் இவளென விரும் பிப் பாணன் வந்தனன் தூதே [2]" எனத் தலைவன் கூறுதல் காண்க. (௩)

484. *வேனி னீங்கக் கார்மழை தலைஇக்*
காடுகவின் கொண்டன்று பொழுதே பாடுசிறந்து
கடியக் கடவுமதி பாக
நெடிய நீடினம் நேரிழை மறந்தே.

இதுவுமது.

உரை: பாகனே, வேனிற் பருவத்து வெம்மை நீங்கக் கார்ப்பருவம் போந்து காலமழையினைப் பெய்தலால் காடு அழகுகொள்வ தாயிற்று: ஆதலால், நேரிய இழையினை யுடைய காதலியை மறந்து, நெடிது தாழ்த்தன மாகலின், தேரின் பெருமை சிறக்க விரையச் செலுத்துக எ. று.

முதலொடு கருவுக்கும் ஒற்றுமை யுண்மையின், வினை முதல் வினையே யாயிற்று. செய்தெனெச்சம் காரணப் பொருட்டு. **சிறக்க** என்பது திரிந்து நின்றது. **பாடு,** பெருமை; "பாடு ஊன்றும் களிறு [3]" என்றாற் போல; போரிடை யுழந்தும், விரைந்த செலவால் கட்டு நெகிழ்ந்து வலிகெடாமை தேர்க்குப் பாடு என அறிக. **பாடு,** ஒலியு மாம். **கடிய,** விரைவுப் பொருட்டாய கடியென்னும் உரிச்

1. அகம். 54. 2. ஷை. 244. 3. குறள். 597.

சொல் அடியாகப் பிறந்த வினையெச்சம். வினைக்குரிய சூழ்ச்சி நிலவிய தலைவன் உள்ளத்தில், வினைமுடிந்தமையால் வீற்றிருத்தற் குரிய தலைவியது நேரிய இழையணிந்த திருவுருவம் நின்று காட்சி வழங்குதலின், **நேரிழை** என்று ஒழிந்தார்.

வேனில் நீங்கும் கார்ப்பருவ வரவில், வருவல் எனக் குறித்துச் சென்ற தான், அது வந்தெய்தியவழியும், வினைமுடியாமையான் தாழ்த்துச் செல்வதுபற்றிக் **காடு கவின் கொண்டன்று பொழுது** என்றும், கார்ப்பருவத் தொடக்கத்தே வரற்பாலோன், அது கொண்டபின் வருதலின், **நெடிய நீடினம் நேரிழை மறந்தே** என்றும், வரவு தாழ்த்தமையான் ஆற்றுது வருந்துவாட்குத் தேரினது ஒலி கேட்பின் அஃது அவ் வாற்றுமை தீரும் வாயிலாம் என்பான், **பாடு சிறந்து** என்றும் கூறினுன். (௪)

485. அரும்பட ரவல மவளுந் தீரப்
பெருந்தோ ணலம்வர யாமு முயங்க
ஏமதி வலவ தேரே
மாமருண் டுகளு மலர்ணிப் புறவே.

இதுவுமது.

உரை : பாக, பொறுத்தற் கரிய வருத்தத்தால் எய்தும் அவலத்தினை அவளும் நீங்க, அவளுடைய பெரிய தோள்கள் இழந்த நலம் மீண்டும் எய்தும் வகை யாமும் முயங்க, விலங்கினம் மருட்சி யுற்றுத் திரியும் மலர்களால் அழகு பெற்ற முல்லைக்காட்டில் தேரைச் செலுத்துக எ. று.

அரும்படர், பொறுத்தற் கரிய பிரிவுத்துன்பம்; அவலம் அது காரணமாகப் பிறக்கும் மென்மை; "அரும்படர் அவலநோய் ஆற்றுவ ளென்னுது[1]" என்றவிடத்து,

1. கலி. 28.

அரிய நினைவையுடைய அவலத்தைச் செய்யும் காம நோய்" என்பர் **நச்சினார்க்கினியர்.** தோளுக்குப் பெருத் திருத்தல் நலமாதல் பற்றி, **பெருந்தோள் நலம்வர** என்றார். புல்லும் இலையும் நீருமாகிய உணவு மிகப்பெற்றுப் பசிதீர உண்டு மகிழ்ச்சியால் மைந்துற்றுத் துள்ளித் திரியும் விலங்கின் செய்தியை **மா மருண்டு உகளும்** எனச் சிறப் பித்துரைத்தார்.

செலுத்தியவழித் தான் அவளுடைய கூட்டம் எய்து தலின், அவள் அவலம் தீருமாறும், தோள்கள் நலம் பெறுமாறும் ஒருதலையாதல் நோக்கி, **ஏமதி வலவ தேரே** என்றான். கார்ப்பெயலால், உணவும் நீரும் தேடித் திரியும் வருத்தமின்றி மாவினம் தாம் விரும்பிய புலம் சென்று விரும்பிய பிணையொடு கூடி மயங்குதலின், **மா மருண்டு உகளும்** என்றான். **அவலம்,** கண்டார்க்கு இரக்க முண்டாம்வகை மேனி மெலிந்து காட்டும் நிலையாதலால் அது தன்கண் தோன்றிய இளிவரல் பற்றிப் பிறந்தமை யின், **அரும்படர் அவலம்** என்றான். (௬)

486. *பெரும்புன் மாலை யானது நினைஇ*
அரும்பட ருழத்தல் யாவ தென்றும்
புல்லி யாற்றாப் புரையோட் காண
வள்புதெரிந் தூர்மதி வலவநின்
புள்ளியற் கலிமாப் பூண்ட தேரே.

இதுவுமது.

உரை : நெடிய கழியும் புல்லிய மாலைக்கண் இடை யறுது நினைந்து பொறுத்தற் கரிய துயருழத்தல் வேண்டா; நாடோறும் முயங்கிய வழியும் பிரிவு ஆற்றாமைக் கேது வாகிய பேரின்பத்தை நல்கும் காதலியைக் காண்டற்கு, பாகனே, நின் பறவைபோலும் நிலம் தீண்டாத செலவினை யுடைய கலித்த குதிரை பூட்டிய தேரை வார்களின் வகை யினைத் தேர்ந்து செலுத்துக எ. று.

மாலைப்போது எய்துந்தோறும் காதலரைப் பிரிந்து உறைவோர்க்கு நெடிதாய்த் துன்புறுத்தும் இயல்புடைமைபற்றிப் **பெரும்புன்மாலை** எனப்பட்டது. "அருஞ்சுரம் நீந்திய வருத்தமொடு கையற்றுப் பெரும்புன் மாலை புலம்பு வந் துறுதர [1]" எனப் பிரிந்தேகும் தலைமகனும், "எல்லை பைபயக் கழிப்பி முல்லை அரும்புவாய் அவிழும் பெரும் புன் மாலை [2]" எனப் பிரிந்துறையும் தலைமகளும் குறித்தல் காண்க. **பெருமை**, ஈண்டு நெடுமை மேற்று. அயரா நினைவு என்பது தோன்ற **ஆனாது நினைஇ** என்றார். **யாவது**, ஈண்டுப் பயனின்மை குறித்து நின்றது. **புல்லி**, என்புழிச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. **ஆற்றுப் புரையோள்**, ஆற்றுமைக் கேதுவாகிய புரையோள். **புரை**, உயர்வு; ஈண்டு, "புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்" பெருகுதல். **வள்பு**, குதிரையைச் செலுத்தும் விசை வார்.

பெரிதும் இன்பம் தருதற் குரிய பொழு தாயினும், காதலரை இன்மையின், புல்லென்று தோன்றுதலின், **பெரும்புன் மாலை** என்றும், செறியுந்தோறும் பேரின்பம் பிறத்தலால் ஆராமையும், அதனால் ஆற்றுமையும் நிகழ்தல் பற்றிப் **புல்லி ஆற்று** என்றும், நவில்தொறும் நூல் நயம் போலப் பயில்தொறும் இன்பம் தரும் பண்புடைமையின், **புரையோள்** என்றும் கூறினான். வினைமுற்றி மீள்கின்றான், தலைமகளைக் காண்டற்கு எழுந்த பெருவிதுப்பினால் **காண** என்றவன், விரைந்து செல்வதே பொருளாகப் பாகனை முடுகுதலால், **வள்பு தெரிந்து ஊர்மதி** என்றும், தெரிந்து இயக்கியவழிக் குதிரை விரைந்து செல்லும் இயல்பின என்பதைப் **புள்ளியற் கலிமா** என்றும் கூறினான். "வயக்குறு கொடிஞ்சி பொலிய வள்பு ஆய்ந்து, இயக்குமதி வாழியோ கையுடை வலவ [3]" எனப் பிறரும் கூறுதல் காண்க.

(சு)

1. அகம். 373. 2. நற். 369. 3. அகம். 344

*487. இதுமற் பிரிந்தோ ருள்ளும் பொழுதே
செறிதொடி யுள்ள முவப்ப
மதியுடை வலவ வேமதி தேரே.*

இதுவுமது.

உரை: காதலரைப் பிரிந்தோர் அவரை நினைந்து வருந் தும் பொழுது இதுவாகலின், அறிவுடைய பாகனே, செறிந்த தொடியினையுடையாள் தன் நெஞ்சம் உவக்கு மாறு தேரைச் செலுத்துவாயாக எ. று.

இப்பொழுதின்கண் பிரியப்பட்டாரிடம் சென்று எய்தாவிடின், அவர் பிரிவாற்றாது இறந்துபடுவ ரென்பது ஒழிய நின்றமையின், **மன்**, ஒழியிசை. "காதலர்ப் பிரிந் தோர் புலம்பப் பெயல்கனைந்து, கூதிர் நின்றன்றால் பொழுதே [1]" என்றார் பிறரும்.

செறிதொடி, அன்மொழித்தொகை. உள்ளிய ஒன்று உள்ளிய அப்பொழுதிலே எய்தப்பெறின் உள்ளியார் உள்ளம் கழிபேர் உவகை எய்துவது ஒருதலை யாதலின், **உள்ளம் உவப்ப** என்றார். உள்ளிய பொருள் எய்துதலின், **உவப்ப** என்றான். **மதியுடை வலவ** என்றான், அவன் குதிரைகளின், ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியையும், கந்தும், மறமும் முதலிய இயல்புகளையும், வண்ணம், தோற்றம், சுழிநிலை, உறுப்பியல் முதலிய இலக்கணங் களையும் முற்றவும் கற்றுத் துறைபோகியோ னாதலின். "நப்புலந் துறையும் எவ்வம் நீங்க, நூலறி வலவ கடவுமதி [2]" என்றும், "நூல் நவின்ற பாக நொவ்விதாச் சென்றீக [3]" என்றும் பிறரும் கூறுப. (எ)

---

1. நெடு. 71-2. 2. அகம். 144. 3. ஐந்திணையைம். 10.

488. கருவி வானம் பெயல் தொடங் கின்றே
பெருவிறற் காதலி கருதும் பொழுதே
விரியுளை நன்மாப் பூட்டிப்
பருவரல் தீரக் கடவுமதி தேரே

இதுவுமது.

உரை : தொகுதியையுடைய மேகம் மழை பெய்தலைத் தொடங்கிற்று; பெருமை சிறந்த காதலியாவாள் நம்மை நினைந்து வருந்தும் பொழுதும் இதுவாகலின், அவள் அவ்வருத்தம் நீங்குமாறு விரிந்த தலையாட்டம் அணிந்த நல்ல குதிரைகளைப் பூட்டித் தேரைச் செலுத்துவாயாக. எ. று.

கருவி, தொகுதி. **பெருவிறல்**, பெரிய திண்மையமைந்த கற்பின் மேற்று. கருதியவழி எய்தும் துன்பத்தைப் பருவரல் எனப் பின்னர்க் குறித்தலின், **கருதும்**, எனக் குறித்தொழிந்தார். கடவுவதன் பயன் காதலி தன் பருவரல் தீர்தல் என்பது தோன்ற, **பருவரல் தீர** என்றார். **மதி**, முன்னிலையசை. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. சுட்டு வருவிக்கப்பட்டது.

தான் வற்புறுத்துச் சென்ற பருவம் எய்திற்றாகலானும், அது நோக்கி அவள் ஆற்றியிருந்து வருந்துதலானும், **கருதும் பொழுது** என்றும், **பருவரல் தீர** என்றும் தன் சொல் தேறி ஆற்றியிருந்த வன்மை தோன்ற, **பெருவிறல்** என்றும் கூறினன். **உளை**, பிடரிமயிர் என்றும் உரைப்ப. "விரியுளை நன்மா கடைஇப், பரியாது வருவர்[1]" என்றும், "விரியுளைப் பொலிந்த வீங்குசெலற் கலிமா[2]" என்றும் பிறரும் கூறினர். (அ)

1. நற். 367. 2. ஷை. 121.

489. அஞ்சிறை வண்டி னரியின மொய்ப்ப
மென்புல முல்லை மலரு மாலைப்
பையு ணெஞ்சிற் றைய லுவப்ப
நுண்புரி வண்கயி றியக்கினின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே

இதுவுமது.

உரை: பாகனே, அழகிய சிறகுகளை யுடைய வண்டின் அழகிய கூட்டம் சூழ்ந்து ஒலிக்க, மென்புலங்களில் வளரும் முல்லைகள் மலரும் மாலைப்பொழுதின்கண், வருத்த முற்ற நெஞ்சினையுடைய தையலாவாள் நம் வரவு கண்டு மகிழும் வண்ணம், நுண்ணிய புரிகளையுடைய வளவிய கயிற்றினை இயக்கி, நின்னுடைய வளவிய குதிரைகள் பூட்டிய நெடிய தேரினை விரையச் செலுத்துக எ. று.

அரியினம், வண்டின் கூட்டம். "அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்[1]" என்றார் பிறரும். **வளன்,** விரைந்த செலவால் குளம்பு இடையூறு எய்தாவகைக் கால் காப்புடைமை; "கட்டளைப் புரவி சூழ்ந்து கால்புடை காப்ப ஏவி[2]" என்பதனாலும் அறிக. கதி, சாரி, பொருமுரணாற்றல் முதலியவற்றை **வளன்** என்றார் என்றுமாம்.

மாலையம் பொழுது கண்டு ஆற்றாது வருந்துகின்றாள் என்பான், **பையுள் நெஞ்சின்** என்றும், விரைந்து சென்ற வழி எய்தும் கூட்டத்தை இன்றியமையாள் என்பான் அதற்கு அவள் செய்துகொள்ளும் ஒப்பனையை விதந்து, **தையல்** என்றும் கூறினான். **வண்கயிறு இயக்கிக் கடவுமதி** என்றான், வண்பரி நெடுந்தேராகலின். "வலவன் வள்பு வலித்து ஊரினல்லது முள்ளுறின், முந்நீர் மண்டிலம் ஆதியாற்றா நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்[3]" என்றார் பிறரும். (௯)

---

1. முருகு. 76. 2. சீவக. 767. 3. அகம். 104.

490\. அந்தீங் கிளவி தான்றர வெம்வயின்
வந்தன்று மாதோ காரே யாவயின்
ஆய்தொடி யரும்படர் தீர
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.[1]

இதுவுமது.

உரை : அழகிய இனிய சொற்களையுடைய காதலியை நாம் எய்துதற்பொருட்டுக் கார்ப்பருவம் இப்போது இங்கே வந்தது; அவ்விடத்தே ஆய்ந்தணிந்த தொடியையுடைய அவள் எய்தி வருந்தும் அரிய நோய் நீங்குமாறு தெளிந்த மணி கட்டிய நெடிய தேரை விரையச் செலுத்துவாயாக எ. று.

அந்தீங்கிளவி, ஆய்தொடி என்பன தலைமகளைக் குறித்து நின்றன. தருதல், ஈண்டு எய்துவித்தல்; அஃதாவது, இதுகாறும் மேற்கொண்டிருந்த வினையையே நினைந்திருந்த உள்ளம் அது முடியவும் மறந்திருந்த தலைமகளை நினைப்பித்தல். கார், அந்தீங்கிளவியை எம்வயின் தர வந்தன்று என இயைக்க. மாதும் ஓவும் அசை. **ஆய்தொடி,** சுட்டுப்பெயர் மாத்திரையாய் வந்தது. **படர்,** பிரிவின்கண் பெருகி நிற்கும் காமநோய். கார் வந்தன்று, இனி ஈண்டு நீடுதல் நன்றன்றாகலின், தேரைக் கடவுமதி என முடிக்க.

கார்ப்பருவ வரவில் வருகுவல் எனக் கூறிப் போந்த தன் சொல்லைத்தேறியிருக்கும் தலைமகள், கார் தோன்றக் கண்டதும், "வருங்கொல் தோழி நம் இன்னுயிர்த் துணை யென[2]" இனிய சொற்களால் தன் வரவு நோக்கி நிற்பள்

1\. அச்சுப்பிரதியில் இப்பாட்டு இடையில் சிதைந்துள்ளது; சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் கைப்பிரதியில் கண்டவாறே இங்கு மேற்கொள்ளப்பட்டது.

2\. அகம். 224.

என்பது நினைந்து பாகற்குக் கூறுகின்றானாகலின், **அந்தீங் கிளவி** என அவள் சொற்களைச் சிறப்பித்தும், அவளால் நோக்கப்படும் கார்முகில், அவளை நினைப்பித்து விரைந்து சென்று அவளை எய்துமாறு அவன் உள்ளத்தைத் துரத்துதலின், **வந்தன்று மாதோ காரே** என்றும், இனி விரைந்து சென்று அவளை எய்துதலன்றிச் செய்வது பிறிதில்லை என்பான், **நெடுந்தேர் கடவுமதி விரைந்து** என்றும் கூறினான். கார்வரவு காணின் அவட்கு உளதாகிய வருத்தம் பொறுத்தற் கரிதாம் என்றற்கு **அரும்படர்** என்றும், தேர் சென்று சேருமுன் நம் வரவைத் தேரின் மணியோசை சென்று இசைக்கவேண்டும் என்றற்கு **ஆய்மணி நெடுந்தேர்** என்றும் சிறப்பித்தான். "வல்லே கழலொலி நாவின் தெண்மணி கறங்க, நிழலொளிப் பன்ன நிமிர்பரிப் புரவி வயக்குறு கொடிஞ்சி பொலிய் வள்பாய்ந்து, இயக்குமதி வாழியோ, கையுடை வலவ[3]" என்று பிறரும் கூறுதல் காண்க. (௰)

---

3. அக. 344.

50. வரவுச்சிறப்புரைத்த பத்து.

இது வினைவயிற் பிரிந்த தலைமகன் மீண்டு போந்த விடத்து, அவன் தலைவிக்காதல், அவன் வரவு கண்ட தோழி தலைமகட்காதல், தோழி அவனுக்காதல் நிகழ்த்தும் கூற்றுக்களால், அவன் வரவான் உளதாய சிறப்புத் தோன்றப் பாடிய பாட்டுக்களின் தொகுதி யாகலின், இப் பெயர்த்தாயிற்று.

491. காரதிர் காலையா மோவின்று நலிய
நொந்துநொந் துயவு முள்ளமொடு
வந்தனெம் மடந்தைநின் னேர்தர விரைந்தே.

இது, வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைவிக்குச் சொல்லியது.

உரை: மடந்தையே, கார்முகில் திரண்டு முழங்கும் கார்ப்பருவம் போந்து இடையீடின்றி வருத்துதலால் நோய் மிக்கு உழலும் நெஞ்சமொடு நின்னுடைய அழகு துணைசெய்ய யாம் விரைந்து போந்தேம், காண் எ. று.

காரதிர் காலை, கார் முகில் திரண்டு எழுந்து முழங்கி மழைபெய்யும் **கார்ப்பருவம். ஓவுதல்**, இடைவிடுதல். "இன்றி யென்னும் வினையெச்சம், செய்யுளாகலின், இன்று[1]" என வந்தது. **அடுக்கு**, மிகுதிப்பொருட்டு. உயவுதல், வருந்துதல். **மடந்தை**, ஈண்டுப் பருவமுணர்த் தாது பெண்பாற்பெயராய் நின்றது.

அது தான் குறித்த பருவமாதலாலும், அது தொடங்கிய பொழுதின்கண் வினை முற்றுமையாலும் பெரிதும் வருந்தினேன் என்பான், **ஓவின்று நலிய** என்றும், பருவ

1. தொல். எழுத். 237.

வரவிற்கும், வினை முற்றுமைக்கும் இடையிற் கிடந்து அல மருதலின், **நொந்து நொந்து உயவும் உள்ளமொடு** என்றும், இவ்வாற்றுல் ஆற்றுது வருவேனை, மாவும் புள்ளும் மலரும் நின் அழகு தோற்றுவித்து ஆற்றுவித்தன என்றற்கு, **நின் ஏர்தர** என்றும், நெஞ்சினை யுளப்படுத்துக் கூறலின் **வந்தனெம்** என்றும் கூறினான். (க)

492. நின்னே போலு மஞ்ஞை யாலநின்
நன்னுத னாறு முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே யுள்ளி வந்தனென்
நன்னுத லரிவை காரினும் விரைந்தே.

இதுவுமது.

உரை: நல்ல நெற்றியினையுடைய அரிவையே, நின்னை ஒக்கும் மயில்கள் ஆலுதலாலும், நின் நல்ல நெற்றியின் மணம் கமழும் முல்லைகள் மலர்தலாலும், நின்னைப் போலும் மான்கள் மருண்டு நோக்குதலாலும் வானில் எழுந்த மேகத்தினும் விரைய யான் நின்னை நினைந்து போந் தேன் எ. று.

ஆலுதல், ஈண்டு உவமம் அன்று. மான்களின் விழிச் சுழற்சி மருண்டு நோக்குதல் போறலின், **மருண்டு நோக்க** என்றார்; மருண்ட நோக்கம் எனச் சிறப்பித்தலின், மா வென்னும் பலபொருள் ஒருசொல் மானினத்துக்காயிற்று. *மஞ்ஞை சாயலுக்கும், முல்லை நுதல் மணத்துக்கும், மான், மருண்ட நோக்கத்துக்கும் உவமம். ஏகாரங்கள்* தேற்றம் எனினுமாம். இன், உறழ்ச்சி. முல்லைப் பூவின் மணம் மகளிர் நுதற்கண் கமழ்தல், "பூத்த முல்லைப் பசு முகைத் தாது நாறும் நறுநுதல் அரிவை[1]" என்றார் பிறரும்.

1. குறுந். 323.

ஒருபால் மயிலும் ஒருபால் முல்லையும் ஒருபால் மானினமும் தலைமகளின் சாயல் முதலியவற்றைக் காட்டி அவளை நினைப்பித்தலின், காண்டல் வேட்கை மீதூர **நின்னே உள்ளி வந்தனென்** என்றும், அவன் வரவு கண்ட உவகையால் நுதல் ஒளி சிறந்து விளங்குதல் பற்றித் தலைவியை **நன்னுதல் அரிவை** என்றும், கார்ப்பருவத் தொடக்கத்தே வருகின்றானாகலின், **காரினும் விரைந்து** என்றும் கூறினான். (உ)

493. *ஏறுமுரண் சிறப்ப வேறெதி ரிரங்க*
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே காலை
நேரிறை முன்கைநின் னுள்ளியாம் வரவே.

இதுவுமது.

உரை: நேரிய தொடியணிந்த முன்கையினை யுடையாய், யாம் நின்னை நினைந்து வருமிடத்து ஆமாவின் நல் லேறுகள் மாறுபாடு மிக்குச் சிலைக்க, அவற்றிற் கெதிராக விசும்பில் இடியேறு முழங்க, காதலையுடைய பெண் மான்கள் தம் கன்றோடு மயங்கித் திரியக் கார்ப்பருவம் தொடங்குவதாயிற்று எ. று.

ஏறு, முன்னது ஆனேறும் பின்னது இடியேறுமாம். ஆனேறு என்றது ஈண்டைக்குச் சிறப்புடைய காடுறையும் ஆமாவின் ஏறெனக் கொள்க, "ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று இழுமென இழிதரும் அருவி [1]" என்றும், "விசும்பின் ஏறெழுந்து முழங்கினும் மாறெழுந்து சிலைக்கும், கடாஅ யானை [2]" என்றும், பிறரும் கூறுவது காண்க. இரங்குதல், முழங்குதல்.

---

1. முருகு. 315-6. 2. அகம். 144.

இடியொலி கேட்டு அச்சுற்ற ஏற்றினம் குளிர் மிகுதியால் முரண் மிக்குச் சிலைத்தலின், **ஏறு முரண் சிறப்ப** என்றார். "வானேறு வானத் துரற வயமுரண், ஆனேற் றெருத்தல் அதனோடு எதிர்செறுப்ப[1]" என்றார் பிறரும். மறியாகிய கன்றுகளைப் பிரியாது உகளுதலின், **மாதர் மான்பிணை** என்றார்.

பண்டு பிரிந்த காலத்துக் கார்ப்பருவ வரவில் வருகுவல் என வற்புறுத்திச் சென்றானாகலான், தன் வரவும் கார்வரவும் ஒப்ப நிகழும் நிகழ்ச்சியால் தான் சொல்லிய சொல் தவறாது வந்தமை யுணர்த்தித் தலைமகளை மகிழ்வித்தல் தலைவன் கருத்தாகலின், **கார் தொடங்கின்றே காலை** என்றான். கார்தோன்று முன்பே தான் வினை முடித்துத் தலைமகளை நினைந்து போந்தமை வற்புறுத்தற்கு நின் உள்ளி யாம் வரவே காலை கார் தொடங்குவதாயிற்று என்றாம். **யாம் வரக் கார்தொடங்கின்று** என்றது தான் கார்ப்பருவம் தொடங்குவதன் முன்பே மீண்டு போந்தமை கூறியவாறு. (௩)

494, வண்டுதா தூதத் தேரை தெவிட்டத்
தண்கமழ் புறவின் முல்லை மலர
இன்புறுத் தன்று பொழுதே
நின்குறி வாய்த்தனந் தீர்கிளிப் படரே.

இதுவுமது.

உரை : வண்டுகள் தேனுண்டு பாடவும், தேரைகள் ஒலித்தலைச் செய்யவும், தண்ணிதாய் மணம் கமழும் காட்டில் முல்லைகள் மலரவும், இக் கார்காலத்து மாலைப்போது இன்பம் செய்வதாயிற் றாகலானும், நீ குறித்தவாறே யாம் தப்பாமல் வந்தெய்தினமையானும் இனி வருந்துதலை ஒழிக எ. று.

---

1. கார். 10.

வண்டு பாடுதலும், தேரை தெவிட்டுதலும், முல்லை மலர்தலும் கூடினாரை இன்புறுத்துவ வாயினும், பொழுதின் மேல் வைத்துக் கூறியது, நிகழ்ச்சிக் களனும் இவை புண்மை பற்றி யென்க, காலமும் இடமாம் குறிப்பினை யுடைத் தாகலின்; "வினைசெய் யிடத்தின் நிலத்தின் காலத்தின், அனைவகைக் குறிப்பின் தோன்று மதுவே[1]" என்று ஆசிரியர் விதித்தமை உணர்க.

வினைமுற்றி மீண்ட தலைமகன் தலைவியொடு கூடி இருக்கையில் மாலைப்போது, வண்டின் இசையும், தேரை ஒலியும், மலர்ந்த முல்லையின் நறுமணமும் கொண்டு விளங்குவது கண்டு உள்ளம் காதல் சிறப்பது உணர்ந்து உரையாடுகின்றானாகலின், **இன்புறுத்தன்று பொழுதே** என்றான். தலைவன் பிரிவின்கண் மாலைப்போது தன் உள்ளத்தில் காமம் மிக்க கழிபடர் விளைத்துத் துன்புறுத்தினமை நினைந்து தலைமகள் நுதலொளி வேறுபட்டாளாக, தான் அவள் குறித்த கார்ப்பருவ வரவில் வாராது சொல் வேறுபட்டதாக நினைந்து வருந்துகின்றாள் போலும் எனக்கருதி அவ் வேறுபாடு நீக்குகின்றானாகலின், **நின் குறி வாய்த்தனம்** என்றும், **தீர்க இனிப் படரே** என்றும் கூறினான். (௪)

495\. *சென்னில மருங்கிற் பன்மலர் தாஅய்ப்*
புலம்புதீர்ந் தினிய வாயின புறவே
பின்னிருங் கூந்த னன்னலம் புனைய
உள்ளுதொறுங் கவிழு நெஞ்சமொடு
முள்ளெயிற் றரிவையாம் வந்த மாறே.

இதுவுமது.

1\. தொல். சொல். 81.

உரை: முள்போற் கூரிய பற்களையுடையாய், யாம் பிரிந்து சென்ற நிலத்திடத்தே காடுகள் பலவாய மலர்கள் பரந்து விளங்கினமையால், அவற்றைப் பின்ன லிடுதற் குரிய கரிய நின் கூந்தல் நல்ல அழகுறப் புனைதற்கு, நினைக்குந் தோறும் தனிமை வருத்த வருந்திய மனத்தோடு யாம் வந்த மையால், அவை அத் தனிமை நீக்கி இனிமை செய்வன வாயின எ. று.

புலம்பு தீர்ந்து இனிய வாயின புறவே என்றதனுல், பிரிந்தவழி அவை புலம்புதந்து வருத்தினமை பெற்றும். புறவு, தாஅய் வருத்தக் கலிழும் நெஞ்சமொடு வந்தமாறு தீர்ந்து இனிய என்று இயைக்க. இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது. தீர்தல், தீர்த்தற் பொருட்டு. **மாறு,** மூன்ருவதன் பொருட்டாயதோர் இடைச்சொல்.

